# புதிய ஜனநாயகம்



யாருடைய இந்தியா ஒளிர்கிறது?




## 'சேரி'க்கு இழிவைத் தேடித்தரும் 'தலித்' தலைவர்கள்

படிப்பகம்

www.padippakam.com

# "தலித் விடுதலை, மக்களின் விடுதலையிலிருந்து வேறுபட்டதா?"

## — ஆனந்த் தெல்தும்ப்டே

**"தலித் விடுதலை: திசை வழியும் விலகல்களும்"** *எனும் தலைப்பில் கருத்தரங்கமொன்று 22.2.04 அன்று காலையில் தஞ்சையில் நடத்தப்பட்டது. ம.க.இ.க. மாநில இணைச் செயலர் தோழர் காளியப்பன் தலைமையில் இக்கருத்தரங்கு நடந்தது. "அம்பேத்கருக்குப் பிந்தைய தலித் இயக்கங்கள்", "முசுலீம்கள் குறித்து அம்பேத்கர்" ஆகிய நூல்களின் ஆசிரியர் முனைவர் ஆனந்த் தெல்தும்ப்டே இப்பொருள் குறித்து உரையாற்றினார்.*

*"தலித் விடுதலை மக்களின் விடுதலையில் இருந்து வேறுபட்டதா?" என்ற கேள்வியை மையப்படுத்தி உரையாற்றிய ஆனந்த் தெல்தும்ப்டே, "இதனைப் புரிந்து கொள்ள, 'தலித் என்றால் என்ன?' 'விடுதலை என்றால் என்ன?' என்ற கேள்விகளை எழுப்ப வேண்டும்; இவை மிகவும் அடிப்படையான கேள்விகள். இந்தக் கேள்விகள் தலித் இயக்கங்களில் எழுப்பப்படுவதில்லை" என்றார். அவர் ஆற்றிய உரையின் சுருக்கமான தொகுப்பு இது:*

**த**லித் என்ற சொல்லுக்கு கறாரான வரையறை எதுவும் கிடையாது. அது ஒரு தொளதொளப்பான சொல்லாடல். தலித் என்றால் தீண்டத்தகாதவர்கள், ஒடுக்கப்பட்டவர்கள் எனப் பொதுவாக பொருள் கொள்ளப்படுகிறது.

இந்த வரையறை போதுமானதா? ஏனென்றால், நான்கு வருணத்திற்கு வெளியே உள்ள பஞ்சமர்களிலும் உட்சாதிகள் உண்டு. இச்சாதிகளுக்குள்ளேயும் தீண்டாமை உண்டு. இதனால், இந்த இயக்கங்களில் "தலித்" என்பதாக எதுவும் கிடையாது.

இந்த இயக்கங்கள் இந்த உட்சாதிகள் அனைத்தையும் ஒரே அமைப்பாகக் கட்ட முயற்சிக்கின்றன. அம்பேத்கர் மகாராஷ்டிராவில் மகர் சாதியை ஒருங்கிணைப்பதில் வெற்றி பெற்றார். ஆனால், தேர்தல் வந்தவுடன் உட்சாதிகள் முன்னுக்கு வந்துவிடுகின்றன. அம்பேத்கர் கூட இதனை எதிர்கொள்ள வேண்டி வந்தது.

மகாராஷ்டிராவை எடுத்துக் கொள்ளுங்கள். அம்பேத்கர் தொடங்கிய குடியரசுக் கட்சி, அவர் மறைவுக்குப் பின் பல குழுக்களாகப் பிளவுபட்டுப் போய்விட்டது. அம்பேத்கர் பிறந்த மகர் சாதியிலும் கூட உட்பிரிவுகள் உண்டு.

"தலித்" இயக்கங்களின் மையம் எனக் கருதப்படும் நாக்பூரில், 1998-ஆம் ஆண்டு, மகர் சாதியைச் சேர்ந்த ஒரு உட்சாதி, "நாங்கள் மகர் சாதியில் உள்ள மற்ற பிரிவுகளிடமிருந்து வேறுபட்டவர்கள்" என வெளிப்படையாக அறிவித்தது.

சாதி இருப்பது உண்மை; வலிமையான தலித் இயக்கம் வேண்டும் என்பதும் உண்மை. ஆனால், சாதி சான்றிதழ் பெற்ற சாதி அரசியல் எங்கு கொண்டு செல்லும்? இந்த அடையாள அரசியல் எதை அளித்திருக்கிறது என்பதைப் புரிந்து கொண்டு மேலே செல்ல வேண்டும்.

•••

**வி**டுதலை என்றால் என்ன? போதுமான உணவும், உடையும், உத்தரவாதமான வாழ்க்கையும் கிடைப்பதை - இந்தச் சட்டக் கருத்தியலை விடுதலை எனக் கொள்ள முடியுமா? விடுதலை குறித்து பல்வேறு விளக்கங்கள் தரப்படுகின்றன. தலித் இயக்கங்களும் விடுதலை பற்றி பலவாறாக புரிந்து கொண்டுள்ளன. இவ்வியக்கங்களின் வளர்ச்சியின் ஊடாகப் பார்க்கும்பொழுது, தலித் விடுதலை சீரழிந்துதான் கிடக்கிறது.

அம்பேத்கர் பார்வையில் தலித் விடுதலை குறித்து தனியான குறிப்புகள் இல்லை. எனினும், தலித் இயக்கங்கள் நடைமுறையில் தலித் விடுதலை என்று எதைச் சொல்லுகிறார்கள்? அதிகாரமிக்க பதவிகள் அடைவதையும், அரசியல் ஆதாயம் அடைவதையும், நம்முடைய ஆள் மேலே இருக்கான் என்பதையும் தலித் விடுதலை என்கிறார்கள். இது, வாழ்க்கையை பற்றிய, மிகவும் பின்தங்கிய இனக்குழு சமுதாயப் பார்வை ஆகும்.

அம்பேத்கர் காலத்தில் கல்வி தேவைப்பட்டது. அதனால் கல்வி குறித்து விரிவாகப் பேசினார். படித்து வந்தவர்கள் கைதூக்கி விடுவார்கள் என எதிர்பார்த்தார். ஆனால், அவர் கண் முன்னாலேயே படித்து வந்தவர்கள் ஏமாற்றினார்கள். இதற்காக தலித்துகளைக் குறை சொல்லவில்லை. சாதி சட்டகத்தின் பரப்பே இவ்வளவுதான்.

குட்டி முதலாளித்துவ சிந்தனை காரணமாக தலித் இயக்கம் சீரழிகிறது. மகாராஷ்டிராவிலுள்ள தாழ்த்தப்பட்டோர் அமைப்புகளின் நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளுங்கள். அவை, வருடாவருடம், திக்ஷா பூமிக்குப் (அம்பேத்கர் புத்த மதத்துக்கு மாறிய இடம்) போய்க் கூடுவதைத் தவிர, வேறு உருப்படியாக எதையும் செய்வதில்லை. அவைகளிடம் போராட்டம் என்பது மருந்துக்குக் கூட கிடையாது.

இந்துத்துவா சக்திகளிடம் கூட்டு வைத்துக் கொள்வதில் என்ன தவறு இருக்கிறது என்று சிலர் கேட்கிறார்கள். மகாராஷ்டிராவில் இப்பொழுது சிவ்சக்தி - பீம்சக்தி (சிவசேனாவும், தலித் இயக்கங்களும் கூட்டுச் சேர்வது; ஜெய் பீம் என்பது மகாராஷ்டிராவில் உள்ள தலித் இயக்கங்களின் முழக்கம்) என்ற முழக்கம் மகாராஷ்டிராவில் கேட்கிறது.

முனைவர் ஆனந்த் தெல்தும்ப்டே.



உலகமயம் தலித்துகளுக்கு சில வாய்ப்புகளைத் திறந்து விட்டுள்ளது. எனவே, அவர்களுடன் கூட்டுச் சேர்வதும் தவறில்லை என்கிறார்கள்.

இந்துத்துவா அமைப்புகள், குஜராத்தில் நடந்த இனப்படுகொலையின்பொழுது

தொடர்ச்சி 27-ஆம் பக்கம்



படிப்பகம்

www.padippakam.com


# புதிய ஜனநாயகம்

*மார்க்சிய — லெனினிய அரசியல் ஏடு*

**தொகுதி: 19**

**இதழ் 5**

**மார்ச் 2004**

**உள்நாடு:**
**தனி இதழ்: ரூ. 5.00**
**ஆண்டு சந்தா: ரூ. 60.00**

**வெளிநாடுகள்**
**(வான் அஞ்சலில்)**
**ஆண்டு சந்தா: US$ 10**

**அட்டை ஓவியம்:**
**முகிலன்**



**படைப்புகள் அனுப்பவும் மற்றும் அனைத்துத் தொடர்புக்கும்**

**புதிய ஜனநாயகம்,**
**110, இரண்டாம் தளம்,**
**63, என்.எஸ்.கே. சாலை,**
**(அ.பெ.எண்: 2355)**
**கோடம்பாக்கம்,**
**சென்னை - 600 024.**


# வாக்காளர்களை மீண்டும் அவமதிக்கும் பொதுத் தேர்தல்கள்

2004 - ஏப்ரல் - மே மாதங்களில் நடக்க இருக்கும் 14-வது நாடாளுமன்ற மக்களவைப் பொதுத்தேர்தல்களுக்கான தயாரிப்புகளை அரசியல் கட்சிகள் தொடங்கியதோ இல்லையோ, நாட்டின் 'ஜனநாயகக் காவலர்'களான அறிவு ஜீவிகள் வழக்கமான தமது வேலையைத் தொடங்கி விடுகின்றனர். நாடாளுமன்ற ஜனநாயக அமைப்பின் மீது மக்கள் பெருமளவு நம்பிக்கை வைத்திருப்பது போலவும்,அதை சீர்குலைக்காத வகையில் கண்ணியம், கடமை, கட்டுப்பாடு தவறாமல் ஓட்டுக் கட்சிகள் நடந்து கொள்ளவேண்டும் என்பதாகவும் உபதேச மழை பொழிகிறார்கள்.

''நாடாளுமன்றம் கலைக்கப்பட்டதும், நிர்வாகத்தைத் தொடரும் இடைக்கால அரசாங்கம், ஆளும் கட்சிக்குச் சாதகமாக தேர்தல் மற்றும் அரசியல் ஆதாயம் தேடும் வகையில் அரசு எந்திரத்தைக் கேடாகப் பயன்படுத்தக் கூடாது. அவ்வாறு நடக்காமல் கண்காணிப்பதோடு, தேர்தல் நடத்தை விதிமுறைகளை அமலாக்குவதற்குப் பொறுப்பேற்கும் தேர்தல் ஆணையம் எத்தரப்புக்கும் சாய்வு இல்லாமல், மோதிக் கொள்ளும் தரப்புகளுக்கு சமமான - நியாயமான வாய்ப்பு அளிக்கும் வகையில் நடந்து கொள்ள வேண்டும்'' என்று கோருகின்றனர்.

மேலும் ''நாட்டின் பொருளாதார வளர்ச்சி போன்ற முக்கியமான விவகாரங்களில் கவனத்தைக் குவிக்கும் அளவுக்கு நம்பிக்கையூட்டுவதாக தேர்தல்கள் இருக்க வேண்டும். நாகரிகமான, பொறுப்பான,மென்மையான வகையில் பிரச்சாரங்களும் வாதங்களும் அமையவேண்டும் என்று மெத்தப் படித்தவர்களும் மரியாதைக்குரிய வாக்காளர்களும் எதிர்பார்க்கின்றனர். நாடாளுமன்ற ஜனநாயக அமைப்பு நீதி - நியாய அடிப்படையிலானது; பிரதிநிதித்துவ அடிப்படையிலானது; அனைத்துத் தரப்புகளின் விருப்பங்களுக்கும் இடமளிக்கக் கூடியது என்ற நம்பிக்கையை ஒரு தேசியத் தேர்தல் உறுதிப்படுத்த முடியும். தனிநபர் குணக்கொலைகள் மற்றும் பிற வகையில் சேற்றை வாரி இறைப்பது போன்ற போட்டிப் பிரச்சாரங்களினால் குழப்பியும் திசை திருப்பியும் வோட்டுக்களைப் பெறுவதற்குப் பதிலாக கருத்துக்கள், கொள்கைகள், இலட்சியங்களை முன்வைத்து தேர்தல்களில் வெற்றி பெற வேண்டியது முக்கியக் கட்சிகளின் பொறுப்பாக இருக்க வேண்டும். உணர்ச்சிகளும், பண பலம் - கிரிமினல் பலம் ஆகியவையும் தோற்று, அறிவுபூர்வமான கருத்துக்களும் அரசியல் கொள்கைகள் - திட்டங்களும் வெற்றிபெற்றால்தான் ஜனநாயகம் நீடித்திருக்க முடியும்'' என்று போதனை செய்கிறார்கள்.

ஆனால், இந்த ''ஜனநாயகக் காவலர்களான'' அறிவு ஜீவிகள் - மெத்தப் படித்தவர்கள், ''மதிப்புக்குரிய'' வாக்காளர்களின் தார்மீக ஒழுக்க போதனைகள், நம்பிக்கைகள் எதிர்பார்ப்புகளுக்கு நேரெதிரான திசையில் தேர்தல் அரசியல் நாளுக்கு நாள் கூடுதலான வேகத்தில் சீரழிந்து வருகிறது. இப்பொழுது தேர்தல் அரசியல் - நாடாளுமன்ற ஜனநாயகத்தின் மாண்பு பற்றிய பேச்சும் எழுத்தும் வாக்காளர்களையே அவமானப்படுத்தும் வேலைதான்.

இடைக்கால அரசாங்கம் என்பதே ஆளும் கட்சிக்காக, அரசு எந்திரத்தைப் பயன்படுத்திக் கொள்வதற்கான ஒரு அவசர ஏற்பாடாக உள்ளது. ஆளும் வர்க்கங்களுக்கும், பன்னாட்டுத் தொழில் நிறுவங்களுக்கும் ஏராளமான சலுகைகளை வாரிவழங்கி விட்டு அதற்கு பிரதிபலனாக கோடிகோடியாக தேர்தல் நிதி திரட்டிக் கொள்கிறார்கள். ஏகாதிபத்திய அரசுகள், உலகவங்கி மற்றும் சர்வதேச நிதி நிறுவனம் (ஐ.எம்.எஃப்) கூட ஓட்டுக் கட்சிகளுக்கு தேர்தல் நிதி கொடுக்கின்றன. தலைமைத் தேர்தல் ஆணையர் உட்பட பல நிலைகளிலும் தமக்கு ஆதரவான அதிகாரிகளை நியமிக்கிறார்கள். அரசு ஊழியர்களில் இருந்து வாக்காளர்கள் வரை பல்வேறு பிரிவு மக்களுக்கும் பலப்பல சலுகைகளை வழங்கும் திட்டங்களையும் இலவசங்களையும் வழங்குகின்றனர். கோடிகோடியாக அதே வரிப்பணத்தை வாரி இறைத்து செய்தி ஊடகங்கள் மூலம் ஆளுங்கட்சி, அரசாங்கம் மற்றும் அதன் அமைச்சர்கள் விளம்பரப்படுத்தப்படுகின்றனர். தேர்தல் தில்லுமுல்லுகள், மோசடிகள், அராஜகங்களுக்கு வசதியாக அரசு இயந்திரம் பயன்படுத்தப்படுகிறது. வாக்காளர் சேர்க்கை, திருத்தம், திடீர் அடையாள சீட்டுகள் வழங்குவது முதல், வாக்குச்சாவடிகளை கைப்பற்றிக் கள்ளஓட்டுப் போடுவது; வாக்கு எண்ணிக்கை மோசடிவரை இது நடக்கிறது. தேர்தல் ஆணையமே இதற்கு உடந்தையாக இருக்கிறது. இதெல்லாம் வாக்காளர்கள் அறிந்தே உள்ளனர்.

www.padippakam.com

பணபலம், அடியாள் குண்டர்படை பலம் மற்றும் சாதி-மத பலம் ஆகியவை தேர்தலுக்குத் தேர்தல் புகுந்து விளையாடுகின்றன. அரசியல்வாதிகள் - போலீசுக்காரர்கள் - கிரிமினல்களின் கூட்டு பற்றி ஆய்வுகள் நடத்தி அந்த நோய் நாடாளுமன்ற ஜனநாயக அமைப்பில் புரையோடிப் போயிருப்பது தெரியவந்து நாடே நாறியது. சிறிது கால சலசலப்புக்குப் பிறகு அடங்கிப் போனது. வேட்பாளரின் கிரிமினல் - குற்றப்பின்னணி, சொத்து விவரம், கல்வி போன்ற தகுதிகளை பகிரங்கமாக அறிவிப்பதை உச்சநீதி மன்றமும் தேர்தல் ஆணையமும் நிபந்தனையாக்க முயற்சிகள் மேற்கொண்டபோது அனைத்துக் கட்சிகளும் வேறுபாடோ, விதிவிலக்கோ இல்லாமல் அதை நீர்த்துப்போகச் செய்தன. அதேபோல தேர்தலில் கள்ளப்பணம் - கறுப்புப்பணம் புகுந்து விளையாடுவதைத் தடுப்பதற்கான எந்த முயற்சியும் கிடையாது. வேட்பாளர் செலவு உச்ச வரம்பு என்பது வெறும் கேலிக் கூத்தாகவே இருக்கிறது. சட்டப்படியான அளவைவிடப் பலநூறு மடங்கு பணத்தை ஒவ்வொரு வேட்பாளரும் அள்ளி வீசுகின்றனர்.

முன்பெல்லாம் தேர்தல் களத்தில் மோதிக் கொள்ளும் கட்சிகளிடையே தேர்தல் அறிக்கைகளிலும் வாக்குறுதிகளிலுமாவது வேறுபாடுகளைக் காண முடிந்தது. இப்போது தேர்தல் அறிக்கைகள் கம்பெனி ஆண்டறிக்கைகளைப் போல பங்குதாரர்களின் அக்கறைக்குரியதாகக் கூட இல்லை. தனியார்மயம், தாராளமயம், உலகமயம் என்கிற புதிய பொருளாதாரக் கொள்கையையும், கட்டுமான சீரமைப்பு என்கிற பெயரில் உலகவங்கி, ஐ.எம்.எஃப் மற்றும் உலக வர்த்தகக் கழகத்தின் கட்டளைகளை ஏறக்குறைய எல்லாக் கட்சிகளுமே ஏற்பதால் பொருளாதார ரீதியிலான எல்லைக்கோடு மெலிதாகவே இருக்கின்றன அல்லது மங்கிப் போய்விட்டன. அனைத்து கட்சிகளின் தேர்தல் வாக்குறுதிகளும் வேலைவாய்ப்புப் பெருக்கம், விலைவாசிக் குறைப்பு என்கிற வாக்குறுதிகளின் அளவுகளில் மட்டுமே வேறுபாடு உள்ளன. அந்த வாக்குறுதிகளை அமலாக்கும் திட்டங்கள் - வழிமுறைகளில் மாறுபாடுகள் கிடையாது.

ஆர்.எஸ்.எஸ். - பா.ஜ.க. தலைமையிலான இந்துத்துவா மற்றும் அதன் ஆதரவுக் கூட்டணி; அதை எதிர்த்த மதச்சார்பற்ற கட்சிகளின் கூட்டணி என்று முக்கிய அரசியல் கட்சிகள் இரு அணிகளாகப் பிரிந்து நிற்பது, இந்தப் பொதுத்தேர்தல்கள் அரசியல் - சித்தாந்த அடிப்படையிலான போட்டியாக அமையும் என்பதைப் போல தோற்றமளிக்கிறது. ஆனால், மதச்சார்பற்ற அணியில் இடம்பெற்றுள்ள கட்சிகளில் சில, ஏற்கெனவே இந்துத்துவா மதவெறி சக்திகளுடன் கூட்டணி வைத்திருந்தவை; காங்கிரசு - போலி கம்யூனிஸ்டு போன்றவை உண்மையில் மிதவாத அல்லது மறைமுக இந்துத்துவா ஆதரவு மற்றும் அதனுடன் சமரசம் செய்து கொள்பவைதாம்.

**நாட்டின் நாடாளுமன்ற ஜனநாயக அமைப்பு முழுவதும் கிரிமினல் மயம், பொறுக்கிமயம், பாசிசமயமாகி உள்ள நிலையில், தனக்கு ஏன் வாக்களிக்க வேண்டும் என்று நியாயவுரிமை கோருவதற்கான யோக்கியதையை அரசியல் கட்சிகள் அனைத்துமே இழந்து விட்டன.**

ஆகவே, இப்போது மோதிக் கொள்ள அணிதிரண்டுள்ள அரசியல் கட்சிகளிடையே பெரிய-பாரிய அரசியல், பொருளாதார, சித்தாந்த வேறுபாடுகள் இல்லாத நிலையில், அடிப்படையில் மாறுபட்ட கருத்துக்கள் - சித்தாந்தங்களைத் தேர்ந்தெடுப்பதற்கான வாய்ப்புகள் கிடையாது. இந்த நிலை, நாடாளுமன்ற ஜனநாயக முறையிலான தேர்தல்களாக இல்லாமல், அதிபர் தேர்தல்களுக்கான முறையில் அடுத்த ஆட்சியாளர் - பிரதமர் யார் என்பதற்கான தேர்தலாகவே மாற்றப்படுகிறது; வாஜ்பாயா - சோனியாவா என்கிற பிம்பங்கள் - குறியீடுகள்தாம் வாக்காளர் முன்பு நிறுத்தப்படுகின்றன. அதுவே தமிழகத்தில் ஜெயலலிதாவா, கருணாநிதியா என்கிற வடிவம் பெற்றிருக்கிறது. பொருளாதாரக் கொள்கை வேறுபாடுகள் அழிந்து போய்விட்ட நிலையில் (அல்லது அனைத்துக் கட்சிகளும் புதிய பொருளாதாரக் கொள்கை ஆதரவு என்று ஒன்றுபட்டுவிட்ட நிலையில்) அரசியலிலும் தனிநபர் பிம்பங்கள் அல்லது குறியீடு என்று சுருக்கப்பட்டுவிட்ட நிலையில் தனிநபர் குணக்கொலை, தனிநபர்கள் மீதான அவதூறுகள், கீழ்த்தரமான வசவுகள், சேறுவாரி இறைப்பது போன்றவைதாம் எஞ்சி நிற்கின்றன.

நாட்டின் நாடாளுமன்ற ஜனநாயக அமைப்பு முழுவதும் கிரிமினல்மயம், பொறுக்கிமயம், பாசிசமயமாகி உள்ள நிலையில், தனக்கு ஏன் வாக்களிக்க வேண்டும் என்று நியாயவுரிமை கோருவதற்கான யோக்கியதையை அரசியல் கட்சிகள் அனைத்துமே இழந்துவிட்டன. ஆர்.எஸ்.எஸ். - பா.ஜ.க. - அ.தி.மு.க. கூட்டணிக்கு எதிராக அமைக்கப்பட்டிருக்கும் ஜனநாயக முற்போக்குக் கூட்டணி உட்பட யாருமே காசுமீரில் நடக்கும் அரசு பயங்கரவாதம், குஜராத்தில் நடந்த மதவெறிக் காட்டுமிராண்டித்தனம், இங்கே ஜெயலலிதா நடத்தும் போலீசு வெறியாட்டம் போன்ற எதையுமே குறிப்பான தேர்தல் பிரச்சினையாக எழுப்பவே இல்லை. ஆட்சியாளர்களுக்கு எதிராக மக்களிடையே நிலவும் பொது வெறுப்பை தேர்தல் ஆதாயமாக்கிக் கொள்வதிலே தான் அக்கறை காட்டுகின்றனர். ஆகவே, நாடாளுமன்ற ஜனநாயகம் அதன் இயல்பான சுவாசத்தை எப்போதோ இழந்துவிட்டது. செயற்கையான முறையில் ''சுவாசக்காற்று'' செலுத்தப்பட்டு, அதன் இருப்பு பாதுகாக்கப்படுகிறது என்பதுதான் உண்மை. ●

''புதிய ஜனநாயகம்'' உரிமையாளர் மற்றும் இதர விவரங்கள்
படிவம் IV (விதி 8-இன் படி)

1. வெளியிடும் இடம் : 110, 2-ஆம் தளம், மாநகராட்சி வணிக வளாகம், 63, என்.எல்.கே. சாலை, கோடம்பாக்கம், சென்னை -600 024.

2. வெளியிடும் காலம் : மாதம் ஒருமுறை

3. அச்சிடுபவர் பெயர் : இரா. சன்முகராக
இந்தியக் குடிமகனா? : ஆம்
முகவரி : எழில் பிரிண்ட்ஸ், 110, 2-ஆம் தளம், மாநகராட்சி வணிக வளாகம், 63, என்.எல்.கே. சாலை, கோடம்பாக்கம், சென்னை -600 024.

4. உரிமையாளர் மற்றும் வெளியிடுபவர் பெயர் : இரா. சன்முகராக,
இந்தியக் குடிமகனா? : ஆம்
முகவரி : 110, 2-ஆம் தளம், மாநகராட்சி வணிக வளாகம், 63, என்.எல்.கே. சாலை, கோடம்பாக்கம், சென்னை -600 024.

5. ஆசிரியர் பெயர் : இரா. சன்முகராக
இந்தியக் குடிமகனா? : ஆம்
முகவரி : 110, 2-ஆம் தளம், மாநகராட்சி வணிக வளாகம், 63, என்.எல்.கே. சாலை, கோடம்பாக்கம், சென்னை -600 024.

இரா. சன்முகராகவாகிய நான், மேலே குறிப்பிட்டுள்ள விவரங்கள் அனைத்தும் உண்மை என்று உறுதியளிக்கிறேன்.

1.3.2004 (ஒ-ம்) இரா. சன்முகராக. வெளியிடுபவர்.



படிப்பகம்

www.padippakam.com

# சிவந்த கண்கள் கவனிக்கட்டும்

## தாராளமய சேவையில் உச்சநீதி மன்றம்

உச்சநீதி மன்றம் சமீபத்தில் அளித்துள்ள தீர்ப்பில், "ஆசிரியர்களைத் தொழிலாளர்களைப் போல தேர்ச்சிதிறன் மிக்கவர்கள், தேர்ச்சிதிறன் இல்லாதவர்கள் என வகை பிரிக்க முடியாது. எனவே, ஆசிரியர்கள் ஓய்வு பெறும் பொழுது, ஓய்வூதியத்தோடு வழங்கப்பட்டு வரும் பணிக்கொடையினை (கிராஜுவட்டி) இனி வழங்கத் தேவையில்லை. எனினும் இப்பிரச்சியினை மாநில அரசுகள் தங்கள் விருப்பம் போல முடிவு செய்து கொள்ள லாம்" என இடியை இறக்கியிருக்கிறது. ஆசிரியர்களின் பணிக்கொடையின் மீது கைவைத்துள்ள உச்சநீதி மன்றம், அடுத்து அனைத்துத் தொழிலாளர்கள் - ஊழியர்களின் ஓய்வூதியத்தின் மீதும் கைவைக்கலாம். ஏனென்றால், இதைத்தானே தொழிலாளர் நலச் சட்ட சீர்திருத்தம் என்ற பெயரில் ஆளுங் கும்பல் கொண்டு வர முயலுகிறது.

## பொதுச் சொத்தைத் திருடும் அருண் ஷோரி

மும்பய் நகரில் பொதுத்துறைக்குச் சொந்தமாக இருந்த "சென்டார்" என்ற நட்சத்திர விடுதியை இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு ஏ.எல். பத்ரா என்ற தனியார் முதலாளிக்கு 83 கோடி ரூபாய்க்கு விற்றது தே.ஜ. கூட்டணி அரசு. பத்ரா, அடுத்த ஆறு மாதத்திற்குள்ளாகவே இந்த விடுதியை வேறொரு நிறுவனத்திடம் 135 கோடி ரூபாய்க்கு விற்றுக் கொள்ளை இலாபமடித்தார். இந்த விற்பனை பற்றி தணிக்கை செய்த மைய அரசின் தணிக்கை அதிகாரி, இந்த விற்பனையால் அரசுக்கு ஏற்படும் நட்டம் 146 கோடி ரூபாய் எனப் புட்டு வைத்துவிட்டார். மாடர்ன் ஃபுட்ஸ், பால்கோ நிறுவனங்களை விற்றதில் நடந்த ஊழல்களையும் இங்கு நினைவுபடுத்துவது நல்லது. பொதுத்துறையைத் தனியாருடன் சேர்ந்து சுருட்டிக் கொள்வதற்கென்றே ஒரு அமைச்சகம்; அதற்கென்று ஒரு அமைச்சர் - அருண் ஷோரி. 'ஜனநாயகம்' உருப்படுமா?

## இராணுவத்தின் கோழைத்தனம்

ஜம்மு காசுமீர் மாநிலத்தில் நிராயுத பாணியான மக்களை நரவேட்டையாடும் இராணுவ சிப்பாய்கள், உயிருக்குப் பயந்த கோழைகள் என்பது சமீபத்தில் அம்பலமானது. சிறீநகருக்கு அருகிலுள்ள பந்திபூர் வனப் பகுதியில் தங்கியிருந்த போராளிகளைப் பிடிக்கச் சென்ற இராணுவம், தங்களின் உயிரைக் காப்பாற்றிக் கொள்ள பந்திபூரைச் சேர்ந்த அப்பாவிகளை மனிதக் கேடயமாகப் பயன்படுத்திக் கொண்டது. அப்பொழுது நடந்த துப்பாக்கி சண்டையில், ஐந்து காசுமீர் சிவிலியன்கள் குண்டடிபட்டு இறந்து போனார்கள். அவர்கள் ஐந்து பேரும் இராணுவச் சிப்பாய்களின் சுமைகளைத் தூக்கும் கூலிகள் எனக் கூறி, மனிதக் கேடயப் பிரச்சினையை மூடிமறைக்க முயன்றது, இராணுவம். ஆனால், இந்த அண்டப்புளுகை அம்பலப் படுத்தி பந்திபூரில் 10,000 பேர் கலந்து கொண்ட ஊர்வலம் நடந்தபின், இந்த விவகாரம் நாடெங்கும் நாறிப் போய்விட்டது.

ஜம்மு-காசுமீரில் இந்திய இராணுவம் அப்பாவி மக்களைக் கொன்று வருவதற்கு எதிராக சிறீநகரில் நடந்த ஆர்ப்பாட்டம்.




## நீதிமன்றத்தின் "சதி"!

கடந்த 1987-ஆம் ஆண்டு இராசஸ்தானில் தியோரலா என்ற ஊரில், ரூப் கன்வர் என்ற இளம் பெண்ணின் கணவர் இறந்த பின், அப்பெண் சாதி - மதவெறிக் கும்பலால் அடித்துக் கொல்லப்பட்டு "சதி மாதா"வாக ஆக்கப் பட்டார். பா.ஜ.க.வின் இராசஸ்தான் மாநில முன்னாள் துணை தலைவர் ராஜேந்திர சிங் ரதோர்; பா.ஜ.க. இளைஞர் அணியின் முன்னாள் தலைவர் பிரதாப் சிங் கசாரியா, ராஜ்புத் சாதி சங்கத்தின் முன்னாள் தலைவர் நரேந்திர சிங் உள்ளிட்டு 16 பேர் இக்கொலை வழக்கின் கீழ் குற்றம் சாட்டப்பட்டு, அவர்கள் மீது விசாரணை நடந்து வந்தது. இந்து மதப் பழக்கம் என்ற பெயரில் நடந்த இப்படுகொலைக்கும், பா.ஜ.க. தலைவர்களுக்கும் இருந்த தொடர்பு வெளிப் படையாகவே தெரிந்த பின்னும்கூட, 17 ஆண்டுகளாக வழக்கை இழுத்தடித்து வந்த நீதிமன்றம், "சாட்சியம் இல்லை" என்று கூறி, குற்றவாளிகள் அனைவரையும் சமீபத்தில் விடுதலை செய்துவிட்டது.

## தற்கொலைக்குத் தள்ளப்படும் அமெரிக்க சிப்பாய்கள்

அமெரிக்க இராணுவத்திடம் என்னதான் நவீன ஆயுதங்கள் இருந்தாலும், ஈராக்கில் நடந்துவரும் ஆக்கிரமிப்பு எதிர்ப்புப் போரை எதிர்கொள்ளும் மனவலிமை அதனிடம் சுத்தமாகவே இல்லை. ஏறத்தாழ ஒரு வருடமாக நடந்து வரும் போர் ஏற்படுத்தும் மன அழுத்தம் அமெரிக்க இராணுவ வீரர்கள் மத்தியில் தற்கொலை செய்து கொள்ளும் எண்ணத்தை உருவாக்கி வருகிறது. 2003-ஆம் ஆண்டில் மட்டும் 21 இராணுவச் சிப்பாய்கள் ஈராக்கி லேயே தற்கொலை செய்து கொண்டு மாண்டு போனார்கள். நாட்டுக்குத் திரும்பிய இராணுவச் சிப்பாய்கள் சிலர், தங்களின் மனைவியைக் கொன்று விட்டுப் பின் தற்கொலை செய்து கொண்டு இருக்கிறார்கள். இது போன்ற சம்பவங்கள் அமெரிக்காவில் உள்ள வடக்கு கரோலினா, பிராக் துறைமுகம் ஆகிய இடங்களில் நடைபெற்றுள்ளதாக அமெரிக்காவின் இராணுவத் தலைமையகம் ஒப்புக் கொண்டுள்ளது.


படிப்பகம்

www.padippakam.com

# 'சேரி'க்கு இழிவைத் தேடித்தரும் 'தலித்' தலைவர்கள்

ஊரிலே ஒருத்தன் இருந்தானாம். ஒருநாள் அவன் தான் கழித்த மலத்தையே கிண்டிக் கிளறிக் கொம்பாலே குத்தி எடுத்து முகர்ந்து பார்த்தானாம். திடீரென்று, ''ஐயய்யோ! இதென்ன மலம் மாதிரி இருக்குது! இப்படி நாறுதே! நான் கழித்தது எப்படி மலமாக இருக்கலாம்! மலம்னாலும் நான் கழித்ததல்லவோ! இது எப்படி நாறலாம்! நான் ஒரு உத்தம புத்திரனாச்சே. கண்டதையும் தின்னலையே. நல்ல தரமான, ருசியான மலைவாழைப் பழத்தைத்தானே சாப்பிட்டேன். அதோடு நான்தான் தினமும் வாசனை சோப்புப் போட்டல்லவா குளிக்கிறேன்! ஃபாரின் செண்ட் வேற பூசிக்கிறேன். இருந்தும் இதென்ன இப்படி நாத்தமடிக்குதே!'' என்று அதிர்ச்சியடைந்தானாம்.

கண்ணில்பட்டவர்கள், போவோர் வருவோரிடமெல்லாம் இந்த நியாயத்தைக் கூறி ஆத்திரம் பொங்கக் கேள்வி கேட்டானாம். புலம்பினானாம், அரற்றினானாம். இதைப் பார்த்தவர்கள், கேட்டவர்கள் எல்லாம் இவன் ஒன்றும் அறியா அப்பாவி என்றுகூட எண்ணமாட்டார்கள்.

''இவனுக்கென்ன பைத்தியமா புடிச்சுப் போச்சு! என்ன சாப்பிட்டாலும் மனிதக் கழிவு மலமாகத்தானே வரும். மலம்னா நாறத்தான் செய்யும். மனுச மலம்னா மோசமால்ல நாறும். இவன் கழித்ததின்னா அதுமட்டும் மணக்க வேணுமா, என்ன?'' என்றுதானே எண்ணுவார்கள்.

ஆனால், ஊரிலே சிலபேராவது, இவனைப் பற்றித் தெரிந்தவர்கள், இவனைப் பைத்தியம் என்று எண்ணமாட்டார்கள். ''இவன் ஒரு பித்தலாட்டக்காரன், மோசடிப் பேர்வழி'' என்றுதான் எண்ணுவார்கள்.

ஏனென்றால், இதே ஆள்தான் இதுக்கு முன்பெல்லாம் ஊர்ஊராகக் கூட்டம் போட்டு, ''சாப்பிட்டது வாழைப்பழமாக இருந்தாலும் அது வயிற்றுக்குள்ளே போய் வெளியே வரும்போது மலமாகத்தான் வரும்'' என்ற உண்மையைக் கண்டுபிடித்த அறிவியல் அறிஞனாக விளங்கினான். இப்போது போய், ''இதென்ன நான் கழித்தது மலமாக வருகிறது, அதுவும் இப்படி நாறுது'' என்று மாய்மாலம் செய்தால், அவன் பித்தலாட்டக்காரன், மோசடிப் பேர்வழி என்றுதான் ஞாபகம் மறவாதவர்கள் சொல்வார்கள்.

இந்தப் பேர்வழி ஒரு கற்பனைக் கதை பாத்திரம் அல்ல. நிஜத்தில் வாழும் மனிதர். வேறு யாருமல்ல. அவர்தான் விடுதலைச் சிறுத்தைகள் அமைப்பின் பொதுச் செயலாளர் தொல். திருமாவளவன். அவர் தேர்தல் அரசியலில் குதிப்பதற்கு முன்பு வரை, தேர்தல் புறக்கணிப்பு அரசியலில் இருந்தவரை அதை நியாயப்படுத்துவதற்காகக் கூறிவந்ததுதான் இந்த வாழைப்பழக் கண்டுபிடிப்பு.

''சாப்பிட்டது வாழைப்பழமாக இருந்தாலும் வயிற்றுக்குள் போனால் வெளியே வருவது மலம் தான். எப்பேர்ப்பட்ட யோக்கியனாக இருந்தாலும் இந்தத் தேர்தல் பாதைக்குள் போனால் அயோக்கியனாகத் தான் வெளியே வர வேண்டும்'' எனச் சொல்லி வந்தவர்தான் இந்த தொல். திருமா.

தொல். திருமா அன்று சொல்லி வந்ததன் பொருளை இன்னும் கூர்மையாகப் பார்த்து, அவருக்கே பொருத்தினால், ''வாழைப்பழம் வயிற்றுக்குள் போய் வெளியே வரும் போது மலமாகத்தான் இருக்கும். அதைப்போல நானே இருந்தாலும் இந்தத் தேர்தல் பாதைக்குள் போனால் அயோக்கியனாகத்தான் வெளியே வரவேண்டும்'' என்றுதான் பொருள் சொல்ல வேண்டும்.

தான் மலமாகத்தான் வெளியே வருவோம் என்பது வயிற்றுக்குள் போகும் வாழைப்பழத்துக்குத் தெரியாது. ஆனால், தேர்தல் பாதைக்குள் போகும் தான் அயோக்கியனாகத் தான் வெளியே வருவோம் என்பது திருமாவளவனுக்குத் தெரியும். தெரிந்தும் அப்படிச் செய்தார்.

அது வாழைப்பழமாகவே இருப்பதா, முடியுமா அல்லது மலமாகப் போய்விடுவதா என்பதை வாழைப்பழம் முடிவு செய்ய முடியாது. ஆனால், யோக்கியனாக இருப்பதா, இல்லை தேர்தல் பாதையில் குதித்து அயோக்கியனாக மாறுவதா என்பதை மனிதனால் தீர்மானிக்க முடியும். முன்னதில் இருக்கும் சிரமங்களையும் பின்னதில் இருக்கும் வசதிகளையும் சீர்தூக்கி கணக்குப் பார்த்துத்தான் தேர்தல் பாதையில் குதித்தார் திருமாவளவன்.

இந்த முடிவு எடுத்ததை நியாயப்படுத்தி அப்போதும், இப்போதும் தொல். திருமாவளவன் முன்வைக்கும் வாதங்கள்; இந்தத் தேர்தல் கூட்டணி அரசியலில் நீடித்திருப்பதற்காக அவரும் அவரது ''சகபாடியான'' கிருஷ்ணசாமியும் போடும் குட்டிக் கரணங்கள் - இவையெல்லாம் அவர் முன்பு சொன்ன உவமானம் உவமேயத்தை விட மட்டமான நிலைக்கு அவர்கள் போய் விட்டார்கள் என்பதையே காட்டுகின்றன.

''எத்தனை காலம்தான் வெறுமனே போராட்டங்கள், போலீசு அடக்குமுறை, கைது - சிறை, வழக்குகள் என்று அனுபவிப்பது. நாமும் தேர்தல் அரசியலில் குதித்து, அதிகாரத்தில் பங்கு பெறவேண்டும்'' என்று தமது அணிகள் கோருவதாக அப்போது பேட்டி கொடுத்தார், திருமாவளவன்.

அணிகள் அப்படிக் கேட்கும்போது எப்போதும் முற்றும் அறிந்தவர்போல பேசும் திருமாவளவன் என்ன சொல்லி இருக்க வேண்டும். அவரே பேசிவந்த அந்த வாழைப்பழம் மலமாகும் கண்டுபிடிப்பை, யோக்கியன் அயோக்கியனாகும் ''ரசவாதத்தை'' எடுத்துச் சொல்லியிருக்க வேண்டும்.

உள்ளூராட்சித் தலைவர்களானால் வெட்டிக் கொல்லப்படுவார்கள்; ''தேசிய''க் கொடியேற்றும் உரிமை கூடப் பெற முடியாது; ஊர்க்காரனுக்கு சலாமடிக்க மட்டுமே முடியும். சட்டப் பேரவை உறுப்பினரானால் அங்கு வாய்திறந்து பேசக் கூட அனுமதி கிடைக்காது; அப்படியிருக்கும்போது, இன்றைய அரசியல் அமைப்பில், அரசியல் அதிகாரத்தில் தாழ்த்தப்பட்டவன் எப்படி, எந்த அளவு பங்கு பெற முடியும் என்று எடுத்துச் சொல்லியிருக்க வேண்டுமல்லவா!


படிப்பகம்

www.padippakam.com

இதற்கு மாறாக, ஓட்டுப் பொறுக்கி அரசியலுக்குப் போனால், தலைமைக்குப் பதவியும், பிரபலமும், அதற்கு நெருக்கமானவர்களுக்கு வசதியான வாழ்வும் கிடைக்கும். இவைதவிர, மற்ற ஓட்டுக் கட்சிப் பிரமுகர்கள் போல போலீசு நிலையத்துக்கும், அரசு அலுவலகத்துக்கும் தடையின்றிப் போய் அதிகாரத் தரகு வேலை பார்க்கலாம்; ஏற்கெனவே சமூகவிரோதக் கிரிமினல் குற்ற வழக்குகளில் சிக்கியுள்ள கட்சிப் பிரமுகர்கள், பாதுகாப்பாகத் தமது தொழிலைத் தொடரலாம். இவைதான் தேர்தல் அரசியல் மூலம் அவர்கள் பங்குபெற விரும்பிய அதிகாரம்.

இதையே மறைமுகமாகச் சொல்லி தேர்தல் பங்கேற்பை நியாயப்படுத்திய தொல். திருமாவளவன், இப்போது வேறுமாதிரிச் சொல்லி நியாயப்படுத்துகிறார். ''1990-லிருந்து 1998 வரை அதிதீவிரமாய் தேர்தல் பாதையைப் புறக்கணித்து, நாடாளுமன்ற சனநாயகம், உழைக்கும் ஏழை எளிய கடைசி மனிதர்களுக்குத் துளியும் பயன்படாது என்பதுடன், அவர்களுக்கு நேர் எதிரானது என்பதையும் வெகு மக்களிடத்தில் அம்பலப்படுத்தி வந்தது'' என்று தனது அமைப்பின் முந்தைய செயல்பாடு பற்றி பதவி விலகல் அறிக்கையில் இப்போது கூறுகிறார் திருமாவளவன்.

அதே அறிக்கையின் அடுத்த பத்தியிலேயே ''... ஒடுக்கப்பட்ட மக்களின் பாதுகாப்பு இயக்கமாய் விரைந்து வளர்ந்த விடுதலைச் சிறுத்தைகள், 'அளவு மாறுபடும்போது தன்மை மாறுபடும்' என்னும் இயங்கியல் விதிக்கேற்ப, தேர்தல் புறக்கணிப்பு என்னும் நிலையிலிருந்து வெகுமக்களின் கட்டளையை ஏற்று, தேர்தல் களத்தில் பங்கெடுப்பது என்னும் நிலைப்பாட்டுக்கு வந்தது. 1999-இல் நடைபெற்ற நாடாளுமன்றப் பொதுத் தேர்தலின் போது, 'கடைசி மனிதனுக்கும் சனநாயகம்! எளிய மக்களுக்கும் அதிகாரம்!' என்னும் முழக்கத்துடன் தேர்தல் களத்தில் விடுதலைச் சிறுத்தைகள் குதித்தது'' என்கிறார். அதோடு, ''அரசியல் அதிகாரத்துக்கான மையத்தை நோக்கிய 'அரசியல் சக்தி'யாய், ஒடுக்கப்பட்ட மக்களை அமைப்பாக்க அணிதிரட்டியுள்ள விடுதலைச் சிறுத்தைகள், தேர்தலில் 'அதிகாரப் பகிர்வுக்கான' உண்மையான அங்கீகாரமில்லாமல் யாரையும் சும்மா தூக்கி சுமக்க முடியாது என அறிவித்துள்ளது'' என்கிறார்.

மார்க்சிய இயங்கியல் விதியை இவர் இவ்வளவுதூரம் கொச்சைப்படுத்துவது இருக்கட்டும். வெறும் சவடால் அடிக்கும் போதுகூட அதில் முரணற்ற பொருள் இருக்க வேண்டும். இந்த தர்க்க அடிப்படை அறிவு கூட இல்லாதவர்தான் இந்த தொல். திருமாவளவன். இப்படிச் சொல்வதற்கு இவரின் இந்த அறிக்கையின் இந்த இரு பத்திகளே ஆதாரமாக உள்ளது. வேறெதுவும் தேவையில்லை.

''நாடாளுமன்ற சனநாயகம் உழைக்கும் ஏழை எளிய கடைசி மனிதர்களுக்குத் துளியும் பயன்படாது என்பதுடன் அவர்களுக்கு நேர் எதிரானது'' என்பதால் ''அதிதீவிரமாய்த் தேர்தல் பாதையைப் புறக்கணித்ததாக'' முதல் பத்தியில் சொல்கிறார் தொல். திருமா. அடுத்த பத்தியிலேயே, '''கடைசி மனிதனுக்கும் சனநாயகம்! எளிய மக்களுக்கும் அதிகாரம்!' என்னும் முழக்கத்துடன் தேர்தல் களத்தில் விடுதலைச் சிறுத்தைகள் குதித்தது'' என்கிறார். இந்த மாற்றத்திற்கு அவர் சொல்லும் காரணங்கள், விடுதலைச் சிறுத்தைகள் ஒடுக்கப்பட்ட மக்களின் பாதுகாப்பு இயக்கமாக விரைந்து வளர்ந்து விட்டது; வெகு மக்கள் கட்டளையிட்டார்கள் ஆகியவை.

நாம் கேட்கிறோம். தொல். திருமாவே குறிப்பிடும் வகையில் அரசியல் அதிகாரத்துக்கான மையத்தை நோக்கிய 'அரசியல் சக்தியாய்', ஒடுக்கப்பட்ட மக்களை அமைப்பாக்கி அணிதிரட்டி விட்டால், நாடாளுமன்ற சனநாயகத்தின் தன்மை மாறிவிடுமா? அது ஏழை எளிய கடைசி மக்களுக்குப் பயன்படுமா? அவர்களுக்கு நேர் எதிரானது என்பதிலிருந்து சாதகமானது என்றாகிவிடுமா? விடுதலைச் சிறுத்தைகளின் அளவு மாறுவதாலேயே நாடாளுமன்ற சனநாயகத்தின் பண்பு மாறிவிடுமா? இதுதான் இயங்கியல் விதியா?

திரு. தொல். திருமா அவர்கள் தனது பதவி விலகல் அறிக்கையின் இறுதியில் பின்வருமாறு கூறுகிறார். ''கடந்த மூன்று ஆண்டுகளில் சட்டப்பேரவையில் தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடி மக்களின் சனநாயக உரிமைகளுக்காக பேரவை உறுப்பினர் என்ற முறையில் குரல் எழுப்பிடவும் இயலவில்லை. ஆளுங்கட்சியினரின் சேரி மக்களுக்கு எதிரான போக்கினால் சேரி மக்களின் அவலங்களைப் பற்றிப் பேசவும் அனுமதிக்கப்படவே இல்லை. ஆகவே, ஒடுக்கப்பட்ட மக்களுக்கு பயன்படாத சட்டப்பேரவை உறுப்பினர் பதவியிலிருந்து 3.2.2004 இன்று முதல் விலகிக் கொள்கிறேன்.''

இதுதான் நடைமுறை அனுபவம் என்ற போதும், ''கட்டாயமாகத் தேர்தலில் போட்டியிடுவோம். கூட்டணியிலோ, தனித்தோ தேர்தலில் போட்டியிடுவது என்பதுதான் விடுதலைச் சிறுத்தைகளின் உறுதியான நிலைப்பாடு'' என்கிறார். தேர்தல் களத்தில் குதித்து அரசியல் அதிகாரத்துக்கான மையத்தை நோக்கி ஒடுக்கப்பட்ட சேரி மக்கள் ஒரு அரசியல் சக்தியாய் வளர்ந்திடக் கூடாதா? ஆளும் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றி தலைநிமிரக் கூடாதா? என்று கேட்டுக் கூச்சல் போடுகிறார் தொல். திருமா. தேர்தலில் 'அதிகாரப் பகிர்வுக்கான', உண்மையான அங்கீகாரம் கேட்டு அவரும் அவரது 'சகபாடி' கிருஷ்ணசாமியும் காவடி தூக்காத ஓட்டுக் கட்சித் தலைவர்களே கிடையாது.

நாடாளுமன்ற சனநாயகம் உழைக்கும் ஏழை எளிய கடைசி மனிதர்களுக்

**தேர்தல் சின்னத்தை (அம்பு) அறிமுகப்படுத்தும் மக்கள் கூட்டணித் தலைவர்கள் (இடமிருந்து) கிருஷ்ணசாமி, திருமாவளவன் மற்றும் கண்ணப்பன்.**




படிப்பகம்

www.padippakam.com

குத் துளியும் பயன் படாது, அவர்களுக்கு நேர் எதிரானது; அவர்களுக்காக அங்கு போய்க் குரல் எழுப்பவோ பேசவோ முடியாது என்பதுதான் தொல். திருமாவின் கருத்தும் அனுபவமும் என்ற போதும், அவர் வேறு யாருக்காக, எதற்காக அங்குபோயே தீருவது என்பதில் இவ்வளவு உறுதியும் ஆவேசமும் காட்டுகிறார்?



மேல்சாதி ஆதிக்கத்திற்கு எதிராக தலித்துகள் வன்முறையில் இறங்கக்கூடாது என உபதேசிக்கும் தேவர் சாதி தலைவர் சேதுராமனுடன் கைகோர்த்துக் கொள்ளும் திருமாவளவன், தீண்டாமைக்கு எதிராகப் போராடி வரும் நக்சல்பாரிகள் மீது அவதூறு செய்கிறார்.

திருநாவுக்கரசர், ஏ.சி. சண்முகம், கண்ணப்பன், கிருஷ்ணன், நடராஜன் (சசிகலா) போன்றவர்கள் எல்லாம் எம்.ஜி.ஆர். - ஜெயலலிதா அரசியல் பெற்றெடுத்த செல்லப் பிள்ளைகள். தாங்கள் குவித்து வைத்திருக்கும் கள்ளப்பணம் - கறுப்புப்பணத்தை வைத்துத் தமக்கென ஒரு விசுவாசச் சாதிக் கும்பலை சேர்த்துக் கொண்டு, தமது சொத்துக்களைப் பாதுகாத்து விரிவுபடுத்துவதற்காக அரசியல் நடத்துபவர்கள். ''உழைக்கும் ஏழை எளிய மக்களுக்குத் துளியும் பயன்படாத, அவர்களுக்கு நேர் எதிரான நாடாளுமன்ற சனநாயகம்'' இப்படிப்பட்ட அரசியல் பிழைப்புவாதிகளுக்குத்தான் பயன்படுகிறது. எனவேதான், இவர்களுடன் தொல். திருமாவும் அவரது ''சகபாடி'' கிருஷ்ணசாமியும் கைகோர்த்துக் கொண்டிருப்பது தற்செயலான அரசியல் நிர்ப்பந்தம் காரணமா? இல்லை, இவர்களை முன்னுதாரணமாகக் கொண்டிருப்பதுதானா என்ற கேள்வி எழுகிறது.

''சாதிய வாதத்தையும் மதவாதத்தையும் வீழ்த்த வேண்டும் என்பதில் விடுதலைச் சிறுத்தைகள் உறுதியாக இருக்கிறோம். அதை எதிர்த்து ஒரு மக்கள் அணி கட்டப்படுமேயானால், அந்த அணியில் விடுதலைச் சிறுத்தைகள் வலிந்து போய்ச் சேரும்'' என்கிறார், தொல். திருமா. அப்படி ஒரு அணி அமையாதபோது சாதியவாத - மதவாதக் கட்சிகளோடு, ஒன்றிரண்டு தொகுதிகளாவது ஒதுக்கி 'அதிகாரப் பகிர்வு' பெறுவதற்கு மன்றாடுவோம்; அதுவும் முடியாதென்று எங்களைப் போன்று (திருமா + கிருஷ்ணசாமி) ஒதுக்கப்படுபவர்கள் சேர்ந்து சாதிய மதவாத கட்சிகளானாலும் அவற்றை வைத்து ஒரு மக்கள் அணி அமைப்போம் என்கிறார்கள், நடைமுறையில்.

''தொகுதிப் பங்கீடு - அதிகாரப் பகிர்வு'' என்ற 'இலட்சியத்து'க்காக என்ன வேண்டுமானாலும், எவ்வளவு தூரமானாலும் செய்வோம் என்பது தான் அவர்களின் நிலையாக உள்ளது. தன்னோடு நட்புறவு பாராட்டிக் கொண்டிருக்கும் போதே, தொகுதி பேரம் பேசுவதற்கு போயசு தோட்டத்துக்குப் புறப்பட்டு ஜெயலலிதாவால் திருப்பி அனுப்பப்பட்டார் தொல். திருமா என்பது கருணாநிதிக்கு தெரியவந்து அவரும் இவரை ஒதுக்கி விட்டார். கடந்த 1998 தேர்தலின்போது ஜெயலலிதா -சோனியா கூட்டு உறுதியானது தெரியாமல் காங்கிரசுடன் சேர்ந்து மூன்றாவது அணி அமைக்க கிருஷ்ணசாமி தூதுபோனார். இந்தத் தேர்தலில் ஜெயலலிதா - அத்வானி கூட்டு உறுதியானது அறியாமல் பா.ஜ.க.வுடன் சேர்ந்து மூன்றாவது அணி அமைப்பதற்கு வெங்கையா நாயுடுவிடம் போய் மன்றாடினார்கள் திருமாவும் கிருஷ்ணசாமியும்.

இதற்கெல்லாம் மறுப்புத் தெரிவித்து, திருநாவுக்கரசரின் வீட்டு விருந்துக்குப் போன இடத்தில் வெங்கையா நாயுடுவைத் தற்செயலாக சந்தித்ததாக பத்திரிகைகளிடம் விளக்கமளித்துள்ளனர். இந்த விளக்கத்தை ஏற்றுக் கொண்டால் கூட, அ.தி.மு.க. - பா.ஜ.க. கூட்டணியில் சேருவதை அடியோடு நிராகரிக்கவில்லை, பரிசீலிப்போம், சேருவோம் என்று தனது பத்திரிகையிலேயே தொல். திருமா எழுதவில்லையா?

''ஒருவேளை பாரதிய சனதாவும் அ.தி.மு.க.வும் கூட்டணி அமைத்து தாழ்த்தப்பட்ட மக்களுக்குரிய அரசியல் மதிப்பை வழங்குமேயானால், அந்த வாய்ப்பையும் நாங்கள் இழக்கத் தயாராக இல்லை. எல்லா வாய்ப்புக்களையும் பரிசீலிப்போம். எங்களுடைய வரையறைக்குட்பட்டு வந்தால் அதை நாங்கள் ஏற்றுக் கொள்வோம்'' என்று சொல்லியுள்ளார். தி.மு.க.வுடனான நட்புறவு முறிவதற்கு முன்பாகவே, அதாவது 19.1.2004 நாளன்றே பத்திரிக்கையாளர்களிடம் இப்படிக் கூறினார். (ஆதாரம்: தாய்மண் பிப். 2004)

அதன்பிறகுதான் 24.1.2004 அன்று கருணாநிதியைச் சந்தித்து தொகுதிப் பங்கீடு கோரினார். கருணாநிதியோ சந்தர்ப்பவாத சதுரங்க ஆட்டத்தில் பழம் தின்று கொட்டை போட்டவர்; இரண்டு படகுகளிலும் கால் வைத்து சவாரி செய்ய திருமாவளவன் எத்தனிப்பதைச் சாக்காக வைத்து, அவரைக் கவிழ்த்துவிட்டு விலகிப் போய் விட்டார்.

மற்ற பிற கூட்டணிக் கட்சிகளுடன் சேர்ந்து கருணாநிதி கணக்குப் போட்டு தொல். திருமாவைக் கவிழ்த்துவிட்டார். மற்ற பிற கூட்டணிக் கட்சிகளும் தங்களுக்குக் கிடைத்தவரை இலாபமென்று போய்விட்டனர். தொல். திருமாவுக்காக யாருமே வாய்திறக்கவில்லை. இப்படித்தான் அவரது ''புரட்சித்தலைவர்'' மூப்பனாரும் போலி கம்யூனிஸ்டுகளும் முன்பு கைகழுவி விட்டு ஜெயலலிதாவுடன் கைகோர்த்துக் கொண்டு போனார்கள். ஆனாலும், இப்போது ''கம்யூனிஸ்டுகளும் காங்கிரசும் தி.மு.க. கூட்டணியிலிருந்து வெளியேற வேண்டும்!'' என்று கோரிக்கை விடுக்கிறார். ஓட்டுக் கட்சிகளைப் பற்றி இவர் என்னதான் மதிப்பீடு வைத்திருக்கிறார்?

''பூனை கருப்பாக இருந்தால் என்ன, வெள்ளையாக இருந்தால் என்ன? எலியைப் பிடித்தால் சரி'' என்பதுதான். அதாவது ஓட்டுக் கட்சிகள் எதுவாக இருந்தாலும், இதற்கு முன்பு அவை தாழ்த்தப்பட்ட மக்களுக்கு எதிரான எவ்வளவு கொடிய அடக்குமுறைகளுக்குத் துணைபோயிருந்தாலும் சரி, திருமாவளவனுக்கும் கிருஷ்ணசாமிக்கும் ஆளுக்கொரு தொகுதி ஒதுக்கி விட்டால் போதும். உடனே மூப்பனார் போன்ற பண்ணையார் ''புரட்சித்தலை



படிப்பகம்

www.padippakam.com

வர்'' ஆகிவிடுவார். கொடியங்குளம் அடக்குமுறைக்குப் பின்னணியில் ஜெயலலிதா - சசிகலா கும்பல் இருந்தது; தாமிரபரணி படுகொலைகளுக்குக் காரணமான அரசுக்குக் கருணாநிதி தலைமையேற்றது எல்லாம் மறந்துபோகும். உடனே அவர்களுடன் கூட்டணி சேர்ந்து கூடிக் குலாவுவார்கள்.

ஒருமுறை தேர்தலில் 'சீட்டு'க் கிடைக்கவில்லை என்றால் குடியே முழுகிப் போய்விட்டதைப் போல அலறுகிறார்கள். இதுவரை ஆதிக்கசாதிகள் என்று கூறிவந்த சாதித் தலைவர்களையெல்லாம் தேடி ஓடுகிறார்கள். இங்கே ஜெயலலிதா முதல் வடக்கே முலயம் வரை தூதுவிட்டுப் பார்க்கிறார்கள். ''பழிவாங்குவோம்'' என்று குளுரைக்கிறார்கள். நடிகை குஷ்பு கூட தேர்தல் அரசியல் மூலம்தான் மக்களுக்கு சேவை செய்ய வேண்டும் என்றில்லை என்கிறார். கிருஷ்ணசாமியோ ''கொள்கையே சீட்டுதான். அதன்மூலம்தான் பதவி பெற்று தலித்துகளுக்கு சேவை செய்ய முடியும். அதுதான் இலட்சியக் கொள்கை'' என்கிறார்.

தொல். திருமாவளவன் அளவுக்கு டாக்டர் கிருஷ்ணசாமி சுயமுரண்பாடுகள் நிறைந்த சவடால்கள் அடிப்பதில்லை. என்றாலும் ஓட்டுக்கட்சி அரசியலில் குதித்து சந்தர்ப்பவாத சாகசங்களில் ஈடுபடுவதில் அவருக்கு இவர் முன்னோடியாக விளங்குபவர். அதோடு டாக்டர் கிருஷ்ணசாமி அந்நிய ஏகாதிபத்திய தொண்டு நிறுவனங்கள் (NGOs) பெற்றெடுத்த சொந்த பிள்ளை; தொல். திருமாவளவனோ, அந்த நிறுவனங்கள் சுவீகரித்துக் கொண்ட தத்துப்பிள்ளை. இந்த வேறுபாடு அவர்களின் அரசியல் பாணியிலும் வெளிப்படுகிறது.

'சாதி ஒழிப்பு' இயக்கத்தை 'சாதிக் கட்சி' என்று முத்திரை குத்தி, விடுதலைச் சிறுத்தைகளை மட்டுமின்றி, ஓட்டு மொத்த சேரி மக்களையும் இழிவுபடுத்திவிட்டார் கருணாநிதி என்று கொதிக்கிறார் திருமாவளவன். ஓட்டுக் கட்சிகளே இப்படித்தான். கூட்டுச் சேர்ந்திருக்கும்போது தலையில் தூக்கி வைத்துக் கொண்டு ஆடுவதும், கூட்டு முறிந்து எதிரணிக்குப் போனபின் கீழ்தரமாக ஏசி தரையில் போட்டு மிதிப்பதும் அரசியலில் இதெல்லாம் சகஜம் தான்!

மற்றவர்கள் இவர்களை ''சாதிக் கட்சி'' என்று முத்திரை குத்தி இழிவுபடுத்துவது தவறுதான். ஆனால், இவர்களின் சொந்த நடைமுறையே சாதி ஒழிப்புக்கானதாகவும் இல்லை; சாதிய வாதத்தில் இருந்தும் வெளிவர மறுக்கிறார்கள் என்பதுதான் உண்மை. இவர்களின் சாதிய வாதத்துக்கு இதோ ஒரு சான்று.

குறிப்பாக, மார்க்சிய - லெனினியக் கம்யூனிசப் புரட்சியாளர்களின் அரசியல் - சித்தாந்த நிலைப்பாடுகளை எதிர்கொள்ளும்போது இவர்களுக்குள் உள்ள சாதியவாதம் தெட்டத்தெளிவாக வெளிப்பட்டு விடுகிறது.

தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடி மக்களின் நிலவுரிமை, பொது இடங்களில் சம உரிமை - குடிநீர், இடுகாடு, பொதுப்பாதை, கோவில் நுழைவு, தேநீர்க் கடைகளில் தனி டம்ளர்கள் போன்றவை, தீண்டாமை, பெண்களுக்கு எதிரான ஆதிக்க சாதிகளின் பாலியல் வன்முறை, கொத்தடிமை முறை மற்றும் சாதிய ஒடுக்குமுறைகள் இப்படிப் பல பிரச்சினைகளில் நக்சல்பாரி இயக்கங்கள் உயிரைக் கொடுத்துப் போராடி வருகின்றன. கலப்புத்திருமணங்கள், கூட்டு வாழ்க்கை, ஊர் - சேரி என்ற பாகுபாடின்றி சேர்ந்து பழகி - வாழ்வது இப்படிப் பல வகையிலும் சாதி ஒழிப்புக் கண்ணோட்டத்தோடும் நடைமுறையோடும்தான் அமைப்புகளையும் இயக்கங்களையும் நடத்துகின்றன. இதனால், தாழ்த்தப்பட்ட - பழங்குடி மக்களிடையே மிகுந்த அளவு செல்வாக்குப் பெற்று நக்சல்பாரி அமைப்புகள் வளர்ந்து வருகின்றன.

இதற்கு நேர்மாறாக ''தலித் அமைப்புகள்'' என்று சொல்லிக் கொண்டு சமரச, சந்தர்ப்பவாத அரசியல் நடத்தும் பிழைப்புவாதிகள், நக்சல்பாரிகள் மீது பொறாமை கொள்கிறார்கள்; அவதூறு பேசித் திரிகிறார்கள். இவர்களது சமரச - சந்தர்ப்பவாத, பிழைப்புவாத அரசியலை அம்பலப்படுத்தி, நடைமுறையிலும் மாற்றுத் திட்டங்கள் வைத்து செயல்படுவதால் ஆத்திரமடைகிறார்கள்.

''நக்சல்பாரி இயக்கத்தில் ஈடுபடும் தலித் தோழர்கள்தான் கொல்லப்படுகிறார்கள். ஆனால், அதன் தலைமை ஆதிக்க சாதியினரிடம்தான் இருக்கிறது'' என்று பச்சையாகப் புளுகுகின்றனர்.

நக்சல்பாரி இயக்கத்திலே சாதி அடையாளங்களுடன் எந்தத் தோழரும் கிடையாது. சாதி அடையாளங்களைத் துறந்தவர்கள், சாதி பாராட்டாதவர்கள், சாதி அற்றவர்கள் மட்டும்தான் நக்சல்பாரி இயக்கத்தில் உள்ளார்கள். இந்த இயக்கத்திலே ஆதிக்க சாதியிலே பிறந்தவர்கள்தான் தலைமையில் உள்ளனர், தாழ்த்தப்பட்ட சாதியிலே பிறந்தவர்கள் கிடையாது என்பது இன்னொரு பச்சைப் பொய். நக்சல்பாரி இயக்கத்தில் ஈடுபடும் ''தலித்'' தோழர்கள் சிலர் எதிரியால் கொல்லப்பட்டு தியாகியாவது உண்மைதான்! ஆனால், இவர்கள், ''தலித்'' அமைப்புகள் என்று சொல்லிக் கொண்டு, தலித் மக்களைத் திரட்டிக் கொண்டு போய் ஒட்டுமொத்தமாக சாதிவெறி அரசியல்வாதிகளிடம் பலியிடுகிறார்கள்.

அடுத்து போலி மற்றும் நிஜமான ''என்கௌண்டர்''களில் நக்சல்பாரிகள் சாதி அடையாளம் பார்த்துத்தான் போலீசால் சுட்டுக் கொல்லப்படுகிறார்களா? ''ஆதிக்க சாதி நக்சல்பாரி'' என்று அடையாளங்கண்டு அவர்களை சுட்டுக் கொள்ளாமல் போலீசார் விட்டு விடுகிறார்களா? ''தலித் சாதி நக்சல்பாரி'' என்று அடையாளம் பார்த்து அவர்களை மட்டும் போலீசார் சுட்டுக் கொல்கிறார்களா?

திருமாவளவனுக்கும், கிருஷ்ணசாமிக்கும் ''சீட்டு''க் கொடுப்பதுதான் தாழ்த்தப்பட்டவர்களை ஒரு அரசியல் சக்தியாக மதிப்பதாகும்; அப்படி இல்லையென்றால் ஒட்டுமொத்த ''சேரி மக்களையே புறந்தள்ளுவதாகவும்'' சேரி மக்கள் அனைவருக்கும் தாம் மட்டுமே ஏகப்பிரதிநிதிகள் என்பதாகவும், வேறு யாருமே சேரிமக்கள் சார்பாக பேசவோ எழுதவோ முடியாது என்பதாகவும் உரிமை கொண்டாடுகிறார்கள்.

சாதி ஒழிப்பு இயக்கமான தமது அமைப்புகளை எப்படிச் சாதிக் கட்சிகள் என்று இழிவுபடுத்தலாம் என்று கோபாவேசப்படுகிறார்கள். மற்ற சாதி சங்கங்கள், ஓட்டுக் கட்சிகளைப் பார்த்து இப்படி அவர்கள் ஆவேசப்படுவதில் நியாயம் இருக்கிறது. ஆனால், நக்சல்பாரி இயக்கத்தினரிடம் இவர்கள் சாதியவாதிகளாகவே நடந்து கொள்ளுகிறார்கள். சாதிய அரசியலை வைத்து மட்டுமே நக்சல்பாரி இயக்கத்தை இவர்கள் எதிர்கொள்ளுகிறார்கள். அதுமட்டுமல்ல. ''சாதி ஒழிப்புக்கான'' அடிப்படையோ, நடைமுறையோ, கண்ணோட்டமோ இவர்களிடம் கிடையாது. சாதி இருப்பிலேதான் ஒரு ஓட்டு வங்கியை ஏற்படுத்திக் கொண்டு பேரங்கள் பேசி ''சீட்டு'' வாங்கவும், அரசியல் இயக்கமாக இருக்கவும் முடிகிறது. இல்லையானால், திருமாவளவன், கிருஷ்ணசாமி, பஸ்வான், மாயாவதி போன்றவர்கள் அரசியல் முகவரி இல்லாமல் தொலைந்து போவார்கள் என்பது அவர்களுக்கே தெரியும்.

● ஆர்.கே.


படிப்பகம்

www.padippakam.com



# "அமெரிக்க ஆக்கிரமிப்பை எதிர்த்த போரில் நடுநிலைமைக்கு இடமில்லை"

**— ஜப்பார் அல் குபாய்ச்சி**

*சதாமைக் கைது செய்ததன் மூலம் ஆக்கிரமிப்புக்கு எதிரான ஈராக்கிய மக்களின் போராட்டம் முடங்கிப் போய்விடும் என்று அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் போட்ட கணக்கு இன்று பொய்த்துப் போய்விட்டது. ஈராக்கிய ஷியா, சன்னி பிரிவு மக்களிடையே பிளவைத் தோற்றுவித்துக் கைக்கூலிகளைக் கொண்டு ஒரு பொம்மையாட்சியை நிறுவிவிட எத்தணித்த அதன் சதித்திட்டமும் புஸ்வாணமாகிவிட்டது. ஈராக்கிய புதைகுழியில் சிக்கிக் கொண்ட அமெரிக்க - ஆங்கிலேய ஆக்கிரமிப்புப் படைகள், அடுத்தடுத்த தற்கொலைப் படைத் தாக்குதல்களால் அரண்டு போயுள்ளன. இதுவரை 500-க்கும் மேற்பட்ட அமெரிக்கச் சிப்பாய்களும் படைத் தளபதிகளும் கொல்லப்பட்டிருப்பதைக் கண்டு ஏகாதிபத்திய உலகம் பீதியில் உறைந்து போயுள்ளது.*

*இந்நிலையில், ஏகாதிபத்திய எதிர்ப்பு முகாம் எனும் அமைப்பைச் சேர்ந்தோர் நடத்திய நேர்காணலில், ஈராக்கிய நாட்டுப்பற்று கொண்டோர் கூட்டணி எனும் அமைப்பின் தலைவரான ஜப்பார் அல்குபாய்சி, ஆக்கிரமிப்பாளர்களுக்கு எதிராக ஈராக்கில் நடந்து வரும் போராட்டம் பற்றியும் ஈராக்கிய தேசிய விடுதலை முன்னணியின் நோக்கம் மற்றும் செயல்பாடுகளைப் பற்றியும் சுருக்கமாகத் தொகுத்தளித்துள்ளார். போர்க்களத்தில் நிற்கும் ஈராக்கிய விடுதலைப் போராளியின் இந்த நேர்காணல், ஈராக்கில் என்ன நடக்கிறது என்ற உண்மையைக் காட்டும்; உலகெங்குமுள்ள ஏகாதிபத்திய எதிர்ப்பாளர்களின் போராட்ட உணர்வுக்குப் புது ரத்தம் பாய்ச்சும்.*

**ஏகாதிபத்திய எதிர்ப்பு முகாம்:** *சதாம் உசேன் கைது பற்றி நீங்கள் என்ன கருதுகிறீர்கள்?*

**ஜப்பார்:** சதாம் உசேன் மயக்க மருந்து கொடுக்கப்பட்டு கைது செய்யப்பட்டுள்ளார் என்பதை யாவரும் அறிவர். இது அப்பட்டமான மனித உரிமை மீறலாகும். எனக்குக் கிடைத்த தகவலின்படி, இரு வாரங்களுக்கு முன்னரே சதாம் கைது செய்யப்பட்டு விட்டார். அமெரிக்க ஆக்கிரமிப்பாளர்கள் இதை பரபரப்பாகக் காட்சிப்படுத்துவதற்காக தயாரிப்புகள் செய்யவே தாமதப்படுத்தியுள்ளனர். ஈரானிய உளவுத் துறையினர் உதவியில்லாமல், சதாம் கைது நடவடிக்கை நடந்திருக்கவே முடியாது. ஈரானிய உளவுப் படையினர், குர்திஷ் படையின் சீருடையில் அடிக்கடி காணப்பட்டனர்.

**ஏ.எ.மு:** *குர்திஷ் படையினர் சதாமின் கைது நடவடிக்கையில் பங்கேற்றிருப்பது ஆச்சரியமாக இல்லையா? திர்கித் நகரமானது முழுமையாக ஓர் அரபு நகரம் என்ற உண்மைக்கு இது எதிரானதாக இல்லையா?*

**ஜப்பார்:** குர்திஷ் தலைமையானது அமெரிக்க ஆக்கிரமிப்பாளர்களுடன் முற்றும் முழுதாகக் கூட்டு சேர்ந்துள்ளது. மலிவான - கீழ்த்தரமான அடியாள் படையாக அமெரிக்க ஆக்கிரமிப்பாளர்கள் அவர்களைப் பயன்படுத்தி வருகின்றனர். பாக்தாத் நகரிலிருந்து வடக்கே சில கி.மீ. தூரம் சென்றாலே அங்கே சாலைத் தடுப்பரண்களில் குர்தீஷ் படைவீரர்கள் காவல் பணியில் ஈடுபட்டிருப்பதைக் காண முடியும். அவர்கள் அமெரிக்கப் படைத் தலைமையின் கீழ், தேடுதல் வேட்டைகளில் ஈடுபட்டு வருகிறார்கள். இது புதிய விவகாரமல்ல; ஆக்கிரமிப்பு தொடங்கியதிலிருந்தே அவர்கள் இப்படித்தான் உள்ளனர் என்பதை யாவரும் அறிவர்.

> *"எவர் ஒருவர் உண்மையிலேயே போர்களின்றி அமைதியும் நீதியும் நிலவ வேண்டுமென விழைகின்றாரோ, அவர் எமது சுயநிர்ணய உரிமைப் போராட்டத்தை அங்கீகரிக்கட்டும். எமது அமெரிக்க எதிர்ப்புப் போராட்டங்களை ஆதரிக்கட்டும்."*

**ஏ.எ.மு.:** *சதாமின் கைது நடவடிக்கையால், ஆக்கிரமிப்புக்கு எதிரான போராட்டம் பின்னடைவுக்குள்ளாகி உள்ளதா?*

**ஜப்பார்:** இல்லை. அதற்கு மாறாக சதாம் கைதுக்குப் பின்னர் ஆக்கிரமிப்புக்கு எதிரான போராட்டம் வலுவாகியுள்ளதை கடந்த சில வாரங்களில் நீங்கள் பார்த்திருக்கலாம். சதாமின் பாத் கட்சிக்கு வேண்டுமானால், இது தற்காலிகமாக நம்பிக்கையின்மையை ஏற்படுத்தியிருக்கலாம். சதாம் எந்தவொரு ஆக்கிரமிப்பு எதிர்ப்பு நடவடிக்கையையும் தலைமையேற்று வழிநடத்தும் நிலையில் இல்லை என்றாலும், அவர் ஒற்றை நபர் சர்வாதிகார ஆட்சியை, தனது குடும்பத்தின் - வாரிசுகளின் ஆதிக்கத்தின் கீழான ஆட்சியைத்தான் இன்னமும் பிரதிநிதித்துவப்படுத்துகிறார். இந்தக் காரணத்தால்தான் அவரது கட்சியினர் இதுவரை செயலற்று முடங்கிக் கிடந்தனர். இப்போதுதான் அவர்கள் ஆக்கிரமிப்பு எதிர்ப்பு இயக்கத்தில் சேரத் தொடங்கியுள்ளனர். பாத் கட்சியானது பல கூறுகளாகச் சிதைந்து, அதன் இறுதிநிலையை எட்டி விட்டது. எந்தவொரு பாத் கட்சி ஊழியரும் தனது சொந்த முடிவின்படி செயல்படுகிறாரே தவிர, தலைமையின் எந்தவொரு உத்தரவுக்காகவும் காத்திருப்பதில்லை. ஏனெனில் சதாமின் ஆட்சி நொறுங்கியதும் அதன் கட்சித் தலைமையும் செயல்பாடுகளும் முடமாகிவிட்டது.

இஸ்லாமிய நீரோட்டத்தைப் பொருத்தவரை, மற்ற ஆக்கிரமிப்பு எதிர்ப்பு இயக்கங்களுடன் கூட்டு சேராமல் சாக்குபோக்கு சொல்லி ஒதுங்கியிருந்த நிலைமை இப்போது மாறியிருப்பது, முக்கியமானதாகும். சதாமின் கொடுங்கோலாட்சியை நினைத்து, அம்முன்னாள் எதிரியின் சந்தேகத்துக்கிடமான விசுவாசிகளுடன் அவர்கள் இணைந்து



படிப்பகம்

www.padippakam.com

செயல்படத் தயங்குகின்றனர். பல இஸ்லாமியத் தலைவர்கள் இந்த வாதத்தை முன்வைத்து கூட்டுச் சேரத் தயங்கிய போதிலும், இன்று இந்த வாதத்துக்கு அடிப்படை இல்லாமல் போய்விட்டது. இதனால் ஆக்கிரமிப்பாளர்களை எதிர்க்கும் பல்வேறு நீரோட்டங்கள் ஒன்று சேர்ந்து பெரு வெள்ளமாகத் திரண்டு வருகிறது.

**ஏ.எ.மு.:** *அப்துல்லா ஒசலான் போல கட்டுப்பாட்டுக்குப் பணிந்து சரணடைந்து சதாமும் ஆக்கிரமிப்பாளர்களுடன் உடன்பாடு செய்து கொள்ள சாத்தியம் உள்ளதா?*

**ஜப்பார்:** நிச்சயமாக இல்லை. அமெரிக்க ஆக்கிரமிப்பாளர்களால் வெளியிடப்பட்ட புகைப்படம், அவர் மயக்க மருந்து கொடுக்கப்பட்ட நிலையில் ஒரு எந்திரம் போல் இருப்பதையே காட்டுகிறது. அவர் தெளிவான நிலையில் இருந்தால், இக்கொலைகாரர்களுடன் ஒத்துழைக்க மறுத்திருப்பார்.

**ஏ.எ.மு.:** *சதாமுக்கு எதிராக அமெரிக்கா விசாரணை நடத்தப் போவதாக அறிவித்துள்ளதைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?*

**ஜப்பார்:** இது அப்பட்டமான பிரச்சார யுத்தம். ஈராக்கில் இன்று எங்குமே சட்டபூர்வமான நீதித்துறை அமைப்பு கிடையாது. அமெரிக்க ஆக்கிரமிப்பு சட்டவிரோதமானது. அதுபோலவே ஆக்கிரமிப்புத் தலைவன் பால் ப்ரேமரால் நியமிக்கப்பட்டுள்ள பொம்மை நீதிபதிகளும் சட்டவிரோதமானவர்கள். இவர்களை ஈராக்கிய மக்கள் மதிப்பதும் கிடையாது. ஈராக்கின் பலகோடி டாலர் செல்வங்களைக் கொள்ளையடித்துச் சென்ற அமெரிக்கக் கைக்கூலியான அகமது சலாபி போன்ற குற்றம்சாட்டப்பட்ட கிரிமினல் பேர்வழிகள் நீதித்துறை பற்றியும் விசாரணை பற்றியும் பேசவோ, முயற்சிக்கவோ என்ன அருகதை இருக்கிறது? வெட்கக்கேடு!

எப்படியிருந்தாலும் மோசடித்தனமான ஒரு விசாரணையை நடத்தக் கூட அவர்கள் துணிய மாட்டார்கள். ஏனெனில், முழுமையான தயாரிப்புகளுடன் பொய்களையும் அவதூறுகளையும் உருவாக்கிக் கொண்டு விசாரணையைத் தொடங்க ஓராண்டோ அல்லது அதற்கு மேலாகவோ காலம் பிடிக்கும். மேலும், இப்படி விசாரணை ஏதும் நடத்தினால், சதாம் பல ரகசியங்களை வெளியிட்டு அவர்களது பொய்ப் பிரச்சாரங்களுக்கு ஆப்பறைந்து விடுவார் என்று அவர்கள் அஞ்சுகிறார்கள்.

**ஏ.எ.மு.:** *ஆக்கிரமிப்பு எதிரான இயக்கம் உருவாக என்ன முயற்சிகள் எடுத்துள்ளீர்கள்?*

**ஜப்பார்:** கடந்த பல மாதங்களாக நாங்கள் பல்வேறு அமைப்புகளுடன் தொடர்ந்து பேச்சு வார்த்தைகள் நடத்தி ஐக்கியப்படுத்தி வருகிறோம். விரைவில் எதிர்ப்பியக்க முன்னணியைப் பிரகடனப்படுத்தவுள்ளோம். நாங்கள் ஏற்கெனவே இம்முன்னணியின் திட்டத்தையும் கொள்கைப் பிரகடனத்தையும் தீர்மானித்துள்ளோம். அதன் முக்கிய அம்சங்கள் பின்வருமாறு:

1. அமெரிக்க ஆக்கிரமிப்பிலிருந்து ஈராக்கை விடுதலை செய்வது; ஐ.நா. தலைமையிலான 'அமைதிப் படைகள்' உள்ளிட்டு அனைத்து அன்னியப் படைகளையும் முற்றாக வெளியேற்றுவது.



2. பால் ப்ரேமரின் நிர்வாகம் போன்று அமெரிக்க ஆக்கிரமிப்பாளர்களின் எந்தவொரு ஆட்சியதிகார அமைப்பும் சட்டவிரோதமானது; மக்கள் விரோதமானது. இத்தகைய பொம்மையாட்சிகளை ஒருக்காலும் ஏற்க முடியாது; இவற்றுக்கெதிராக தொடர்ந்து உறுதியாகப் போராடுவது.

3. ஆக்கிரமிப்பாளர்களுடன் ஈராக்கியர்கள் எந்த வகையிலும் கூட்டு சேர்வதை அனுமதிக்க முடியாது. இதற்குத் தடைவிதிக்கப்படும். ஆக்கிரமிப்பாளர்களின் சேவையில் உள்ள ஈராக்கிய போலீசாரும் இதர படையணியினரும் அதிகாரிகளும் ஊழியர்களும் உடனடியாக இப்பதவிகள் - பொறுப்புகளிலிருந்து வெளியேற வேண்டும்.

4. ஆங்கிலேய - அமெரிக்க ஆக்கிரமிப்பாளர்கள் தமது கொடுங்குற்றங்களுக்காக ஈராக்கிற்கு இழப்பீட்டுத் தொகையும் நிவாரணமும் அளித்தாக வேண்டும்.

5. ஈராக்கிய மக்கள் எதிர்ப்பியக்கம் ஒரு சுதந்திரமான ஜனநாயக அரசாங்கத்தைக் கட்டியமைக்கத் தன்னை அர்ப்பணித்துக் கொள்ளும்.

**ஏ.எ.மு.:** *ஜனநாயகப்பூர்வமான, ஏகாதிபத்திய எதிர்ப்பு அரசியல் நிர்ணய சபை நிறுவப்பட்டுள்ளதா? அதற்கான ஏற்பாடுகள் நடக்கிறதா?*

**ஜப்பார்:** இது விவாதிக்கப்பட வேண்டிய விசயமாகவே உள்ளது; இதற்கான முயற்சிகள் நடந்து வருகின்றன.

**ஏ.எ.மு.:** *ஆக்கிரமிப்புக்கு எதிரான முன்னணியில் என்னென்ன அமைப்புகள் - இயக்கங்கள் உள்ளன?*

**ஜப்பார்:** எமது "ஈராக்கிய நாட்டுப்பற்று கொண்டோர் கூட்டணி" மட்டுமின்றி, பல்வேறு தேசிய - ஜனநாயக சக்திகள் இந்த முன்னணியில் உள்ளன. உதாரணமாக, டாக்டர் ஓமர் நாத்மி மற்றும் சுபி அப்துல் ஹமீத் ஆகியோர் தலைமையிலான நாசரியவாதிகள் இயக்கம், அப்தெல் லத்தீப் அல் மெயில்மயாவின் "ஈராக் எமது தாயகம்", என்ஜினியர் காலத் அல் மெய்னியின் "ஈராக்கிய சுதந்திரத்துக்கான சேர்க்கை" முதலான பல்வேறு சக்திகள் இம்முன்னணியில் உள்ளன. டாக்டர் ஹாரித் அல் அல்தாரியின் "இஸ்லாமிய கமிட்டி" என்ற அமைப்பும் இம்முன்னணியில் அங்கம் வகிக்கிறது. 1960-களின் மத்தியில் இயங்கிவந்த ஈராக்கிய கம்யூனிஸ்ட் கட்சி (ICP - Central Command) யிலிருந்து பிளவுபட்டு வெளியேறிய இப்ராஹிம் அல்லாவி தலைமையிலான குழுவும் எம்முடன் நெருக்கமாக செயல்பட்டு வருகிறது.

**ஏ.எ.மு.:** *முக்தாடா அல் சதர் தலைமையிலான குழு (ஷியா பிரிவு) எவ்வாறு உள்ளது? அவர் சரணடைந்து விட்டாரா?*

**ஜப்பார்:** இல்லை, சரணடைவு என்பது மிகைப்படுத்தப்பட்ட சொல். ஷியா பிரிவு முசுலிம்களின்

*"எமது நாட்டின் உயர்ந்த பண்புகளின் அடிப்படையில் எமது ஆயுதரீதியிலான எதிர்ப்பியக்கம் சட்டபூர்வமானது; நியாயமானது. நாங்கள் ஒரு போதும் நிராயுதபாணிகளாக எங்களை மாற்றிக் கொள்ள மாட்டோம்."*



படிப்பகம்

www.padippakam.com



பால் ப்ரேமர்;
ஈராக்கின் காலனியாதிக்க ஆட்சியதிகாரத் தலைவன்.

நாடு என்பதால் ஈரானிய அரசாங்கத்தின் நிர்பந்தங்களால் அவர் ஊசலாடக் கூடும். ஈரானிய அரசாங்கத்தால் தரப்படும் அரசியல் நிர்பந்தங்கள் மட்டுமல்ல; பல்லாயிரக்கணக்கான ஈரானிய ஏஜெண்டுகள் இங்கு வெளிப்படையாகவே கிழக்கு மற்றும் தெற்கு மாகாணங்களில் செயல்பட்டு வருவதைக் குறிப்பிட விரும்புகிறேன். முக்தாடாவுடன் நாங்கள் இருமுறை விவாதித்தோம். அவர் சாத்வீகமான முறையில் அமெரிக்க ஆக்கிரமிப்பாளர்களை எதிர்க்கப் போவதாகக் கூறினார். அதாவது, அவர் எமது இராணுவ ரீதியான எதிர்த்தாக்குதலை எதிர்க்கிறார். ஆனால், இராணுவ ரீதியிலான தற்காப்பு நடவடிக்கை இல்லாமல், அமெரிக்காவை விரட்டியடித்துவிட முடியும் என்பதை எவரும் நம்பமாட்டார்கள்.

ஒரு சட்ட விரோத ஆக்கிரமிப்பின் கீழ், இராணுவ எதிர்த்தாக்குதலைத் தவிர சட்ட பூர்வ வழிமுறைகள் வேறு என்ன இருக்க முடியும்? எமது ஆயுத ரீதியிலான எதிர்த்தாக்குதல் நடவடிக்கையானது முற்றிலும் சட்டபூர்வமானது; நியாயபூர்வமானது. இது அனைத்துலக இயற்கை நியதிப்படியும் ஐ.நா. சாசனத்தின்படியும் சட்டபூர்வமானது, நியாயமானது. மேலும், இஸ்லாமிய கோட்பாடுகளின்படியும் எமது நாட்டின் உயர்ந்த பண்புகளின் அடிப்படையிலும் எமது ஆயுதரீதியிலான எதிர்ப்பியக்கம் சட்டபூர்வமானது; நியாயமானது. நாங்கள் ஒருபோதும் நிராயுதபாணிகளாக எங்களை மாற்றிக் கொள்ள மாட்டோம். முக்தாடா கூறுவதைப் போல, சாத்வீக எதிர்ப்பு நடவடிக்கை என்ற பெயரால் எங்களைக் கோழைகளாக வரம்பிட்டுக் கொள்ளவும் மாட்டோம். இருப்பினும், அவரை எமது பக்கம் வென்றெடுக்க நாங்கள் தொடர்ந்து முயற்சிப்போம்.

**"எல்லா ஆக்கிரமிப்பாளர்களும் அவர்களது கூட்டாளிகளும் எமது எதிர்ப்பியக்கத்தின் நியாய உரிமைப்படி, தாக்குதல் இலக்குகளாவர். அவர்கள் பாதுகாப்பாக உயிர் பிழைக்க வேண்டுமானால், எங்கள் நாட்டை விட்டு அவர்கள் ஓடிவிடுவதே நல்லது."**

**ஏ.எ.மு.:** *ஷியா பிரிவு மதக்குழுக்கள் எவையேனும் உங்களது முன்னணியில் உள்ளதா?*

**ஜப்பார்:** இல்லை; இப்போதைக்கு எந்தக் குழுவும் இல்லை. இருப்பினும், ஷேக் அல் மதானியின் நலிவடைந்துவிட்ட குழு எம்முடன் இணைந்து செயல்பட முன்வந்துள்ளது. ஆனால், அக்குழுவின் தலைவர்களான ஷேக்கின் இரு சகோதரர்களும் அமெரிக்க ஆக்கிரமிப்பாளர்களால் கைது செய்யப்பட்டுள்ளதால், அதன் ஆதரவாளர்கள் எம்முடன் இணைந்து செயல்படத் தயங்குகின்றனர். இது தவிர, பல்வேறு தனிப்பட்ட மதக் குழு தலைவர்களும் ஷியா பிரிவு தலைவர்களும் எமது முன்னணியில் உள்ளனர். அவர்கள் ஷியா பிரிவு மக்களிடையே குறிப்பிட்ட அளவுக்குச் செல்வாக்கு செலுத்துபவர்களாகவும் உள்ளனர். அதே சமயம் அவர்களை ஷியா பிரிவு முசுலீம்களைக் கட்டுப்படுத்துமளவுக்கு செல்வாக்குமிக்க மதத் தலைவர்கள் என்று குறிப்பிட முடியாது. அந்த இடம் இன்னமும் வெற்றிடமாகவே உள்ளது. அதற்காக நாங்கள் காத்துக் கொண்டிருக்காமல், எமது போராட்டங்களுக்கு தொடர்ந்து முயன்று வருகிறோம்.

**ஏ.எ.மு.:** *சதாமின் பாத் கட்சி உங்கள் முன்னணியில் அங்கம் வகிக்கிறதா?*

**ஜப்பார்:** அதிகாரபூர்வமாக அக்கட்சியின் பிரதிநிதித்துவம் ஏதுமில்லை. ஏனெனில், கட்சித் தலைமை தலைமறைவாகி பதுங்கி விட்டது. ஆனால், தலைமைக்குப் பதிலாக, பெருமளவிலான அணிகள் எம்முடன் சேர்ந்துள்ளனர்; சிலர் வெளியிலிருந்து எமது முன்னணியை ஆதரிக்கின்றனர்.

**ஏ.எ.மு.:** *குர்திஷ் படைகள் பற்றி...?*

**ஜப்பார்:** குர்திஷ் பகுதியில் நடப்பதாக கூறப்படுபவையெல்லாம் நம்பகமான செய்திகள் அல்ல. அமெரிக்க ஆக்கிரமிப்பாளர்களுடன் இப்படைகள் கூட்டணிக் கட்டிக் கொண்டிருப்பதானது, அதன் தலைமையை மட்டுமின்றி, குர்து இன மக்களையே பெருமளவு சீரழித்துள்ளது. நாங்கள் முயற்சி செய்தாலும், குர்து படைகள் எம்முடன் இணையாததற்கு இச்சீரழிவும் ஒரு காரணமாக உள்ளது. இருப்பினும் எமது கதவுகள் திறந்தே உள்ளன.

**ஏ.எ.மு.:** *போர் எதிர்ப்பு இயக்கத்தினரும் பெருமளவிலான அராபியர்களும் பிரான்சு மற்றும் ஜெர்மனி மீது நம்பிக்கை வைத்துள்ளார்களே? இத்தகைய ஏகாதிபத்திய சக்திகளின் பலாபலத்தில் இவர்களது பாத்திரம் பற்றி நீங்கள் என்ன கருதுகிறீர்கள்?*

**ஜப்பார்:** நாங்கள் எமது விடுதலைப் போராட்டத்தை முற்றும் முழுதாக எமது மக்களைச் சார்ந்தும், அரபு உலகின் ஒற்றுமையையும், இதர நாடுகளின் மக்கள் போராட்டங்களின் ஆதரவையும் அடிப்படையாகக் கொண்டுதான் கட்டியமைத்துள்ளோம். ஐரோப்பிய ஏகாதிபத்திய நாடுகள் அமெரிக்காவின் ஒருதலைப்பட்சமான - தன்னிச்சையான ஆக்கிரமிப்பை ஏற்காமல் இருக்கலாம். ஆனால், இந்த ஏகாதிபத்திய அரசுகள் நிச்சயமாக எமது ஆக்கிரமிப்புக்கு எதிரான போராட்டத்தை ஆதரிக்கவில்லை என்பதே உண்மை.

பிரெஞ்சு அதிபர் சிராக்கை எடுத்துக் கொள்ளுங்கள். அவர் எமது துரோகிகளான ஜலால் தலாபானி மற்றும் அல் ஹக்கீம் ஆகியோரை அதிகார பூர்வமாக அங்கீகரிக்கிறார். இத்துரோகிகள் அமெரிக்க ஆக்கிரமிப்பாளர்களுடன் கூட்டுச் சேர்ந்து செயல்பட்டவர்கள். இதை நாங்கள் ஒருக்காலும் மறக்க மாட்டோம்.

ஜெர்மன் அதிபர் ஷெரோடர், சிராக்குக்கு சற்றும் சளைத்தவரல்ல. அவர் எமது நாட்டின்



படிப்பகம்

www.padippakam.com

அதிபரான சதாமைக் கைது செய்ததற்காக அமெரிக்காவைப் பாராட்டியுள்ளார். இன்னொரு நாட்டின் அதிபரை ஒரு ஆக்கிர மிப்புப் படையினர் கைது செய்வது எந்தவகையில் நியாயமா கும்? இச்சட்ட விரோத - கிரிமினல் நடவடிக்கையை அவர் ஏன் எதிர்க்கவில்லை? நாங்கள் மூன்றாம் உலகைச் சேர்ந்த ஒடுக்கப் பட்ட நாட்டவர்கள்; மேலும், நாங்கள் ஆக்கிரமிப்பாளர்களை எதிர்த்து எமது சுதந்திரத்துக்காகவும் சுய நிர்ணய உரிமைக்காக வும் போராடி வருகிறோம். இதன் காரணமாகவே ஜெர்மானிய ஏகாதிபத்தியவாதிகள் இப்படி திமிராகவும் கீழ்த்தரமாகவும் நடந்து கொள்கின்றனர்.

**ஏ.எ.மு.:** *போர் எதிர்ப்பு இயக்கத்தினருக்கு நீங்கள் கூற விரும்புவதென்ன?*

**ஜப்பார்:** சில நாட்களுக்கு முன்பு கெய்ரோவில் (எகிப்து) அமெ ரிக்க ஆக்கிரமிப்புக்கு எதிரான கருத்தரங்கம் நடந்தது. இருப்பி னும் அதில் பங்கேற்ற ஈராக்கிய மொழி பேசும் போர் எதிர்ப்பு இயக்கத்தினர் எவரும் எமது போராட்டத்தை அங்கீகரிக்க வில்லை. இதே நபர்கள் ஜப்பானியப் பிரதமரையும் சந்தித்துப் பேசியுள்ளனர். ஜப்பானிய அரசோ, எமது எதிர்ப்பியக்கத்தை ஒடுக்க அமெரிக்க ஆக்கிரமிப்பாளர்களுக்கு உதவியாக தனது படைகளை அனுப்ப விழைகிறது. இந்த நபர்கள், எமது எதிர்ப் பியக்கத்தினர் இரு ஜப்பானிய தூதரக அதிகாரிகளைக் கொன் றொழித்ததைச் சாடி, எம்மை கிரிமினல்கள் என்று குற்றம் சாட்டியுள்ளனர். இதை நாங்கள் அங்கீகரிக்க முடியாது.

எல்லா ஆக்கிரமிப்பாளர்களும் அவர்களது கூட்டாளிகளும் எமது எதிர்ப்பியக்கத்தின் நியாயவுரிமைப்படி, தாக்குதல் இலக் குகளாவர். அவர்கள் பாதுகாப்பாக உயிர் பிழைக்க வேண்டுமா னால், எங்கள் நாட்டைவிட்டு அவர்கள் ஓடிவிடுவதே நல்லது. இல்லையேல், ஆயுதரீதியிலான எமது தாக்குதல் களை அவர்கள் எதிர்கொள்ளத்தான் வேண்டும்.

கெய்ரோவில் நடந்த கருத்தரங்கில், "நடந்ததை மறப்போம்; மன்னிப்போம். இனி நடப்பதை நினைப்போம்; புதிய சகாப்தத்தைத் தொடங்கு வோம்" என்று பொதுவில் அறைகூவல் விடுத் துள்ளனர். ஆனால், அமெரிக்கப் படையெடுப்பை யும் ஆக்கிரமிப்பையும் அடக்குமுறையையும் நாங் கள் எப்படி மறக்க முடியும்? மன்னிக்க முடியும்? எமது எல்லா அரசியல் நடவடிக்கைகளும் யதார்த்த உண்மைகளிலிருந்துதான் தொடங்குகின் றன. அமெரிக்க ஆக்கிரமிப்பு என்ற நிகழ்கால உண் மையை நாங்கள் எப்படி மூடிமறைக்க முடியும்? ஆக்கிரமிப்பாளர்களை எப்படி மன்னிக்க முடி யும்? நான் போர் எதிர்ப்பு இயக்கத்தினரிடம், பொத்தாம் பொதுவாக உபதேசம் செய்து கொண் டிருக்காமல், ஏதேனும் ஒரு பக்க நிலையை எடுக் குமாறு கோருகிறேன். நடுநிலைமை என்பது ஒருக் காலும் சாத்தியமில்லை. எங்கள் நாடு விடுதலையா கும் வரை நாங்கள் தொடர்ந்து போராடுவோம். இது எமது உரிமை; எமது கடமை.

எவர் ஒருவர் உண்மையிலேயே போர்களின்றி அமைதியும் நீதியும் நிலவ வேண்டுமென விழை கின்றாரோ, அவர் எமது சுயநிர்ணய உரிமைப் போராட்டத்தை அங்கீகரிக்கட்டும். எமது அமெ ரிக்க எதிர்ப்புப் போராட்டங்களை ஆதரிக்கட்டும். அவ்வாறு செய்யாதவர்கள் ஏதோவொரு வகை யில் எதிரிகளான ஏகாதிபத்தியவாதிகளுக்கு உதவு கிறார்கள் என்றுதான் பொருள்.



பாக்தாத்துக்குத் தெற்கே ஹாஸ்வா கிராமத்தின் அருகே போராளிகளால் தாக்கப்பட்ட அமெரிக்கக் காலனியாதிக்க அதிகாரிகளின் அதிநவீன காரை உடைத்து வெற்றிக் களிப்பில் கூத்தாடும் ஈராக்கிய மக்கள்.

**ஏ.எ.மு.:** *அரபு மக்களுக்கு நீங்கள் கூற விரும்புவதென்ன?*

**ஜப்பார்:** ஆகப்பெரும்பான்மையான அரபு மக்கள் அமெரிக்க ஆக்கிரமிப்பாளர்களுக்கு எதிரான எமது போராட்டத்தை ஆதரித்து வருகிறார்கள் என் பதை நாங்கள் அறிவோம். ஈராக் மட்டுமின்றி, பாலஸ்தீனத்தில் தொடரும் போராட்டத்தையும் அவர்கள் பேருற்சாகத்துடன் ஆதரித்து வருகிறார் கள். அரபு உலகைச் சேர்ந்த நாங்கள் அனைவரும் ஒருதாய் மக்கள்; ஒரே தேசத்தினர். எமது போராட் டம் அரபு மக்களை ஐக்கியப்படுத்தி, மேலும் வளர்ந்து முன்னேறவே செய்யும். நாங்கள் ஐக்கி யப்பட்டு போராடி, அரபு உலகிலிருந்து ஆக்கிரமிப் பாளர்களை முற்றாகத் துடைத்தெறிவோம்.

**ஏ.எ.மு.:** *ஆக்கிரமிப்புக்கு எதிரான போராட்டத்துக்கு ஆதரவான, அனைத்துலக போர் எதிர்ப்பு பிரதிநிதிகள் குழுவை நீங்கள் சந்திக்க வாய்ப்பு உள்ளதா?*

**ஜப்பார்:** ஆம்; நிறையவே வாய்ப்புள்ளது. உண்மையான போர் எதிர்ப்பு இயக்கச்செயல்வீரர் கள் தமது ஆதரவைத் தெரிவிக்க வருமாறு வரவேற் கிறோம். ஆக்கிரமிக்கப்பட்ட ஈராக்கிற்கு வருபவர் களுக்கு இரண்டே வழிகள்தான் உள்ளன. ஒன்று, ஆக்கிரமிப்புக்கு எதிரான மக்கள் போராட்டத்தை ஆதரிப்பது; அல்லது, ஆக்கிரமிப்பாளர்களின் பக்கம் சேர்ந்து கொள்வது. மூன்றாவது வழி என்று எதுவுமில்லை.

*(நன்றி: "ப்ரண்டியர்", ஜனவரி 18-24)*



படிப்பகம்



## மறுகாலனிய, பார்ப்பனியப் பண்பாட்டு படையெடுப்புக்கு எதிராக....

# துவளாதே தமிழகமே... போராடு!

**கோ**வில்களில் அன்னதானத் திட்டம்; மதமாற்றத் தடைச் சட்டம்; கிராமப் புறக் கோயில்களில் ஆடு - கோழி பலியிடத் தடை எனத் தமிழ்நாட்டைப் பார்ப்பன நாடாக்க ஜெயா எடுத்து வரும் முயற்சிகள் ஒருபுறம்;

அரசு கல்லூரிகள் பல்கலைக்கழகத்துடன் இணைப்பு; தனியார் மருத்துவக் கல்லூரிகளுக்கு அனுமதி; இலவச மின்சாரம் ரத்து; நெல்கொள்முதல் ரத்து; அரசு ஊழியர்களுக்கு வழங்கப்பட்டு வந்த சலுகைகள் ரத்து; அரசு ஊழியர்கள் வேலைநிறுத்தம் செய்யத் தடை எனத் தமிழக உழைக்கும் மக்கள் மீது ஜெயா தொடுத்துவரும் மறுகாலனியத் தாக்குதல்கள் மறுபுறம்.

- இதுதான் கடந்த மூன்றாண்டு கால தமிழகத்தின் முகவிலாசம். ஒருபுறம் பார்ப்பன பயங்கரவாதம், இன்னொரு புறம் மறுகாலனிய பயங்கரவாதம் என்ற கிடுக்கிப் பிடிக்குள் சிக்கிக் கொண்டு, அதிலிருந்து விடுபட போராடித் தோற்று, துவண்டு கிடக்கிறது தமிழகம்.

இந்த இருண்ட சூழலில்தான் மறுகாலனிய, பார்ப்பனிய பண்பாட்டு படையெடுப்புக்கு எதிரான போர் முழக்கமாக, மக்கள் கலை இலக்கியக் கழகம் (ம.க.இ.க.) தனது பதினோராம் ஆண்டு தமிழ் மக்கள் இசை விழாவை தஞ்சையில் பிப்ரவரி 21-ஆம் தேதி நடத்தி முடித்தது. இந்த இசை விழா துவண்டு கிடக்கும் தமிழகத்திற்கு மீண்டும் எழுந்து போராடும் நம்பிக்கையை ஊட்டியிருக்கிறது என்றால் அது மிகையாகாது. சிறுபொறிதான் பெருங்காட்டுத்தீயை உருவாக்குகிறது!

இசை விழாவையொட்டி ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கருத்தரங்கம் **தோழர் பீட்டர்** அரங்கிலும்; கலை நிகழ்ச்சிகளும், இசை நிகழ்ச்சிகளும் **தோழர் தீபன்** அரங்கிலும் நடந்தன. தமிழ் மக்கள் இசை விழா அரங்கின் நுழைவாயிலுக்கு **தோழர் ரவி**யின் பெயர் சூட்டப்பட்டிருந்தது.

இசை விழாவின் கருத்தரங்கிற்கு தலைமை வகித்த ம.க.இ.க.வின் மாநில இணைச் செயலர் தோழர் காளியப்பன், தனது தலைமை உரையைத் தொடங்குவதற்கு முன்பாக, புரட்சிகர அமைப்புகளில் பணியாற்றிக் கொண்டிருக்கும் பொழுதே மறைந்த தோழர்கள் பீட்டர், தீபன், ரவி ஆகியோரின் அர்ப்பணிப்பு உணர்வைப் பற்றிக் குறிப்பிட்டார். கருத்தரங்கிற்கு வந்திருந்த அனைவரும் அப்புரட்சிகரத் தோழர்களின் நினைவை நெஞ்சில் ஏந்தி, எழுந்து நின்று, சிவப்பஞ்சலி செலுத்தினர்.

இதன்பின் தலைமை உரையாற்றிய **தோழர் காளியப்பன்**, "தெய்வீக விழா எனப் பீற்றிக் கொள்ளப்படும் தியாகய்யர் ஆராதனை விழா, தியாகய்யர் சமாதியைப் பராமரிக்கும் டிரஸ்டின் சொத்துக்களைப் பாதுகாக்கும் விழாவாகச் சுருங்கிப் போய் விட்டது; அதேசமயம், பார்ப்பனக் கும்பலின் பண்பாட்டு ஆக்கிரமிப்புக்கு எதிராக நடத்தப்படும் வரும் தமிழ் மக்கள் இசை விழா அனைத்துத் தரப்பு மக்களின் அமோக ஆதரவைப் பெற்று வளர்ந்து வருகிறது" எனக் குறிப்பிட்டார்.

எனினும், தமிழ் மக்கள் இசை விழா அடைந்து வரும் வெற்றியை நாம் பண்டிகையைப் போலக் கொண்டாட முடியாது. மறுகாலனியாக்கம், பார்ப்பன பயங்கரவாதம் - இவற்றுக்கு எதிரான போராட்ட உணர்வை வளர்த்துக் கொள்ளும் வாய்ப்பாக இந்த விழாவை நாம் பார்க்க வேண்டும்" எனச் சுட்டிக் காட்டிய தோழர் காளியப்பன், புரட்சிகரப் போராட்டங்களை முன்னைவிடத் தீவிரமாக நடத்த வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார்.

**"ஏகாதிபத்திய உலகமயமாக்கமும், மக்களின் உணர்வுகளும்"** எனும் தலைப்பில் கருத்தரங்கில் உரையாற்றிய மும்பையைச் சேர்ந்த **முனைவர் ஆனந்த் தெல்தும்ப்டே**, "ஏழ்மை, வறுமை, பட்டினி, சுற்றுப்புறச் சூழல் மாசுபாடு என உலகமயம் ஏற்படுத்தும் பொருளாதார பாதிப்புகள் - சுரண்டல் பற்றிதான் பெரும்பாலான அறிஞர்கள் பேசுகின்றனர். ஆனால், உலகமயம் மக்களின் சிந்தனையில், உணர்வில் ஏற்படுத்தும் பாதிப்புகளை அநேகமாக யாரும் ஆய்வு செய்வதில்லை எனச் சுட்டிக் காட்டினார்.

"உலகமயத்தால் ஓட்டாண்டியாக்கப்பட்ட மக்கள், எல்லாவற்றிடமிருந்தும் அந்நியப்பட்டுப் போகிறார்கள். இந்த அந்நியமயம் பல்வேறு விதமான சமூகக் குழப்பங்களில் வெளிப்படு

கருத்தரங்கில் கலந்து கொண்ட பார்வையாளர்களில் ஒரு பகுதி.



www.padippakam.com



முனைவர் ஆனந்த் தெல்தும்ப்டே

கிறது. கிரிமினல் குற்றங்கள் அதிகரிப் பது; மக்கள் மனிதப் பண்புகளை இழந்து காட்டுமிராண்டிகளைப் போல நடந்து கொள்வது (உ.ம்: குஜராத் இனப் படுகொலை) இளைஞர்கள் மத்தியில் பொறுக்கி கலாச்சாரம் வேரூன்றி, அதன் காரணமாக பஜ்ரங்தள், சம்பாஜி படை போன்ற பாசிச குண்டர் அமைப் புகள் வளருவது என இந்த வெளிப் பாடுகளுக்குப் பல உதாரணங்களைத் தரலாம்.''

''உலகமயம் மக்கள் மத்தியில் ஏற் படுத்தும் சூதாட்ட மனோபாவம், நல்ல மாற்றம் ஏற்படும் என்ற நம்பிக்கையை வேரறுத்து விடுகிறது; இந்த சமூகக் கட்டமைப்பில் தவறு இருப்பதாக மக்க ளுக்குத் தோன்றவில்லை. தன்னைப் போலவே பிறரையும் பார்க்க மக்கள் தவறிவிடுகிறார்கள்.''

''முன்பிருந்ததைப் போலன்றி, தற் பொழுது மத்திய தர வர்க்கம் தனது ஏகாதிபத்திய எதிர்ப்புணர்வை முற்றி லுமாக இழந்துவிட்டது. தகவல் தொடர்பு தொழில்நுட்பம்; உயிர் தொழில்நுட்பம், சுற்றுலா போன்ற சேவைத் துறைகளில் உருவாக்கப்படும் வெள்ளுடை வேலைகள் மூலம் மத்திய தர வர்க்கத்தைத் தன் பக்கம் கவர்ந்து, தனது சமூக அடித்தளத்தை விரிவாக்கிக் கொள்ள உலகமயம் முயலுகிறது.''

உலகம் ஒரு சூதாட்ட அரங்கம்; அதில் எதுவுமே நிச்சயம் கிடையாது என்ற சிந்தனையை உருவாக்குவதன் மூலம், மக்களைப் போலி சாமியார்களி டம் நம்பிக்கை கொள்ள வைக்கிறது. இந்தக் கலாச்சாரம், மக்களிடம் தனி நபர் வாதத்தை விதைப்பதன் மூலம், அவர்களின் சமூக உணர்வைக் கொன்று விடுகிறது. அவர்கள் ஒன்று சேர்வதைத் தடுத்து விடுகிறது.''

''இந்த நவீன தாராளமயம் அடிப்ப டையிலேயே ஜனநாயக விரோதத் தன்மை கொண்டது. இதன் உள்முரண் பாடுகள் காரணமாக, இந்த சமூகக் கட்டமைப்பு நீண்ட காலத்திற்குத் தாக்குப் பிடிக்க முடியாது என்பது



பேராசிரியர் பெரியார்தாசன்

சந்தேகத்திற்கு இடமற்ற உண்மையாக இருந்தாலும், மாற்றம் தானாக வந்து விடாது. அதற்கு புரட்சி வேண்டும்: வர்க்க அரசியல் கல்வி அளிப்பதன் மூலமும், போராட்டங்களின் மூலமும் மக்களைப் புரட்சிக்குத் தயார்படுத்த வேண்டும்'' எனத் தனது உரையில் ஆனந்த் தெல்தும்ப்டே குறிப்பிட்டார்.

**''பட்டினிச் சாவுகள், தற்கொலை கள்.... பாய்ஸ், தனுஷ், பச்சை ஒயின் ஷாப்....''** எனும் தலைப்பில் சிறுகதை எழுத்தாளர் **தோழர். எஸ். லட்சுமணப் பெருமாள்** உரையாற்றினார்.

''உழைக்கும் மக்கள் பிழைப்புக் காக நடத்தும் இட்லிக் கடையை பத்து மணிக்கு மூடச் சொல்லி மிரட்டும்

# கலகக்காரர் தோழர் பெரியார்

தமிழ் மக்கள் இசை விழாவின் காலை அமர்வில், மதுரை நிஜ நாடக இயக்கத்தின் ''கலகக்காரர் தோழர் பெரியார்'' என்ற நாட கம் (சுருக்கமான வடிவில்) நிகழ்த்தப்பட் டது.

பெரியார் என்றதும் அவரின் கடவுள் மறுப்பு நாத்திகப் பிரச்சாரம்; பார்ப்பன எதிர்ப்பு; மூடநம்பிக் கைகளுக்கு எதிரான பகுத்தறிவுப் பிரச்சா ரம்; இட ஒதுக்கீடுக் கான போராட்டங்கள்; சாதி, தீண்டாமை மற் றும் பெண்ணடிமைத் தனத்தை எதிர்த்த பேச்சுக்கள், போராட் டங்கள் - இவைதான் சட்டென நமது நினைவில் எழும்.

நாடகமும் கூட பெரியாரின் பிறப்பு, இறப்பு என்ற விதத்தில் தனிமனித வாழ்க்கையைக் கூறா மல், அவரின் இயக் கம் நடத்திய போராட் டங்களினூடாக, அவரின் வரலாற்றைச் சித் தரித்தது. நாடகத்தைப் பார்ப்பவர்களின் மனதில் பெரியாரின் கருத்தியலைப் பதிய வைக்கும் விதமாக நாடகம் நடத்தப்பட் டது.

நாடகத்திற்கும், அதைப் பார்ப்பவருக் கும் உள்ள இடைவெளியைக் குறைக்க இந்நாடகம் நெடுகிலும் முயற்சிகள் மேற் கொள்ளப்பட்டிருந்தன. ''இளைஞர்க ளுக்கு என்ன சொல்லுகிறீர்கள்?'' என்ற கேள்விக்கு, பெரியார், ''இளைஞர்களே, சாகத் துணிவு கொள்ளுங்கள்'' என்று கூறிக் கொண்டே, மேடையை விட்டு இறங்கிப் பார்வையாளர்கள் மத்தியில் சென்று திரும்பி யதை இதற்கு உதார ணமாகக் கூறலாம்.




ஜெயாவின் பார்ப் பன - பாசிச ஆட்சி யில், அவரின் ஆதர வோடு ஆர்.எஸ்.எஸ். பயங்கரவாதக் கும்பல் தமிழகத்தில் காலூன்றிக் கொண்டி ருக்கும் இவ்வேளை யில், பக்தியும், மூட நம்பிக்கைகளும் தமி ழகத்தில் பொங்கிக் கொண்டிருக்கும் இந் நேரத்தில், இந்த நாட கம் ஒரு வரலாற்றுக் கட்டாயம் என்றுதான் கூறவேண்டும். ●



படிப்பகம்

www.padippakam.com



தோழர் ஆ. சிவசுப்பிரமணியன்

தமிழக அரசு, டாஸ்மாக் சாராயக் கடையை நடுராத்திரி வரைக்கும் திறந்து வைக்கிறது'' என ஜெயா ஆட்சியின் கேவலத்தைச் சுட்டிக் காட்டிய தோழர் எஸ். லட்சுமணப் பெருமாள், ''40 நாள் பட்டினி கிடந்து தமிழக நெசவாளிகள் சாகிறார்கள். காவிரிப் பாசனப் பகுதியில் மட்டும் 18 விவசாயிகள் தற்கொலை செய்து கொண்டு செத்துப் போனார்கள். விருதுநகர் மாவட்டத்தில் நடந்து வந்த மானாவாரி விவசாயம், தீப்பெட்டி - பேனா நிப்பு தயாரிப்பு எல்லாம் போய்விட்டது. ஆனால், நம் மாளு இதைப் பற்றியெல்லாம் கவலைப்படாமல் பெப்சி உமாவுக்கு போன்போட்டு வழியிறான்'' எனத்தமிழகம் இழிந்து போய்க் கிடக்கும் அவலத்தையும் குறிப்பிட்டார்.

**''வாஸ்து, ராசிக்கல், சோதிடம், சாமியார்கள்.... வழியறியா மக்களின் வடிகாலாய் மூட நம்பிக்கைகள் - அதில் பார்த்தீனியக் காடாய்ப் பரவும் பார்ப்பனியம்''** எனும் தலைப்பில் **பேராசிரியர் பெரியார்தாசன்** உரையாற்றினார். ''குரங்குக்குக் கூட கையில் ரேகைகள் உண்டு. ஆனால், எந்தக் குரங்காவது கைரேகை ஜோசியம் பார்த்தது உண்டா? என நக்கலாகத் தனது உரையைத் தொடங்கிய அவர், ''ஆங்கிலத்தில் Cauvery (காவிரி) என எழுதுவதற்குப் பதிலாக, எண் கணித ஜோதிடப்படி மூன்று ''ஏ'' (A) சேர்த்து CAAAUVERY என எழுதினால் காவிரியில் தண்ணீர் வந்து விடுமா? வீடு இல்லாதவனுக்கு வாஸ்து உண்டா?'' என்ற கேள்விகளை எழுப்பி, இம்மூட நம்பிக்கைகளை அம்பலப்படுத்தினார்.

''செவ்வாய் தோஷத்துக்குப் பரிகாரமாக ஆயிரம் பிராமணர்களுக்கு அன்னதானம், வஸ்திர தானம், சொர்ண தானம் செய்ய வேண்டும் எனப் பார்ப்பனர்கள் ஆதாயம் அடையும் நோக்கில் எழுதி வைத்திருக்கிறார்கள். இயக்கவியலுக்குப் புறம்பான ஜோதிடம், வாஸ்துவை ஆர்.எஸ்.எஸ். கும்பல் ஆதரிக்கிறது. இம்மூடநம்பிக்கைகளை பத்திரிகை, தொலைக்காட்சி மூலம் பிரபலப்படுத்துகிறார்கள்'' என ஜோதிடத்தின் மூலம் நேரடியாக ஆதாயமடைபவர்களைச் சுட்டிக் காட்டிய பேரா. பெரியார்தாசன், ''வேலை கிடைக்கவில்லையா, வா, சேர்ந்து போராடலாம் என்கிறது ம.க.இ.க. ஆனால், ஜோதிடமோ கொஞ்சம் பொறுத்திரு என்கிறது. போராட்டம் நடந்துவிடக் கூடாது என்பதற்காகத் தனித்தனியாகத் தீர்வு சொல்லுகிறது'' என ஜோதிடத்தின் தீய நோக்கத்தை அம்பலப்படுத்தினார்.

**''காவிமயமாகும் வரலாறு''** என்ற தலைப்பில் உரையாற்றிய **தோழர் ஆ. சிவசுப்பிரமணியன்,** ''காவிமயத்திற்கு முன் உள்ள வரலாற்று நூல்களில் நிறைய ஏமாற்று உண்மைகள் உள்ளன. இதற்கு உதாரணமாக, ''ஆரியர் வருகை'', ''இசுலாமியர் படையெடுப்பு'' என வரலாற்று நூல்கள் குறிப்பிடுவதை எடுத்துக் கூறினார்.

''காவிமயத்திற்கு முன் உள்ள வரலாறு தேர்ந்தெடுத்த சிலவற்றைதான் நமக்கு வரலாறாக அறிமுகப்படுத்துகிறது'' என அம்பலப்படுத்திய பேராசிரியர் ஆ. சிவசுப்பிரமணியன், ''காந்தி நடத்திய தண்டி யாத்திரையைக் குறிப்பிடும் வரலாறு, தாழ்த்தப்பட்டோரின் உரிமைக்காக அம்பேத்கர் நடத்திய சௌதார் குளத்தில் நீர் எடுத்து அருந்தும் போராட்டத்தை ஒதுக்கித் தள்ளி விட்டது. அம்பேத்கர் மனுநீதியைத் தீயிட்டுக் கொளுத்திய வரலாற்று சம்பவம் மூடி மறைக்கப்பட்டு விட்டது.''

''திருப்பூர் குமரனைப் பதிவு செய்துள்ள வரலாறு, 19-ஆம் நூற்றாண்டில், சாணர் என்ற தாழ்த்தப்பட்ட மக்கள் நடத்திய தோள்சீலை அணியும் போராட்டத்தைப் புறக்கணித்து விட்டது.''



தோழர் எஸ். லட்சுமணப்பெருமாள்

''இட ஒதுக்கீட்டை எதிர்த்த, குழந்தை திருமணத்தை ஆதரித்த திலகரை சுயராஜ்ஜியம் கேட்டு முழங்கியவர் என்றும்; தேவதாசி முறையை ஆதரித்த சத்தியமூர்த்தியை தீரர் என்றும் வரலாறு ஒருதலைபட்சமாகப் பதிவு செய்கிறது'' எனப் பல உதாரணங்களைச் சுட்டிக் காட்டினார்.

தற்பொழுது காவிமயமாக்கப்படும் வரலாறு, ''இசுலாமியர்களை, கோவிலைக் கொள்ளையடித்தவர்கள்; அவர்களுக்குத் தந்தை / சகோதரர் பாசம் கிடையாது'' என்று அறிமுகப்படுத்துகிறது.

''தந்தையை, சகோதரனைக் கொன்றுவிட்டு ஆட்சியைப் பிடித்த இந்து மன்னர்களும் உண்டு. கி.மு. 430-இல் மன்னனாக இருந்த அஜாத சத்ரு தொடங்கி பாண்டிய மன்னன் சுந்தரபாண்டியன் வரை இதற்குப் பல ஆதாரங்களைக் கூறலாம்.''

''சோமநாதபுர படையெடுப்பை எதிர்த்துப் போரிட்டவர்களில் முசுலீம்

கலைநிகழ்ச்சிகளின் பொழுது திரண்டிருந்த மக்கள் வெள்ளம்.





படிப்பகம்

www.padippakam.com



தமிழ் மக்கள் இசை விழாவை வாழ்த்திப் பேசிய பிரஜா பந்தா (தெலுங்கு இதழ்)-இன் பொறுப்பாசிரியர் தோழர் கோவர்த்தன்

களும் உண்டு. அதேசமயம், காசுமீரை ஆண்ட ஹர்ஷன் என்ற இந்து மன்னன் கோவில்களைக் கொள்ளையடிப்பதற்காக தேவ உத்பவ நாயகர் என்ற அமைச்சரை வைத்திருந்தான். தஞ்சை மாவட்டத்தில் சிவபுரம் என்ற ஊரில் உள்ள கோவிலில் இருந்த நடராஜர் சிலையைக் கடத்தி விற்றதற்காகக் கைது செய்யப்பட்டவர்களுள் அந்தக் கோயிலின் பட்டரும் ஒருவர்'' என வரலாற்றிலிருந்து பல ஆதாரங்களை எடுத்துக் காட்டி இசுலாமியர்கள் பற்றிய ஆர்.எஸ்.எஸ்.இன் அவதூறுகளை அம்பலப்படுத்தினார், பேரா. சிவசுப்பிரமணியன்.

''ஔரங்கசீப், காசி விசுவநாதர் ஆலயத்தை இடித்தார் என்பதை மட்டும் பிரச்சாரம் செய்யும் ஆர்.எஸ்.எஸ்., ஔரங்கசீப் அந்த ஆலயத்தை ஏன் இடித்தார் என்ற காரணத்தை மூடி மறைக்கிறது. அந்த ஆலயத்தின் பார்ப்பனப் பட்டர்கள், ஆலயத்திற்கு சாமி கும்பிட வரும் அழகான இளம் பெண்களை, ஆலயத்திற்கு அடியில் இருந்த இரகசிய அறைக்குக் கடத்திக் கொண்டு போய், பாலியல் பலாத்காரம் செய்வதை வாடிக்கையாகக் கொண்டு இருந்தனர். ஔரங்கசீப்புக்கு கப்பம் கட்டி வந்த கட்ச் பகுதி இந்து மன்னனின் ராணியும் கூட, இப்படிக் கடத்தப்பட்டு பாலியல் பலாத்காரப்படுத்தப்பட்டார். அதனால்தான், ஔரங்கசீப் காசி விசுவநாதர் ஆலயத்தை இடித்தார். இந்துக் கோயிலை மட்டுமல்ல, கோல்கொண்டா சுல்தான் மக்களிடம் இருந்து கொள்ளையடித்த வரிப் பணத்தை ஜும்மா மசூதியில் பதுக்கி வைத்திருந்தான் என்பதற்காக, அம்மசூதியையே இடித்தவர் ஔரங்கசீப்'' என்ற வரலாற்று உண்மைகளின் மூலம் ஆர்.எஸ்.எஸ்.இன் காவி தகிடுதத்தங்களைத் திரைகிழித்தார் தோழர் சிவசுப்பிரமணியன்.

**''தோற்றுத் துவண்டது தமிழகம் - தூக்கி நிறுத்தினார் மன்மதராசா! இசையின் திசை: போராட்டமா, களியாட்டமா?''** எனும் தலைப்பில் ம.க.இ.க. மாநிலச் செயலர் **தோழர் மருதையன்** உரையாற்றினார். இந்த உரையின் இடையிடையே மக்களின் போராட்டத்தை, அவர்களின் அவலத்தைச் சொல்லும் ம.க.இ.க.வின் புரட்சிகரப் பாடல்களும்; அமெரிக்காவின் கருப்பின பாடகி ட்ரேஸி சாப்மன், அசாமிய இசையமைப்பாளர் பூபேன் ஹஸாரிகாவின் பாடல்களும் இசைக்கப்பட்டன.

தோழர் மருதையன் தனது உரையில், ''போக்குவரத்துத் தொழிலாளர்களின், அரசு ஊழியர்களின், மாணவர்களின், விவசாயிகளின் போராட்டங்கள் தோற்கடிக்கப்பட்ட அதே தமிழகத்தில்தான் 'பாய்ஸும்', 'திருடா திருடியும்' வெற்றி பெற்றுள்ளன. இந்தக் கேவலத்தை ரசித்தவர்களில் போராடியவர்கள் கிடையாதா?'' என்ற கேள்வியை எழுப்பினார்.

''எதிரியின் அடக்குமுறையால் தோற்றுப் போகும் பொழுது ஒப்பாரி வைக்கலாம். ஆனால், தமிழகமோ மன்மத ராசாவுக்காக டான்ஸ் ஆடுகிறது.''

''காவிரிக்காக தமிழகம் தழுவிய அளவில் போராட்டம் நடைபெறவில்லை என்பது வருந்தத்தக்க உண்மை. நெசவாளிகளும், விவசாயிகளும் தற்கொலை செய்து கொள்வதைக் கண்டு வருந்தாத தமிழகம், டி.வி. சீரியலுக்காக கண்ணீர் சிந்துகிறது. தனிப்பட்ட சோகம்தான் சோகம். சமூகத்தின் சோகம் சோகமல்ல எனப் பசப்புகிறது நடுத்தர வர்க்கம்.''

''அரசு ஊழியர்களோ தன்னுடன் சேர்ந்து வேலை செய்தவனின் சோகத்தைக்கூட கண்டு கொள்ளவில்லை. 2000 அரசு ஊழியர்களை தமிழக அரசு வேலை நீக்கம் செய்தவுடன், 12 இலட்சம் ஊழியர்களும் அம்மா காலில் விழுந்தார்கள். இந்த 12 இலட்சம் குடும்பங்களைச் சேர்ந்த 1 கோடி பேர் தெருவிற்குப் போராட வந்திருந்தால், இந்த அரசு போயிருக்கும்.''

''கோலார் தங்கச் சுரங்கம் தனியார்மயமாகிறது. 3,000 தாழ்த்தப்பட்ட தொழிலாளர்களின் வேலை பறிக்கப்பட்டுத் திண்டாடுகிறார்கள். அவர்களின் சோகம் சொல்லிமாளாது. ஆனால், 'மன்மதராசா' பாடலுக்கு இந்த கோலார்தான் லொகேஷன். சினிமா பொறுக்கிகளுக்கு சூழல் பற்றிக் கவலை இல்லை.''

''கை சின்னத்தைப் பார்த்து போடுங்கம்மா ஓட்டு; இந்தப் படை போதுமா, இன்னும் கொஞ்சம் வேணுமா!'' என்ற ஓட்டுக் கட்சிகளின் முழக்கங்கள் மன்மத ராசாவின் தாளகதியோடு ஒத்துப் போகின்றன. பொறுக்கித்தனத்தில் ஓட்டுச்சீட்டு அரசியலும், சினிமாவும் கைகோர்த்துக் கொள்கின்றன.''

''தமிழகத்தின் எதிர்க் கட்சிகள் வெற்றுச் சவடால் அடிக்கின்றன. எதிர்த்துப் போராடாமல், குறுக்கு வழியில் ஆதாயம் தேட முயலுகின்றன. இது கோழைத்தனம்'' எனத் தோல்வியால் துவண்டு போய்ச் சீரழிந்து கிடக்கும் தமிழகத்தின் சூழலைக் குத்திக் காட்டிய தோழர் மருதையன், ''நாங்கள் கனவு காண்கிறோம்; சுயநலக் கனவு அல்ல. உடனடி ஆதாயம் தேடாமல், மறுகாலனி ஆதிக்கத்திற்கு எதிராகவும், பார்ப்பனியத்திற்கு எதிராகவும்

சிதம்பரம் தேரையே நகர்த்தும் தமுருக் கொட்டு பார்ப்பன ஆதிக்க வேரையும் பிடுங்கும்.






படிப்பகம்

www.padippakam.com




மறுகாலனியாதிக்கத்தை அம்பலப்படுத்திய பாவலர் ஓம் முத்துமாரி குழுவினரின் ''வெள்ளக்காரன் வர்றாண்டா'' என்ற தெருக்கூத்து.

தமிழகம் எழுந்து நின்று போராடும் எனக் கனவு காண்கிறோம்'' என்றார்.

●●●

கருநாடக இசை, அதை உருவாக்கியதாகப் பீற்றிக் கொள்ளும் பார்ப்பனக் கும்பலிடம் கூட முழுமையாகச் செல்வாக்கு செலுத்தவில்லை. சென்னையில் நடைபெறும் ''டிசம்பர் சீசன்'' இசை விழாவின் பொழுது, பெரும்பாலான சபாக்கள் காலியாகக் கிடப்பதே இதற்குச்சான்று. ஆனால், தமிழ் மக்கள் இசைவிழாவோ, இதற்கு நேர்மாறாக, ஒவ்வொரு ஆண்டும் அதற்கு முந்தைய ஆண்டைக்காட்டிலும் ஆயிரக்கணக்கான மக்களைத் தன்பக்கம் ஈர்த்து வருகிறது. இந்த ஆண்டு நடந்த இசை விழாவின்பொழுது, ஏறத்தாழ பத்தாயிரத்துக்கும் அதிகமானோர் விடிய விடிய விழித்திருந்து, இசை நிகழ்ச்சிகளையும், கலை நிகழ்ச்சிகளையும் கண்டு, தங்களின் புரட்சிகர உணர்வை பட்டை தீட்டிக் கொண்டனர். ஒதுங்கி நின்று வேடிக்கை பார்த்தவர்கள் கூட, எதிர்காலம் குறித்த புதிய நம்பிக்கையைப் பெற்றனர்.

கொம்பு ஊதி முழங்கியபடியே தொடங்கிய இசை நிகழ்ச்சியில், ரெட்டிப்பாளையத்தைச் சேர்ந்த **வீரசோழ தப்பாட்டக் கலைக் குழுவினரின் தப்பாட்டம்** முதல் நிகழ்ச்சியாக நடந்தது. முதன்முறையாக தப்பு இசையோடு, ஹார்மோனி இசை கலக்கப்பட்டு நடந்த தப்பாட்டம் பார்வையாளர்கள் மத்தியில் பரபரப்பை ஏற்படுத்தியது.

தப்பாட்டத்தைத் தொடர்ந்து கருவெட்டாம்பாறை முனுசாமி குழுவினரின் பெரிய மேளம் வந்தது. மலையும், சமவெளியும் சந்திக்கும் பகுதியைச் சேர்ந்த இந்த இசை வடிவத்தின் நோக்கம் எதிரிகளுக்கு அச்சத்தை ஏற்படுத்துவது. மலைப்பகுதியில் எதிரிகள் விலங்குகள். இங்கே யார் என்று சொல்லத் தேவையில்லை.

**சிதம்பரத்தைச் சேர்ந்த அன்பரசன் தமுரு குழுவினர்**, தமுருக்கொட்டினை இசைத்தனர். தமுருக் கொட்டினை இசைத்தால்தான் சிதம்பரம் கோயிலின் தேர் நகரும் என்ற நம்பிக்கை இன்று வரை நடைமுறையில் இருந்து வருகிறது. அதேசமயம், இந்த தமுருக் கொட்டு சிதம்பரம் கோயிலில் நுழைய தடை விதித்துத் தீண்டாமையைக் கடைபிடித்து வருகிறது, பார்ப்பனக் கும்பல்.

தமிழகத்தின் பெரும்பாலான சிறுவர்கள் மன்மத ராசாவுக்கு ஆடிக் கொண்டிருக்கும்பொழுது, ம.க.இ.க. வின் சிறுவர் குழுவினர் தப்பாட்டத்திற்கு ஆடினார்கள்.

**மதுரையைச் சேர்ந்த பெரியண்ணன் குழுவினர், சரவணன்** ஆகியோர் பரத நாட்டியத்தின் பொழுது சொல்லப்படும் ஜதியை, தாளம் தப்பாமல் உறுமி மேளத்தில் இசைத்துக் காட்டி, பார்ப்பனக் கும்பலின் மூக்கை உடைத்தனர்.

மதுரை பெரியண்ணன் குழுவினரும், ம.க.இ.க. கலைக்குழுவினரும் இணைந்து நடத்திய **பாசிசப் பேயோட்டல்** ஜெயாவின் காட்டு தர்பாரை நையாண்டி செய்தது.

இவை தவிர, ''வெள்ளைக்காரன் வர்றாண்டா'' என்ற தலைப்பில் திருவேங்கடத்தைச் சேர்ந்த **பாவலர் ஓம் முத்துமாரி குழுவினர்** தெருக்கூத்தும்; கொய்யாத்தோப்பு **ஸ்ரீதேவி நாடக சபா குழுவினர்** ''வாலி வதம்'' தெருக் கூத்தையும் நடத்தினார்கள்.

வாங்கிய கடனைக் கட்டவும் முடியாமல், அதனால் ஏற்படும் அவமானங்களைப் பொறுத்துக் கொள்ளவும் முடியாமல், தனது மனைவியையும், கைக்குழந்தையையும் கொன்றுவிட்டுத் தற்கொலை செய்து கொள்ள முயன்ற விவசாயி ஒருவனின் வாழ்க்கை அவலத்தைப் படம் பிடித்துக் காட்டியது, கம்பம் வி.வி.மு. தோழர்களின் **தற்கொலை** நாடகம்.

கேரளாவின் பாலக்காடு மாவட்டத்தில் உள்ள பிளாச்சிமடா கிராமத்தில் இயங்கிவரும் அமெரிக்க குளிர்பான நிறுவனமான கோகோ - கோலா, அப்பகுதி நிலத்தடி நீரை ஒட்ட உறிஞ்சி, நிலத்தையும், நீரையும் மாசுபடுத்த விட்ட கோரத்தை அப்பகுதி மக்களின் நேருரைகளோடு சித்தரிக்கும்

ம.க.இ.க. சிறுவர் கலைக்குழுவினரின் கலைநிகழ்ச்சி.






படிப்பகம்

www.padippakam.com

# ‘‘எங்களை விலைக்கு வாங்க முடியாது’’

*[ஒப்பந்தத் தொழிலாளர்களின் பணி நீக்கத்தை எதிர்த்து மும்பையில் உள்ள டாடா நிறுவனத்தின் தலைமை அலுவலக வாயிலில் தீக்குளித்து இறந்த அக்தர்கானின் மனைவி அமீனா அக்தர்கானின் நேருரை]*

‘‘டாடா நிறுவனத்தில் நாங்கள் (70 தொழிலாளர்கள்) 17 ஆண்டுகள் வேலை செய்தோம்; 1996-இல் ரெண்டு ரெண்டு பேராக எங்களை வேலையில் இருந்து துரத்தியது டாடா நிர்வாகம்.

நாங்கள் வேலை நீக்கத்தை எதிர்த்துப் போராட்டத்தில் குதித்தோம். நீதிமன்றம்கூட எங்களுக்கு மீண்டும் வேலை கொடுக்கச் சொல்லி உத்தரவிட்டது. ஆனால், இந்த நீதிமன்ற உத்தரவை டாடா மதிக்கவேயில்லை. கைலாஷ் ஷிண்டே என்ற சிவசேனா தொழிற்சங்கத் தலைவர் மீண்டும் எங்களுக்கு வேலை வாங்கித் தருவதாக வாக்குறுதி கொடுத்தான். தொழிற்சங்கத் தேர்தலில் வெற்றி பெற்றபின் எங்களின் முதுகில் குத்திவிட்டான். ஊழியர் சங்கங்களும் இத்துரோகத்திற்குத் துணை போயின.

இந்த அவலத்தை, துரோகத்தைப் பொறுக்க முடியாமல்தான் ஆனந்த் தால்வியும் (முன்னாள் சிவசேனா தொண்டர்), அக்தர்கானும் (தமிழ் முசுலீம்) தீ வைத்துக் கொண்டு தற்கொலை செய்து கொண்டனர். அவர்கள் அங்கே தீயில் வெந்தபொழுது, ரத்தன் டாடா, இளவரசர் சார்லஸுடன் உல்லாசமாக ஊர் சுற்றிக் கொண்டிருந்தார்.

அக்தர்கான் 11 நாட்கள் உயிருக்குப் போராடி உயிர் விட்டார். அவரை மருத்துவமனையில் சேர்த்தபொழுது எங்களிடம் 11 ரூபாய்தான் இருந்தது. எங்கே நாங்கள் உதவி கேட்க வந்துவிடுமோ எனப் பயந்து போன தொழிற்சங்கத் தலைவர்கள், ஃபோனை கட் செய்துவிட்டு மாய மாய் மறைந்து போனார்கள். கைலாஷ் ஷிண்டே எங்களின் கண்ணில் தட்டுப் படாமல் தலைமறைவாகச் சுற்றுகிறான்.

எனக்கு ஐந்து பெண் குழந்தைகள். என் கணவர் சாகும்பொழுது, தோழர்கள் பார்த்துக் கொள்வார்கள் என்றார். எங்க இரண்டு குடும்பங்களுக்குத் தேவையான உதவிகளை மற்ற தொழிலாளர்கள் செய்கிறார்கள். நாங்கள் அடிக்கடி சந்தித்துக் கொண்டு, பிரச்சினைகளைப் பற்றிப் பேசுகிறோம். சமீபத்தில் ஒரு தொழிலாளியின் மகள் திருமணத்தை, நாங்களெல்லாம் காசு போட்டு செய்து முடித்தோம்.

ஐந்து பெண்கள் இருக்கும் என் வீட்டில் கதவு கூடக் கிடையாது. எங்களுக்குக் கஞ்சிக்குக் கூட வழியில்லை. ஆனாலும், துரோகத்திற்குப் பலியாக முடியாது. சமீபத்தில் ஒரு தொழிற்சங்கம் எங்கள் இரண்டு குடும்பங்களுக்கும் 50,000 ரூபாய் தர முன் வந்தது. எங்களோடு சேர்ந்து கஷ்டப்படும் மீதி 68 குடும்பங்களுக்கும் கொடுத்தால் வாங்கிக் கொள்கிறோம் என்று கூறிவிட்டோம். டாடா நிர்வாகம் எங்கள் இரண்டு குடும்பங்களுக்கு மட்டும் வேலை தருகிறோம் என்ற பொழுது, எங்களை விலைக்கு வாங்க முயற்சிக்காதீர்கள் எனச் சொல்லி விட்டோம்.’’



- அமீனா அக்தர்கானின் இந்த நேருரை கருவிகள் இல்லாத ஒரு சோக இசை. 70 தொழிலாளர்களின் குடும்பங்கள் சற்றுக் கூடத் துவண்டு விடாமல், ஏழு ஆண்டு காலமாகப் போராடி வருகின்றன. 12 இலட்சம் அரசு ஊழியர்களின் போராட்டம் நீர்க்குமிழி போல வெடித்துப் போனதையும், இந்தத் தொழிலாளர்களின் விடாப்பிடியான உறுதியையும் ஒப்பிட்டுப் பார்த்துக் கொள்ளுங்கள். இந்த உறுதியையும், இந்த தியாகத்தையும், இந்த ஒத்துழைப்பையும்தான், இந்தியாவெங்கும் மறுகாலனி ஆதிக்கத்திற்கு எதிராகப் போராடி வரும் தொழிலாளர்கள், விவசாயிகள், மாணவர்கள் அனைவரும் கற்றுக் கொள்ள வேண்டும். அது தான், அக்தர்கான் - ஆனந்த் தால்வியின் தியாகத்திற்கு நாம் செலுத்தும் உண்மையான அஞ்சலி!

●

---

‘‘கோகோ கோலா: பிளாச்சிமடாவின் இரத்தம்; தொடங்குவோம் புதிய யுத்தம்’’ என்ற ஆவணப்படம் திரையிடப்பட்டது. இந்த ஆவணப்படத்தை புதிய கலாச்சாரம் திரை முழக்கம் தயாரித்து வழங்கியது.

ம.க.இ.க. மைய கலைக்குழுவினர் புரட்சிகர கலை நிகழ்ச்சிகளோடு, ‘‘அமெரிக்க எதிர்ப்புப் போரில் உயிர்நீத்த ஈராக்கின் வீரப்புதல்வர்களுக்கு...’’ என்ற பெயரில் ஈராக் பற்றிய இசைச் சித்திரமொன்றையும் வழங்கினர். அமெரிக்காவின் ஆக்கிரமிப்பையும், அதற்கு எதிராகப் போராடி வரும் ஈராக் மக்களின் மறுகாலனிய எதிர்ப்புப் போராட்டங்களையும் பாடலாக வடித்துத் தந்தது இந்த இசைச் சித்திரம். பாடலின் இடையே ஈராக் போராட்டங்கள் பற்றிய நிழற்படங்கள் பின்னணி இசையோடு திரையிடப்பட்டு, ஒலியும் ஒளியும் (Light & Sound), போல இந்த இசைச் சித்திரம் நடத்தப்பட்டது.

●●●

நாடாளுமன்றத் தேர்தல் நெருங்கியவுடனேயே ஜெயா, ‘‘வேலை நீக்கம் செய்யப்பட்ட அரசு ஊழியர்களை மீண்டும் வேலைக்கு எடுத்துக் கொண்டார்; அனைத்து விவசாயிகளுக்கும் இலவச மின்சாரம் என்ற அறிவிப்பை வெளியிட்டார்; ஆடு - கோழி பலியிடுவதைத் தடை செய்யும் சட்டத்தை நீக்கினார்.’’ உரிமைகளைப் பறித்ததைக் காட்டிலும், இது கேவலமானது. ஜெயா, மக்களை எந்தளவுக்கு மதிக்கிறார் என்பதற்கு இது ஒரு சான்று.

எதிர்க்கட்சிகளோ, மக்கள் அனுபவிக்கட்டும்; அப்பொழுதுதான் நமக்கு ஓட்டுப் போடுவார்கள் எனக் காத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், தனியார்மயம் - தாராளமயம் உருவாக்கும் இந்தப் பிரச்சினைகளை எதிர்க்கட்சிகளுக்கு ஓட்டுப் போடுவதன் மூலம் தீர்த்துவிட முடியாது; இந்தப் பார்ப்பன - பாசிச பயங்கரவாத ஆட்சியைத் தேர்தல் அரசியல் மூலம் வீழ்த்திவிட முடியாது.

போராட்டத்தில் இறங்கினால் வாழ்க்கை போய்விடும் என அச்சப்படுவதில் பொருள் இல்லை. ஏனென்றால், மானமின்றி வாழ்வது, வாழ்க்கையே இல்லை. இருப்பதைத் தக்க வைத்துக் கொள்ளுவதற்கே போராட வேண்டியிருக்கிறது.

‘‘தமிழகம் துவண்டு விழாது; மீண்டும் எழுந்து போராடும்; இந்தியாவிற்கே வழிகாட்டும்’’ - எனும் நம்பிக்கையை, தமிழ் மக்கள் இசை விழாவிற்கு தமிழகமெங்கும் கிடைத்த ஆதரவும்; இசை விழாவிற்கு வந்திருந்த பல்லாயிரக்கணக்கான மக்கள் கூட்டமும் விதைத்துள்ளன.

● பிரகாஷ்


படிப்பகம்

www.padippakam.com

## போலி முத்திரைத்தாள் மோசடி:

# கிரிமினல்களின் கூட்டாளியாக போலீசு அதிகாரிகள்

கிணறுவெட்ட பூதம் கிளம்பிய கதையாக, போலி முத்திரைத்தாள் மோசடி விவகாரம், நாட்டின் ஒட்டுமொத்த அரசியல் அமைப்பே ஊழல் - மோசடிகளில் புழுத்து நாறுவதை அம்பலப் படுத்திக் காட்டிவிட்டது. அரசயர் அதிகாரிகள், போலீசு அதிகாரிகள், அரசியல்வாதிகள், கிரிமினல் பேர்வழிகள் ஆகியோர் கூட்டணி கட்டிக் கொண்டு நடத்திய இப்போலி முத்திரைத்தாள் விவகாரத்தில், மோசடிப் பேர்வழிகளின் கூட்டாளியாகச் செயல்பட்ட தமிழக சி.பி.சி.ஐ.டி. போலீசு உயரதிகாரி முகமது அலி இப்போது அம்பலப்பட்டுள்ளார்.

நாடெங்கும் அண்மையில் நாறிய போலி முத்திரைத்தாள் மோசடி விவகாரத்தின் முக்கிய புள்ளி தெல்கி. தெல்கியின் போலி முத்திரைத்தாள் வியாபார மொத்த ஏஜெண்டாகச் செயல்பட்டவன் நிஜாமுதீன். நிஜாமுதீனின் தொழிலுக்குப் பாதுகாப்பளித்து கூட்டாளியாகச் செயல்பட்டவர்தான் சி.பி.சி.ஐ.டி. போலீசு டி.ஐ.ஜி. முகமது அலி.

1999-இல் வாணியம்பாடியில் பதிவான போலி முத்திரைத்தாள் மோசடி வழக்கில் சிக்கிய விற்பனையாளர்கள் அளித்த வாக்குமூலத்தின் அடிப்படையில் நிஜாமுதீனின் பத்திர விற்பனை உரிமம் ரத்து செய்யப்பட்டது. உடனே முகமது அலி, பத்திரப்பதிவு அதிகாரிகளைச் சரிகட்டி அவனுக்கு மீண்டும் உரிமம் பெற்றுத் தந்துள்ளார். நிஜாமுதீனின் போலி பத்திர மோசடிகள் மீண்டும் தொடர்ந்ததும், போலீசார் அவனைப் பிடித்து விசாரணை நடத்தினர். அந்த விசாரணையைத் தடுத்த முகமது அலி, 300 கோடி ரூபாய் மதிப்புடைய போலி பத்திரங்களை அவனிடமே திருப்பிக் கொடுத்துள்ளார்.

2003-இல் சி.பி.சி.ஐ.டி. போலீசு கண்காணிப்பாளராகப் பதவியேற்ற சந்தீப்ராய் ரத்தோர் என்பவர், இப்போலி முத்திரைத்தாள் மோசடி குறித்து பல மாநிலங்களுக்கும் சென்று தகவல் திரட்டியதோடு, நிஜாமுதீனின் இரகசிய உலகச் செயல்பாடுகளையும் தொகுத்தார். இதையறிந்ததும் சி.பி.சி.ஐ.டி. போலீசு உயரதிகாரிகளும் முகமது அலியும் அவரை மிரட்டி எச்சரித்தனர். விரக்தியடைந்த அவர், கூடுதல் போலீசு இயக்குனரான பாலசந்திரனுக்கு இது குறித்து விரிவாக கடிதம் எழுதி முறையிட்டார்.

இந்நிலையில், சென்னை வழக்குரைஞரான சுப்பிரமணியன் பாலாஜி என்பவர், போலி முத்திரைத்தாள் விவகாரம் குறித்து சென்னை உயர்நீதி மன்றத்தில் ஒரு மனு தாக்கல் செய்தார். "முகமது அலி உள்ளிட்ட தமிழக உயர் போலீசு அதிகாரிகள் தெல்கியின் போலி முத்திரைத்தாள் வியாபாரியான நிஜாமுதீனுக்கு உதவியாகச் செயல்பட்டுள்ளனர். சி.பி.சி.ஐ.டி. போலீசு உயரதிகாரிகளே இதில் சம்பந்தப்பட்டுள்ளதால், இதை மையப் புலனாய்வுத்துறை விசாரிக்க வேண்டும்" என்று அம்மனுவில் கோரியிருந்தார். இம்மனு கடந்த பிப்ரவரி கடைசி வாரத்தில் விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர் தரப்பில் ஆஜரான மூத்த வழக்கறிஞர் சந்துரு, சந்தீப்ராய் ரத்தோரின் கடித நகலை நீதிபதிகள் முன் ஆதாரமாகக் காட்டி வாதிட்டுள்ளார். அதிர்ச்சியடைந்த நீதிபதிகள் இது தொடர்பாக தமிழக அரசும், சி.பி.சி.ஐ.டி. போலீசும், மையப் புலனாய்வுத் துறையும் இருவாரங்களுக்குள் பதிலளிக்க வேண்டும் என்று உத்தரவிட்டுள்ளனர்.

முகமது அலி:
தேவாரத்தின் சீடர்; ஜெயாவின் எடுபிடி



ஏற்கெனவே மையப் புலனாய்வுத்துறை, போலி முத்திரைத்தாள் தமிழகத்தில் அதிகம் புழங்குவதாகவும், இதில் முகமது அலிக்கு தொடர்புள்ளதாகவும் தமிழக அரசுக்கு அறிக்கை அனுப்பியது. அதை பாசிச ஜெயா அரசு குப்பைக் கூடையில் வீசியெறிந்து விட்டது. ஏனெனில் முகமது அலி போன்ற போலீசு சூரப்புலிகள்தான், கருணாநிதியை அடித்துச் சென்று கைது செய்தது உட்பட ஜெயா கும்பலின் அடாவடித்தனங்களையும் அட்டூழியங்களையும் விசுவாசமாக நிறைவேற்றும் ஏவல்நாய்களாகச் செயல்பட்டவர்கள். எடுபிடிகளே இப்படி கிரிமினல் பேர்வழிகள் என்றால், இப்போலீசு கும்பலை தனது பொறுப்பில் வைத்துக் கொண்டுள்ள பாசிச ஜெயா எத்தகைய தொரு கிரிமினல் தலைவி என்பதைச் சொல்லவும் வேண்டுமா? ●

# கட்டணக் கொள்ளைக்கு எதிராக மாணவர் போராட்டம்

கல்வி கட்டண உயர்வு, தேர்வு கட்டண உயர்வு, பஸ் பாஸ் பறிப்பு என்று தொடர்ந்து பல்வேறு வகைகளில் மாணவர்களின் மீது தாக்குதல் தொடுத்துவரும் பாசிச ஜெயா அரசு, தற்போது மாநகராட்சிப் பள்ளிகளில் படிக்கும் மாணவர்களின் இலவசக் கணிப்பொறி கல்விக்கும் வேட்டு வைத்துள்ளது.

பிளஸ் 1 பயிலும் கணிப்பொறி பிரிவு மாணவர்கள் இவ்வாண்டு ரூ. 200-ம், பிளஸ் 2 மாணவர்கள் இரண்டாண்டு கட்டணமாக ரூ. 400-ம் உடனே செலுத்த வேண்டும்; தவறினால் தேர்வு எழுத அனுமதியில்லை என்று மிரட்டுகிறது, அரசு.

அநியாயமான இக்கட்டண வசூலுக்கு எதிராக மாணவர்கள் கருத்தைத் திரட்டியது பு.மா.இ.மு. முதலில் கணிப்பொறி பிரிவுக்கு மட்டும் கட்டணம்; பிறகு அறிவியல், கலை மற்றும் பல பிரிவுகளுக்கும் கட்டணம் வசூலிக்க எத்தணிக்கிறது என்ற அரசின் சூழ்ச்சியை மாணவர்களிடம் விளக்கியது, பு.மா.இ.மு. பல தவணைகளில் உயர்த்தப்படும் அநியாயக் கட்டண உயர்வை நீக்குவதற்கு போராட்டமே தீர்வு என்று மாணவர்களை அறைகூவி அழைத்தது.

போராட்டத்தின் அவசியத்தை விளக்கும் மூகமாக பள்ளி மாணவர்களிடம் கையெழுத்து இயக்கமும் பெற்றோர்களிடம் ஆதரவு திரட்டும் வகையில், ஆர்ப்பாட்டம் நடத்தவுள்ள வள்ளுவர் கோட்டம் பகுதியில் தெருமுனைப் பிரச்சாரமும் நடத்தப்பட்டது.

'பள்ளி முதல் கல்லூரிக் கல்வி வரை கட்டண உயர்வை ரத்து செய்ய வேண்டும்', 'சத்துணவு திட்டத்தைச் சீரமைக்க வேண்டும்' என்று பல்வேறு முழக்கங்களுடன் பள்ளிகள், கல்லூரிகளில் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டு, பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டன.

19.02.04 அன்று வள்ளுவர் கோட்டம் அருகில் 150-க்கும் மேற்பட்ட மாணவர்களின் பங்கேற்புடன் ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. ஆர்ப்பாட்டத்தில் உரையாற்றிய மாணவர் பாலசுப்பிரமணி, தனது உரையில், பாசிச ஜெயாவின் பார்ப்பனியத் திமிரைச் சுட்டிக் காட்டி "இது அம்மா ஆட்சி அல்ல; அவாளின் மனுதர்ம ஆட்சி. கோட்டையில் எதுவும் தீர்மானிக்கப்படவில்லை; காஞ்சி மடத்திலேயே தீர்மானிக்கப்படுகிறது" என்றார்.

அதன்பின் உரையாற்றிய தோழர்கள்



படிப்பகம்

www.padippakam.com

கணேசன், செந்தில் மற்றும் இளங்கோ சுப்பிரமணி ஆகியோர், கடந்த காலங்களில் தமிழகத்தில் நடந்த போராட்டங்களில் மாணவர்களின் பங்கை நினைவு கூர்ந்தனர். ''மாணவர்கள் புதிய வரலாற்றை படைக்க மீண்டும் முன்வர வேண்டும்'' என்றனர்.

போராட்டத்திற்கு பு.மா.இ.மு. சென்னைக் கிளை செயலர் தோழர் வ. கார்த்திகேயன் தலைமை தாங்க, இறுதியாக, மாணவர் தோழர் முகமது நன்றியுரை ஆற்றினார்.

மாணவர்கள் என்றாலே விட்டேத்தியானவர்கள், பொறுப்பற்றவர்கள் என்று மக்களிடம் படிந்திருந்த கருத்தைப் போக்கியதோடு, மாணவர்களின் போர்க்குணத்தையும் பறைசாற்றியது இந்த ஆர்ப்பாட்டம்.

— பு.மா.இ.மு., சென்னை.



# புறநகர் குடியிருப்புப் பகுதியா? மாநகரக் குப்பைத் தொட்டியா?

**கோ**வை - போத்தனூர் செட்டிப்பாளையம் பகுதியில் வீசும் பாலக்காட்டு கணவாயின் குளுகுளு காற்றை நெஞ்சம் நிறைய சுவாசிக்க வேண்டும் என்று கனவுகளோடு அங்கு குடியேறியவர்கள், நோயாளிகளாக மாறி நெஞ்சு கனக்கும் துயரத்தோடு அங்கு வாழ்கிறார்கள்.

போத்தனூர், 'அன்பு நகர்' எதிரில் 2400 ஏக்கர் நிலப்பரப்பில் கழிவுகளை மலைபோல் கொட்டுகிறது, கோவை மாநகராட்சி; அதிலிருந்து கிளம்பும் துர்நாற்றம் அழுகிய பிணங்கள் போல குடலை புரட்டுகிறது. சாக்கடை புழுக்கள், கொசுக்கள், ஈக்கள் என்று அதிலிருந்து தப்பிக்க முடியாதபடி மாநகர கழிவுகளால் சிறை வைக்கப்பட்டிருக்கிறார்கள் அப்பகுதி மக்கள்.

மனிதனின் உயிர் குடிக்கும் மருத்துவமனைகளின் கழிவுகள் கூட அங்குக் கொட்டப்படுகின்றன. கோவை நகரத்தின் கழிப்பிடமாக போத்தனூர் பகுதியை பயன்படுத்தும் அதிகாரிகளும் அரசியல்வாதிகளும் அப்பகுதி மக்களுக்கு கொடுத்த வாக்குறுதிகள், சாக்கடை கொசுக்கள் போல் ரீங்காரமிட்டதுதான் மிச்சம்.

உலக வங்கியின் உதவியுடன் மிக பிரமாண்டமான கழிவுநீர் பண்ணை வரப்போகிறது! பூமியிலிருந்து 25 அடி உயரத்தில் மிக பிரமாண்டமான குட்டை உருவாக போகிறது! சாக்கடை நீரை சுத்தம் செய்து சேமித்து நிலத்தடி நீர்பிடிப்பை உயர்த்த போகிறோம் என்றார்கள். கடைசியில், பிரமாண்டமான கொசுக்களும் ஈக்களும் உருவானதுதான் மிச்சம்! கூச்சமில்லாமல் இக்கழிவுகளுக்கு ''பசுமை வளையம்'' என்று பெயர் வைத்தார்கள் அதிகாரிகள்.

இப்போது, இப்பகுதியில் மண்ணும் மரமும் மனிதர்களும் புழுவும் பூச்சியும் பறவைகளும் காற்றும் நீரும் - இப்படி எதுவும் இங்கு ஆரோக்கியமா இல்லை! தங்கள் வாழ்நாள் சேமிப்பை எல்லாம் போட்டு கனவுகளோடு இங்கு வீட்டை கட்டிய நடுத்தர வர்க்கத்தினர் இப்போது வீட்டை விற்கவும் முடியாமல் வேறு இடங்களுக்கு போகவும் முடியாமல் தவிக்கிறார்கள்.



இவ்வளவு நடந்தபிறகும் இந்த கழிவுகளை அப்புறப்படுத்தவோ, சுத்தப்படுத்தவோ முயற்சி எடுக்கவில்லை ஆளும் வர்க்கக் கும்பல்.

புறநகர்களுக்கு ஒதுங்கிய மக்களையும் விடாமல் துரத்தியடிக்கும் ஆளும் வர்க்கத்தின் கொடூரம் இது. இதற்கு எதிராக குரல் கொடுக்கும் பல்வேறு ஜனநாயக சக்திகள் இதை வெறும் சுற்றுப்புற தூய்மையை கெடுக்கும் பிரச்சினையாக மட்டும் பார்க்கிறார்கள்.

ஆனால், ஆளும் வர்க்கங்களின் கழிவுகளை மக்களை சுமக்க வைக்கும் உலகமயத்தின் கொடூரம் இது. தனியார்மயம் - தாராளமயம் - உலகமயம் இவற்றால் கையளவான ஆளும் கும்பல்களுக்கு மட்டும் சொர்க்கபுரியாக மாற்றப்படுகின்றன பெருநகரங்கள். இதற்கான குப்பைத் தொட்டியாக புறநகர்களையும் எடுத்துக் கொள்கின்றன ஆளும் வர்க்கங்கள்.

சென்னை போன்ற பெருநகரங்களிலும் இதுதான் நிலைமை. பெருநகரங்களின் தூய்மையை காப்பதாக கூறி குடிசை மற்றும் நடைபாதைவாசிகளை அங்கிருந்து விரட்டியடிக்கும் அரசு, அவர்கள் புறநகர்களில் வாழ்வதையும் சகித்துக் கொள்வதில்லை. அங்கிருக்கும் நீர் ஆதாரங்களை பிடுங்கி கொள்வது, கழிவுகளைக் கொட்டி அப்பகுதி காற்றையும் மாசுப்படுத்துவது என்று தொடர்ந்து விரட்டுகிறார்கள்.

மனித மலத்தைச் சுமப்பதற்கென்று தனி மனித சாதியை உருவாக்கிய பார்ப்பன பயங்கரவாதிகள், உலகமயம் என்ற பெயரில், உழைக்கும் மக்கள் அனைவரையும் கழிவுகளாக ஒதுக்குகிறார்கள்.

நம் நாட்டிலேயே நம் வாழ்வுரிமையையும் மண்ணுரிமையையும் பறிக்கும் கும்பல்களை குப்பைத் தொட்டியில் வீசியெறிய, உழைக்கும் மக்கள் விரிந்த அரசியல் பார்வைக்கும் புதுவகை போராட்டங்களுக்கும் தங்களை உட்படுத்திக் கொள்வது அவசியம் என்பதை அவசரமாக உணரவேண்டும்.

— பு.ஜ. செய்தியாளர், கோவை.


படிப்பகம்

www.padippakam.com

# பட்டினி இந்தியாவும் பகட்டு இந்தியாவும்

## யாருடைய இந்தியா ஒளிர்கிறது?

தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசு, "இந்தியா ஒளிர்கிறது" என்ற மெகா விளம்பரத்தை, கடந்த இரண்டு மாதங்களாக வெளியிட்டு வருகிறது. இந்து மதவெறிக் கும்பலின் தேர்தல் வெற்றிக்காக, அரசின் செலவில் வெளியிடப்பட்டு வரும் விலை மதிப்புமிக்க விளம்பரம் இது. 450-க்கும் மேற்பட்ட செய்திதாள்கள், பத்திரிகைகள், வானொலி மற்றும் வானொளிகளில் தொடர்ந்து வெளியிடப்படும் இவ் விளம்பரத்திற்காக, வாஜ்பாயி, அரசு கஜானாவில் இருந்து 400 கோடி ரூபாயை அள்ளி வீசியிருக்கிறார். தேர்தல் ஆணையம் கண்டித்த பிறகும்கூட, வாஜ்பாயி அரசு இந்த ஊதாரித்தனத்தை நிறுத்திக் கொள்ளவில்லை.

"மொத்த உள்நாட்டு உற்பத்தி 8 சதவீத வளர்ச்சியை எட்டிவிட்டது; அந்நிய செலாவணி கையிருப்பு 10,300 கோடி அமெரிக்க டாலராக உயர்ந்துள்ளது. பங்குச் சந்தை அட்டவணை 6,000 புள்ளிகளைத் தாண்டிவிட்டது. செல்ஃபோன், கார், கணினி போன்ற நுகர் பொருட்கள் சந்தையில் விலை மலிவாகவும், தாராளமாகவும் கிடைக்கின்றன. இந்திய மக்களிடையே சேமிக்கும் பழக்கம் குறைந்து, நுகர்வுக் கலாச்சாரம் பொங்கி வழிகிறது. போனமாதம் வரை 75,000 கிராமங்கள் 'பிரதமரின் கிராமச் சாலைத் திட்டம்' மூலம் இணைக்கப்பட்டிருக்கின்றன" - என இந்த விளம்பரங்களின் மூலம் வாஜ்பாயி அரசின் சாதனைகள் தம்பட்டம் அடிக்கப்படுகின்றன.

ஐம்பது ஆண்டு கால காங்கிரசின் ஆட்சியில் நிறைவேறாத / நடக்காத சாதனைகள், வாஜ்பாயின் ஐந்தாண்டு கால ஆட்சியில் நடந்துவிட்டதாக பா.ஜ.க. தலைவர்கள் பொருளாதாரப் புள்ளி விவரங்களை எடுத்துப் போட்டு, நாட்டு மக்களை அசத்திவிடத் துடிக்கிறார்கள்.

"இந்தியா ஒளிர்கிறது", "எல்லாம் இன்பமயமாக இருக்கிறது" என பா.ஜ.க., தலைவர்கள் மட்டும் பீற்றிக் கொள்ளவில்லை.

"டல்லடித்த இந்தியப் பொருளாதாரம் இப்போது செழிக்கிறது; பல துறைகளில் ஏறுமுகம்தான்" எனக் குறிப்பிட்டு, இந்தியா டுடே வார இதழ் அட்டைப்படக் கட்டுரை எழுதி, வாஜ்பாயின் சாதனைகளைப் புகழ்ந்து தள்ளுகிறது.

"கோவாவில் நடைபெறும் இரவு நேர களியாட்ட விருந்தில் கலந்து கொள்பவரின் மனநிலையில் நாடு உள்ளது" என மஹிந்திரா அண்டு மஹிந்திரா நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் ஆனந்த் மஹிந்திரா பூரித்துப் போகிறார்.

கரும்பாலை அதிபரான ராஜ்ஸ்ரீ பதி, "எனது ஆலையைச் சேர்ந்த பெரும்பாலான ஊழியர்கள் கணினி வைத்திருக்கிறார்கள்; வேலைக்கு காரில் வந்து போகிறார்கள்; வெளிநாட்டுத் தயாரிப்பான ஆலன் சாலி (Allen Solly) நிறுவன ஆடைகளை அணிகிறார்கள். எனது விவசாயிகள் கடன் இல்லாமல் மகிழ்ச்சியாக இருக்கிறார்கள். இதை இன்பமயம் எனச் சொல்ல முடியாவிட்டால், வேறு எதனைச் சொல்ல முடியும்?" எனக் கேள்வி எழுப்பி, வாஜ்பாயி அரசின் சாதனைக்கு வக்காலத்து வாங்குகிறார்.

கடந்த சில ஆண்டுகளில் பல்வேறு மாநிலங்களைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான விவசாயிகள் கடன் தொல்லை தாங்க முடியாமல் பூச்சி மருந்தைக் குடித்துவிட்டுத் தற்கொலை செய்து கொண்டதை கண் முன் பார்த்த நமக்கு, விவசாயிகள் பற்றி ராஜ்ஸ்ரீ பதி சொல்வது வியப்பைத் தருகிறது.

தாராளமயம் பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்களின் வேலைக்கு உலை வைத்ததைப் பார்த்திருக்கிறோம்; அவர்களுள் பலர் தற்கொலை செய்து கொண்டு மாண்டு போனதையும் கேள்விப்பட்டிருக்கிறோம். ஆனால், தொழில் அதிபர் ராஜ்ஸ்ரீ பதியோ தாராளமயத்தின் பின் தனது ஊழியர்கள் செல்வச் சீமான்களாக மாறிவிட்டதாக அடித்துப் பேசுகிறார்.

இவர்கள் கூறுவதெல்லாம் உண்மையா, பொய்யா? தமிழ் திரைப்படத்தில் வரும் ஏழை கதாநாயகன் திடீரெனப் பணக்காரனாக மாறிவிடுவதைப் போல, வாஜ்பாயி ஆட்சியில் திடீர் மாற்றம் ஏதாவது நடந்துவிட்டதா? என்ற மயக்கத்தை ஏற்படுத்தி வருகிறது "இந்தியா ஒளிர்கிறது" என்ற விளம்பரம்.

பொருளாதாரப் புலிகளைப் பொருத்தவரை முதலாளிகளிடம் போய்ச் சேரும் இலாபத்தின் வளர்ச்சி தான் தேசத்தின் வளர்ச்சி. இந்த வளர்ச்சியை நிரூபிப்பதற்காக நிபுணர்கள் எடுத்துப் போடும் புள்ளி விவரங்கள், வறுமை, வேலைவாய்ப்பின்மை போன்ற சமூகத்தின் இருண்ட பகுதிகளைத் திறமையாக மூடிமறைத்துவிடும். வாஜ்பாயி அரசு வெளியிட்டு வரும் "இந்தியா ஒளிர்கிறது" என்ற விளம்பரமும் இதற்கு நேர் எதிராக இருக்கப் போவதில்லை. இந்த உண்மை ஒருபுறமிருக்க, வாஜ்பாயி அரசின் சாதனைகளை நிரூபிப்பதற்காக எடுத்துப் போடப்படும் புள்ளி விவரங்கள், பொருளாதார நிபுணர்களைக் கூடக் கூச வைத்துவிடுகின்றன. கொஞ்சம் பச்சையாகச் சொன்னால் வாஜ்பாயி "திருநெல்வேலிக்கே அல்வா" கொடுக்கிறார்.

### வளர்ச்சியா, வீக்கமா?

2003-04 ஆம் ஆண்டில் இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தி 8 சதவீதம் வளர்ந்திருப்பதாக இந்து மதவெறிக் கும்பல் தம்பட்டம் அடித்துக் கொண்டு திரிகிறது. மேலும், "இந்த எட்டு சதவீத வளர்ச்சியை இதற்கு முன்பிருந்த ஆட்சியாளர்கள் யாரும் சாதிக்கவில்லை; இனி இந்த வளர்ச்சியை ஆண்டவனே வந்தாலும் தடுத்து நிறுத்த முடியாது" என்றும் அவர்கள் பீற்றிக் கொள்கிறார்கள்.

"பிசினஸ் வேர்ல்டு" என்ற பொருளாதார பத்திரிகை வெளியிட்டுள்ள ஒரு புள்ளி விவரத்தில் "வி.பி.சிங் ஆட்சியில் 6.15 சதவீதம் அளவிற்கும்; நரசிம்ம ராவ் ஆட்சியில் 6.40 சதவீதம் அளவிற்கும்; தேவேகௌடா ஆட்சியில் 6.30 சதவீதம்



படிப்பகம்

www.padippakam.com

அளவிற்கும் வளர்ந்த இந்தியப் பொருளாதாரம், வாஜ்பாயின் ஆட்சியில் (கடந்த நான்கு ஆண்டுகளில்) 5.62 சதவீதமாகச் சரிந்து விட்டதாகக் குறிப்பிட்டுள்ளது.

இந்தச் சரிவை மூடி மறைத்துவிட்ட வாஜ்பாயி அரசு, இந்த (2003-04) நிதியாண்டின் இரண்டாவது கால் பகுதியில் (ஜூலை 03 - செப் - 03) இந்தியப் பொருளாதாரம் திடீரென எட்டு சதவீத வளர்ச்சியை எட்டிப் பிடித்ததைத் தனது ஆட்சிக் கால சாதனையாகப் புளுகி வருகிறது. அற்பனுக்கு வாழ்வு வந்தால் அர்த்த ராத்திரியிலும் குடை பிடிப்பான் என்பார்களே, அப்படிதான் வாஜ்பாயின் பீற்றலைக் கூற முடியும்.

இந்த வளர்ச்சிக்காக, வாஜ்பாயி அரசைப் பாராட்டுவதை விட, வருண பகவானுக்கு வேண்டுமானால் நன்றி சொல்லலாம். கடும் வறட்சியின் காரணமாக கடந்த ஆண்டு முற்றிலுமாக முடங்கிப் போய் விட்டிருந்த விவசாயம், இந்த ஆண்டு நல்ல பருவ மழையின் காரணமாக, 4.1 சதவீதம் வளர்ச்சியடைந்திருக்கிறது. விவசாயத் துறையில் நடந்துள்ள இந்த வளர்ச்சிதான், இந்த எட்டு சதவீத வளர்ச்சிக்கே அடிப்படையாக அமைந்திருக்கிறது. அரசாங்கக் கடன் உதவி இல்லாமல், மானியம் இல்லாமல், இலவச மின்சாரம் இல்லாமல் - விவசாயிகள் நிகழ்த்தியுள்ள இந்த உற்பத்தி சாதனைக்கு, வாஜ்பாயி அரசு சொந்தம் கொண்டாடுவதற்கு எவ்வித அருகதையுமே கிடையாது.

பொருளாதாரத்தின் வளர்ச்சி விவசாயத்தை நம்பி இருக்கிறது; இந்திய விவசாயமோ பெரும்பாலும் பருவ மழையை நம்பி நடக்கிறது. பருவமழை தவறிப் போனால், இந்தப் பொருளாதார வளர்ச்சி கடந்த ஆண்டைப் போலவே சரிந்து விழுந்துவிடும்.

பா.ஜ.க.விற்கு மிகவும் நெருக்கமான தொழில் அதிபரான ராகுல் பஜாஜ், ''இந்தியப் பொருளாதாரம் தொய்வில்லாமல் தொடர்ந்து 8 சதவீத வளர்ச்சி அடைய வேண்டுமானால், தொழில் துறை 12 சதவீத வளர்ச்சியை அடைய வேண்டும். ஆனால், தொழில் துறை வளர்ச்சியோ 6 சதவீதத்தைத் தாண்டியதில்லை'' என உண்மையைப் போட்டு உடைக்கிறார்.

தொழில் துறையை எடுத்துக் கொண்டால், 70-80 தொழில் நிறுவனங்கள்தான் நல்ல நிலையில் நடப்பதாகவும், மீதமுள்ளவை பற்றிச் சொல்லிக் கொள்ளும்படி எதுவும் இல்லை என்கிறார்கள். எஸ்.எல். ஷெட்டி என்ற பொருளாதார அறிஞர், ''துணி போன்ற அத்தியாவசிய நுகர்பொருட்களைத் தயாரிக்கும் ஆலைகள்; மின் உற்பத்தி, ஏற்றுமதி வர்த்தகம் ஆகியவை இந்த ஆண்டு மந்தமாக நடைபெறுவதாக''க் குறிப்பிடுகிறார். இதனால், ''வாஜ்பாயி அரசின் எட்டு சதவீத வளர்ச்சி என்ற தம்பட்டத்துக்கு மாறாக, இந்த நிதியாண்டில் (2003-04) இந்தியப் பொருளாதார வளர்ச்சி 7 சதவீதத்தைத் தொட்டாலே அதிசயம்தான்'' என்கிறார், ''கிரிசில்'' என்ற பொருளாதார ஆய்வு நிறுவனத்தின் தலைமை பொருளாதார நிபுணர் சுபிர் கோகர்ன்.



சாலையில் பிச்சையெடுக்கும் சிறுமி: 'ஒளிரும் இந்தியாவின்' இருண்ட பகுதி.

வாஜ்பாயி அரசிற்கு விவசாயம் மட்டும் கைதூக்கி விடாமல் போயிருந்தால், இந்த ஆண்டின் வளர்ச்சி கடந்த ஆண்டைவிட கீழே சரிந்து விழுந்திருக்கும். கடந்த பதினைந்து ஆண்டுகளில், கடந்த நிதியாண்டில் (2002-03) தான் இந்தியப் பொருளாதாரத்தின் வளர்ச்சி மிகவும் மோசமாக - நான்கு சதவீதமாக இருந்தது. அந்த மோசமான ஆண்டைக் காட்டிதான், இந்த ஆண்டு பொருளாதாரம் 8 சதவீதம் வளர்ந்து வருவதாக, வாஜ்பாயி அரசு தகிடுதத்தம் பண்ணிக் கொண்டிருக்கிறது.

### வளருகிறது வறுமை

2003-04 ஆண்டின் குறுவைக் கால பயிர் சாகுபடி 10 கோடியே 85 இலட்சம் டன்னாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. வறட்சி பாதித்த 2002-03 ஆண்டின் குறுவை பயிர் சாகுபடியை ஒப்பீடும்பொழுது, இது 20 சதவீத வளர்ச்சியாகும். இந்த வளர்ச்சிதான் 2003-04 நிதியாண்டின் இரண்டாவது கால் பகுதியில் இந்தியப் பொருளாதாரம் 8 சதவீத வளர்ச்சியை அடைவதற்குக் காரணமாக அமைந்தது. எனினும், 2001-02 ஆண்டின் குறுவை விளைச்சலை ஒப்பிடும் பொழுது, 2003-04 ஆண்டின் குறுவை விளைச்சல் பின்தங்கி விட்டது என்பதுதான் உண்மை.

தாராளமயத்தின் பின், விவசாய உற்பத்தி ஒவ்வொரு ஆண்டும் சரிந்து கொண்டே செல்வது ஒரு போக்காகவே மாறிவிட்டது. குறிப்பாக உணவு தானிய உற்பத்தி, 1990-க்குப் பின் ஒவ்வொரு ஆண்டும் சராசரியாக 1.75 சதவீதம் சரிந்து விட்டிருக்கிறது. 1996-97-க்குப் பின் விவசாயத்தில் சொல்லிக் கொள்ளும்படி உற்பத்தி வளர்ச்சியும் கிடையாது; வருமானமும் கிடையாது என முதலாளித்துவ பொருளாதார நிபுணர்களே ஒத்துக் கொள்கின்றனர்.

விவசாய உற்பத்தியில் ஏற்பட்டு வரும் இந்தச் சரிவு, கிராமப்புறங்களில் வேலைவாய்ப்பு வளர்ச்சியே இல்லை என்ற நிலையை உருவாக்கிவிட்டது. தாராளமயத்தின் முன், 1980-களின் இறுதியில், கிராமப்புற வேலை வாய்ப்பு வளர்ச்சி 2.17 சதவீதமாக இருந்தது. இது, 1993-க்குப் பின்,


படிப்பகம்

www.padippakam.com

அடுத்த ஏழு ஆண்டுகளின் 0.18 சதவீதமாகச் சுருங்கிப் போய்விட்டது.

விவசாயம், பாசனம், கிராமப்புற மேம்பாடு ஆகிய துறைகளில், 1986-87 ஆம் ஆண்டில் மைய அரசு செய்த முதலீடு மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 3.14 சதவீதமாகும். இது, 1991-92-ஆம் ஆண்டில் 2.26 சதவீதமாகக் குறைந்து, 2000-01 ஆம் ஆண்டில் 1.72 சதவீதமாகச் சுருங்கிப் போய்விட்டது.

இந்தச்சரிவு, மறுபுறம் கிராமப்புறத்தில் வறுமையையும், பட்டினியையும் அதிகரிக்கச் செய்து வருகிறது. உணவு மற்றும் வேளாண்மைக்கான அமைப்பு (FAO) சமீபத்தில் வெளியிட்டுள்ள அறிக்கையில், ஒருவேளையேனும் வயிறார உணவு கிடைக்காதவர் எண்ணிக்கை இந்தியாவில் 1990-92-இல் 21.45 கோடி; இந்த எண்ணிக்கை 1995-97-இல் 19.47 கோடியாகக் குறைந்தது. ஆனால், 1999-2001-ஆம் ஆண்டுகளில் 21.37 கோடியாக உயர்ந்து விட்டது எனக் குறிப்பிட்டுள்ளது.

புது தில்லியில் இருந்து இயங்கிவரும் உயிர் தொழில்நுட்பம் மற்றும் உணவு பாதுகாப்புக்கான அமைப்பு, "இந்தியாவில் மட்டும் தினந்தோறும் 5,000 குழந்தைகள் சத்தான உணவு கிடைக்காமல், நோய்வாய்ப்பட்டு இறந்து போவதாக"க் குறிப்பிடுகிறது. ஈராக் குழந்தைகளைக் கொன்ற அமெரிக்காவின் பொருளாதாரத் தடை, இந்தியாவில் தாராளமயம் என்ற பெயரில் வேலையைக் காட்டுகிறது.

இந்திய மக்கள் ஒவ்வொருக்கும் ஆண்டொன்றுக்குக் கிடைத்து வந்த உணவு தானியங்களின் சராசரி அளவு 177 கிலோவில் இருந்து 153 கிலோவாகச் சுருங்கி விட்டது. 1942-இல் ஏற்பட்ட வங்கப் பஞ்சத்தின் பொழுது, எந்த அளவு உணவு தானியம் இந்திய மக்களுக்குக் கிடைத்ததோ, அதே அளவு உணவு தானியம் தான் தற்பொழுது கிடைக்கிறது. சுருக்கமாகச் சொன்னால், 30 இலட்சம் பேரை காவு கொண்ட வங்கப் பஞ்சம் போன்றதொரு இன்னொரு பஞ்சம் இந்திய மக்களைத் தாக்கக் கூடும். பஞ்சம் தாக்கினால் அதைத் தாக்குப் பிடிக்கும் அளவிற்கு, இந்திய அரசின் கைவசம் தற்பொழுது உணவு தானியமும் இல்லை. கையிருப்பில் இருந்த உணவு தானியங்களை அந்நிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்து, இந்திய உணவுக் கழகத்தை மொட்டையடித்து விட்டது பா.ஜ.க. கூட்டணி அரசு.

### வெடிக்கக் காத்திருக்கும் அணுகுண்டு

வாஜ்பாயி அரசின் சாதனை குறித்து திட்ட கமிசன் வெளியிட்டுள்ள விளம்பரத்தில், "கடந்த மூன்று ஆண்டுகளில் சராசரியாக ஆண்டுதோறும் 84 இலட்சம் வேலை வாய்ப்புகள் உருவாக்கப் பட்டுள்ளதாக"க் குறிப்பிட்டுள்ளது.

முன்னாள் நிதியமைச்சர் ப. சிதம்பரம் "8 சதவீத பொருளாதார வளர்ச்சி 8 கோடி வேலை வாய்ப்புகளை உருவாக்கியிருக்க வேண்டும்" என்கிறார். ஆனால், நிலைமை எப்படியிருக்கிறது?


ஒரு அரசு வேலைக்கு ஏறத்தாழ 25 பேர் போட்டிபோடுகிறார்கள்.

வேலை வாய்ப்பு அலுவலகத்தில் 4 கோடி பேர் பதிவு பண்ணி விட்டுக் காத்துக் கொண்டிருக்கிறார்கள்.

கடலூரில் இராணுவ வேலைக்கான தேர்வுக்குச் சென்ற இளைஞர்கள் போலீசாரால் அடித்துத் துரத்தப்பட்டார்கள்.

இது ஒருபுறமிருக்க, 1997 தொடங்கி 2001-க்குள் - ஐந்தே ஆண்டுகளில் பொதுத் துறையில் இருந்து மட்டும் ஐந்து இலட்சம் தொழிலாளர்கள் வேலையில் இருந்து துரத்தப்பட்டுள்ளனர்.

தனியார்துறையை எடுத்துக் கொண்டால், டாடா எஃகு நிறுவனத்தில் ஏறத்தாழ 40,000 தொழிலாளர்கள் வேலையிழந்துள்ளனர். லார்சன் அண்ட் ட்யூப்ரோவில் 4.6%, பஜாஜ் ஆட்டோ நிறுவனத்தில் 8.5%, அசோக்லேலண்டு நிறுவனத்தில் 10.5%, மதுரா கோட்ஸில் 30.1 சதவீதத் தொழிலாளர்கள் வேலையில் இருந்து தூக்கி எறியப்பட்டுள்ளனர்.





தமிழக அரசின் சாராயக் கடைகளில் ஊத்திக் கொடுக்கும் வேலைக்கு விண்ணப்பம் கொடுக்கக் காத்திருக்கும் வேலையில்லாத இளைஞர் பட்டாளம் (மேலே); தங்கக் கைகுலுக்கல் திட்டத்தின் மூலம் கர்நாடக அரசின் பொதுத் துறையில் இருந்து நீக்கப்பட்ட ராஜாராம், இப்பொழுது தெருக்களில் கடலை விற்று வாழ்க்கையை நடத்துகிறார்: வேலையில்லா திண்டாட்டத்தின் கோரம்.



படிப்பகம்

பொதுத்துறை, தனியார் துறை, விவசாயம் என எல்லா துறைகளிலும், 1998-க்குப் பிறகு புதிய வேலை வாய்ப்புகள் உருவாவது ஆண்டொன்றுக்கு 0.98 சதவீதமாகச் சுருங்கிவிட்டதாக வாஜ்பாயி அரசே நாடாளுமன்றத்தில் ஒப்புக் கொண்டுள்ளது.

புதிய வேலைவாய்ப்புகள் உருவாவது சுருங்கி வருகிறது; ஏற்கெனவே இருக்கும் வேலைவாய்ப்புகள் கழித்து கட்டப்பட்டு வருகின்றன என்ற நிலையில், வாஜ்பாயி அரசு ஒவ்வொரு ஆண்டும் 84 இலட்சம் வேலை வாய்ப்புகளை உருவாக்கியிருப்பதாக விளம்பரம் செய்வது அண்டப்புளுகாகத்தான் இருக்க முடியும்.

திட்ட கமிசனின் விளம்பரத்தை உண்மை என வைத்துக் கொண்டாலும், இவை அனைத்தும் நிரந்தர வேலைவாய்ப்புகள் அல்ல.

''தில்லி, மும்பையில் ஒவ்வொரு வாரமும் ஒரு புதிய ஓட்டல் திறக்கப்படுவதாகக் கணக்கிடப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு ஓட்டலிலும் 12 பேருக்கு வேலை கிடைக்கிறது. புதிய கார் வாங்குவோரில் 30 சதவீதம் பேர் ஒரு ஓட்டுநரை வேலைக்கு அமர்த்துவதாக மதிப்பிடப்படுகிறது. 2003-04-இல் 8.7 லட்சம் கார்கள் விற்கப்படுவதாகக் கொண்டால், சுமார் 2.6 இலட்சம் புதிய ஓட்டுநர்களுக்கு வேலை கிடைக்கும். தேசிய நெடுஞ்சாலை மேம்பாட்டுத் திட்டத்தில் நாள் ஒன்றுக்கு ஒரு கி.மீ. தொலைவுக்கு 40 பேருக்கு வேலை கிடைக்கும்'' எனப் புதிய வேலை வாட ப்புகள் பற்றி பட்டியல் போடுகிறது, இந்தியா டுடே.

''கடந்த சில வருடங்களில் உற்பத்தித் துறையில் இழந்த வேலைகளுக்கு நிகராக சாலைகள், வீடுகள் கட்டுமானத்தில் வேலைகள் கிடைக்கின்றன'' என்கிறார், சுபிர் கோகர்ன் என்ற பொருளாதார நிபுணர்.



அடுக்குமாடிக் கட்டிடங்களும், குடியிருப்புகளும் பெருகிக் கொண்டே போனாலும், தொழிலாளிக்கு குந்தக் குடிசை கூடக் கிடையாது: விசாகப்பட்டினம் நகரில் நடைபாதையில் படுத்துறங்கும் தொழிலாளர்கள்.

வாஜ்பாயி அரசு உருவாக்கியதாகக் கூறும் புதிய வேலைகள் இவைதான் என்றால், அவரின் ''சாதனை'' இந்தியாவைத் தினக் கூலிகளின் நாடாக மாற்றி ிருக்கிறார் என்பதுதான்.

தாராளமயத்தின் புண்ணியத்தால் மிக வேகமாக வளருவதாகக் கூறப்படும் கணினி மென்பொருள் உற்பத்தி; தொலைபேசித் துறை, கால் சென்டர் உள்ளிட்ட சேவைத் துறைகளில் 2003 ஆண்டில் கிட்டத்தட்ட 2.5 இலட்சம் வேலை வாய்ப்புகள் உருவாக்கப் பட்டன. ஆனால், ஒவ்வொரு ஆண்டும் வேலை தேடும் பட்டாளத்தில் பத்து இலட்சத்துக்கும் அதிகமான இளைஞர்கள் சேருவதைக் கணக்கிட்டால் சேவைத் துறை வேலை வாய்ப்புகூட யானைப் பசிக்கு சோளப் பொறி போன்றதாகத் தான் உள்ளது.

''என்னதான் புதிது புதிதாக வேலை வாய்ப்புகள் உருவாக்கப்பட்டாலும், தற்பொழுது வேலை வாய்ப்பு அலுவலகங்களில் பதிவு பண்ணிவிட்டுக் காத்திருப்போரின் எண்ணிக்கை - 4.1 கோடியில் இருந்து 2012-இல் ஏழு கோடியாக உயர்ந்து விடும். இது சமூகக் கொந்தளிப்புகளையும், கலகங்களையும் உருவாக்கும்'' என முதலாளித்துவ நிபுணர்களே அஞ்சிக் கொண்டுள்ளனர்.

### அந்நியச் செலாவணி கையிருப்பு: பயனில்லாத சுமை

இதற்கு முன்பிருந்த ஆட்சிகளின் பொழுதெல்லாம் இல்லாத அளவு, வாஜ்பாயி ஆட்சியின் கீழ்தான் அந்நியச் செலாவணி கையிருப்பு 10,300 கோடி அமெரிக்க டாலராகவும்; பங்குச் சந்தை குறியீடு 6,000 புள்ளிகளாகவும் உயர்ந்திருக்கிறது. எனினும், இந்தச் 'சாதனை'யால் யாருக்கு என்ன பயன்? அந்நியச் செலாவணி கையிருப்பு கிடுகிடுவென வளரும் அதே சமயத்தில் தான், வறுமையும், பட்டினியும் வளர்ந்து கொண்டே செல்லுகின்றன. ஒருபுறம் பங்குச் சந்தை வியாபாரம் ஊதிப் பெருக்கிறது என்றால், இன்னொருபுறம் வேலையில்லாப் பட்டாளத்தின் எண்ணிக்கையும் எகிறிக் கொண்டே போகிறது. ஒய்யாரக் கொண்டையின் உள்ளே ஈறும் பேனும் என்பதுதான் இந்தச் 'சாதனை'யின் இலட்சணம்.

அரசின் வசமுள்ள அந்நியச் செலாவணி கையிருப்பில் 3,130 கோடி அமெரிக்க டாலர் வெளிநாட்டில் வாழும் இந்தியர்களுக்குச் சொந்தமா



படிப்பகம்

www.padippakam.com

# முதலாளிக்கு வெண்ணெய் மக்களுக்குச் சுண்ணாம்பு

**தே**சிய ஜனநாயகக் கூட்டணி அரசு, தனது இடைக்கால வரவு - செலவு அறிக்கையை பிப்.4-ந் தேதி நாடாளுமன்றத்தில் அறிவித்தது. எனினும், இதற்கு முன்பாகவே தரகு முதலாளிகளுக்கும், பன்னாட்டு நிறுவனங்களுக்கும் பல்வேறுவிதமான சலுகைகளை அளிக்கும் திட்டங்களை நிதியமைச்சர் ஜஸ்வந்த் சிங் அறிவித்துவிட்டார்.

கச்சா எண்ணெய் எடுப்பது; அதைச் சுத்திகரிக்கும் ஆலைகளை நிறுவுவது; பெட்ரோல், டீசல் உள்ளிட்ட பெட்ரோலியப் பொருட்களை விற்கும் நிலையங்களை (பங்க்) அமைப்பது ஆகிய மூன்று தொழில்களிலும் இனி அந்நிய நிறுவனங்கள் 100 சதவீத முதலீடு செய்யலாம்.

இந்தியாவிலுள்ள தனியார் வங்கிகளில், அந்நிய நிறுவனங்கள் 49 சதவீதம் அளவிற்குத்தான் முதலீடு செய்ய முடியும் என்ற கட்டுப்பாடு நீக்கப்பட்டு, 74 சதவீதம் வரை முதலீடு செய்ய அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேலும், பன்னாட்டு வங்கிகள், தங்களுக்குச் சொந்தமான துணை நிதி நிறுவனங்களை இந்தியாவில் திறந்து கொள்ளவும் அனுமதிக்கப்பட்டுள்ளன.

இந்தியாவைச் சேர்ந்த தொழில் நிறுவனங்கள், அந்நிய நாடுகளில் இருந்து 50 கோடி அமெரிக்க டாலர் வரை கடன் மூலதனம் திரட்ட அனுமதிக்கப்பட்டுள்ளன.

அந்நிய நாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படும் நவீன சொகுசு கார்கள், கணினி மற்றும் மின் உபகரணங்கள், செல்ஃபோன்கள் உள்ளிட்ட பல்வேறு விதமான பொருட்களின் மீது விதிக்கப்பட்டு வந்த சுங்க வரியும், ஆயத்தீர்வையும் 5 முதல் 20 சதவீதம் வரை குறைக்கப்பட்டுள்ளது. இச்சலுகையால் அரசுக்கு ஏற்படவுள்ள வரி வருமான இழப்பு ஏறத்தாழ 9,000 கோடி ரூபாய்.

இந்தியாவில் இருந்து அந்நிய நாடுகளுக்குச் செல்லும் விமானப் பயணிகளின் மீது விதிக்கப்பட்டு வந்த பயண வரி முழுவதுமாக ரத்து செய்யப்பட்டதால் ஏற்படப் போகும் வருமான இழப்பு 1,115 கோடி ரூபாய்.

கடந்த இரண்டே மாதங்களில் தரகு முதலாளிகளுக்கும், மேட்டுக்குடியினருக்கும் 11,000 கோடி ரூபாய் அளவிற்கு வரிச் சலுகைகளை அறிவித்துள்ள ஜஸ்வந்த் சிங், இன்னொரு புறம் பட்ஜெட் பற்றாக்குறையைக் காட்டி மண்ணெண்ணெய்க்கும், சமையல் எரிவாயுவுக்கும் கொடுத்து வந்த மானியத்தைக் கணிசமாகக் குறைத்துவிட்டார். இந்து மதவெறிக் கும்பலுக்கு இந்திய மக்களின் மீது (''இந்து''க்களின் மீது என்றும் சொல்லலாம்) இருக்கும் கரிசனம் இதுதான்.

விவசாயிகள் மற்றும் சிறு தொழில் நிறுவனங்களின் மேம்பாட்டுக்காக 50,000 கோடி ரூபாய் பெறுமான திட்டமொன்றை அறிவித்திருப்பதாகத் தம்பட்டம் அடித்துக் கொள்கிறது, தே.ஜ.கூ. அரசு. இது, ஓட்டுக்காக அறிவிக்கப்பட்டுள்ள காகிதத் திட்டம்தான். ஏனென்றால், இந்த இடைக்கால பட்ஜெட்டில் இந்த 'மாபெரும் திட்டத்திற்காக' ஒதுக்கப்பட்ட தொகை வெறும் 2,200 கோடி ரூபாய் தான். மேலும், விவசாயிகளை ஏமாற்றி ஓட்டுக் கறப்பதற்காகவே, விவசாயக் கடனுக்கான வட்டி வீதத்தைக் குறைக்கும்படி இந்திய வங்கிகள் சங்கத்திற்கு அறிவுறுத்தியுள்ளோம் என வாய்ச்சவடாலும் அடித்துள்ளது, இந்து மதவெறிக் கும்பல்.

காங்கிரசு தொடங்கி கம்யூனிஸ்டுகள் வரை அனைத்து எதிர்க் கட்சிகளும் இந்தச் சலுகைகளையும், பட்ஜெட்டையும் கடுமையான விமர்சித்துள்ளன. நாடாளுமன்றம் கூடுவதற்கு முன்பாகவே, பன்னாட்டு நிறுவனங்களுக்குப் பல சலுகைகளை வாரி வழங்கி விட்டதாகவும் அவை புலம்புகின்றன.

இந்த எதிர்க்கட்சிகளிடம் தனியார்மயம் - தாராளமயத்திற்கு மாற்றான பொருளாதாரக் கொள்கைகள் கிடையாது என்பது ஊரறிந்த உண்மை. ''மாற்று''க் கொள்கையை விட்டு விடுவோம். ''நாங்கள் ஆட்சியைப் பிடித்தால், நாடாளுமன்றத்திற்குத் தெரியாமல் அறிவிக்கப்பட்ட இச்சலுகைகளை ரத்து செய்வோம்'' எனத் தேர்தல் வாக்குறுதி கொடுக்கும் துணிவாவது இவைகளிடம் உண்டா? ●

னது; 1,920 கோடி அமெரிக்க டாலர், இந்தியப் பங்குச் சந்தையில் நுழைந்துள்ள அந்நிய முதலீட்டு நிறுவனங்களுக்குச் சொந்தமானது. இந்த ஊரானுக்குச் சொந்தமான பணத்தைக் கழித்து விட்டால், வாஜ்பாயின் சாதனை காற்று பிடுங்கப்பட்ட பலூனைப் போலாகி விடும்.

நான்கைந்து ஆண்டுகளுக்கு முன்பு வரை, பங்குச் சந்தையில் முதலீடு செய்திருந்த சிறு முதலீட்டாளர்களின் எண்ணிக்கை 2.3 கோடியாக இருந்தது. அந்நிய முதலீட்டு நிறுவனங்களின் படையெடுப்பின் காரணமாக, அந்த எண்ணிக்கை 2001-இல் 1.9 கோடியாகச் சரிந்துவிட்டது. இலாபத்தோடு இயங்கி வரும் இந்தியத் தொழில் நிறுவனங்களின் 14 சதவீதப் பங்குகள் இன்று அந்நிய முதலீட்டு நிறுவனங்களின் கைகளில் உள்ளன. அந்நிய முதலீட்டு நிறுவனங்கள் நினைத்தால், இந்தியப் பங்குச் சந்தையை வீங்க வைக்கவும் முடியும்; குப்புறப் பிடித்துத் தள்ளவும் முடியும் என்ற அபாயகரமான நிலை உருவாகி விட்டது. பங்குச் சந்தை குப்புற விழுந்தால் 50 சதவீத அந்நியச் செலாவணிக் கையிருப்பு வந்த சுவடே தெரியாமல் மறைந்து போகும். பிறகு, வாஜ்பாயி அரசு சாதனை எனப்பீற்றிக் கொள்ள எதுவுமே மிஞ்சி இருக்காது.

●●●

21-ஆம் நூற்றாண்டு பிறந்த பொழுது, ''வறுமையை ஒழிப்பது; சிசு மரணத்தைத் தடுப்பது; அனைவருக்கும் வீடு, சுகாதாரம், கல்வி - இவைதான் எங்களின் இந்த நூற்றாண்டு குறிக்கோள்'' என வாஜ்பாயி சவடால் அடித்திருந்தார். ஆனால், தற்பொழுது அவர் விளம்பரப்படுத்திவரும் சாதனையில், இந்தக் குறிக்கோள்களில் ஒன்றுகூட இடம் பிடிக்கவில்லை. கல்வியையும், சுகாதாரத்தையும், வீட்டு வசதியையும் விட காரும், செல்ஃபோனும், வழுக்கிக் கொண்டே போகும் தார்ச்சாலையும் தான் முக்கியம் என்று பணக்கொழுப்பெடுத்தவர்கள் மட்டும்தான் பீற்றிக் கொள்ள முடியும்.

வாஜ்பாயி மறந்துபோன இந்தக் குறிக்கோள்களைச் சுட்டிக் காட்டும் உலக வங்கியின் இந்தியக் கிராமப்புற இயக்குநர் மைக்கேல் கார்டர், ''இந்தியா ஒளிர்வதாக'' ஏற்றுக் கொள்ள முடியாது என்கிறார். பெரும்பாலான முதலாளித்துவ பொருளாதார நிபுணர்கள்கூட, வாஜ்பாயி அரசின் சாதனையை, ''வேலைவாய்ப்பை உருவாக்காத வளர்ச்சி'' என நையாண்டி செய்கிறார்கள். தாராளமயத்தை ஆதரிப்பவர்களே இந்தச் சாதனைகளை ஏற்றுக் கொள்ள மறுக்கும்பொழுது, விளம்பரங்களைப் பார்த்து நாம் ஏன் மயங்க வேண்டும்? மின்னுவதெல்லாம் பொன்னல்லவே!

● ரஹீம்



படிப்பகம்

2-ஆம் பக்கத் தொடர்ச்சி

தாழ்த்தப்பட்டோரை அடியாள்படையாகப் பயன்படுத்திக் கொண்டன. இதற்கு, குஜராத் தலித்துகளிடம் அம்பேத்கரிய சிந்தனை / உணர்வு இல்லை எனக் காரணம் கூறப்பட்டது. மகாராஷ்டிராவிலேயே இது (இந்துத்துவா - தலித் இயக்கங்களின் கூட்டு) நடக்கிறது என்றால், இதை எப்படி புரிந்து கொள்வது?

தலித் இயக்கங்களின் உச்சகட்ட வளர்ச்சியாக பகுஜன் சமாஜ் கட்சியை பார்க்கலாம். முதலமைச்சர் ஆகிவிட வேண்டும் / அமைச்சர் பதவியில் அமர வேண்டும் என்பதைத் தவிர இவர்களுக்கு வேறெந்தத் திட்டமும் கிடையாது. எப்படியாவது அரசியல் அதிகாரம் வந்துவிட வேண்டும்; அரசியல் விடுதலையை அடைந்து விடலாம் என இவர்கள் நம்பச் சொல்கிறார்கள்.



கருத்தரங்கிற்கு வந்திருந்த பார்வையாளர்களில் ஒரு பகுதி.

சதவீதக் கணக்கில் அதிகாரம் என்று பேசுபவர்கள் நகர்ப்புற புள்ளி விவரங்களைக் காட்டுகிறார்கள். ஆனால், கிராமப்புறங்களில் வாழும் தலித்துகள் பழைய நிலையிலேயே தான் உள்ளனர். இவர்களைப் பற்றி பேசுவதுதான் தலித் விடுதலை.

இந்தியாவிற்கு கெடுதியானது, தலித்துகளுக்கு நல்லது என்று தலித் இயக்கங்கள் கருதுகின்றன. பிரிட்டிஷ் ஆட்சி இந்தியாவிற்கு தீமையானது; ஆனால், அந்த ஆட்சியில் தலித்துகளுக்கு சில நன்மைகள் கிடைத்தன. அதைப்போல உலகமயத்தையும் பார்க்கிறார்கள். அமெரிக்க கண்டம் ஐரோப்பியர்களால் காலனியாக்கப்பட்டபொழுது, அக்கண்டத்தின் பூர்வ குடிகளான செவ்விந்தியர்கள் முற்றிலுமாக அழித்தொழிக்கப்பட்டார்கள். அதைப்போலத்தான் உலகமயத்தையும் நான் பார்க்கிறேன்.

குஜராத்தில் இந்துத்துவா அமைப்புகள் எங்களைச் சகோதரர்களாக ஏற்றுக் கொள்ளத் தயாராக இருக்கும்பொழுது, அவர்களுடன் நாங்கள் கூட்டு வைத்துக் கொள்வதில் என்ன தவறு என்று தலித்துகள் கூறுவதாகக் கேள்விப்பட்டேன்.

இந்துத்துவா என்பது ஒரு கவர்ச்சிகரமான வார்த்தை. இந்துத்துவா, இந்துயிசம் என்று எதனைச் சொல்கிறார்கள்? இதன் சாரம் என்ன?

பிராமணிய சாதிக் கட்டுமானமும், அதன் இறுக்கமும் தான் இதன் அடிப்படை. இதற்குப் பாதகம் ஏற்படாமல் நீங்கள் எதைச் செய்தாலும், அதற்கு இந்துயிசத்தில் இருந்து ஆதரவு கிடைக்கும்.

இந்துத்துவா, இந்துயிசத்தில் இருந்து வேறுபட்டது என்று கூறுகிறார்கள். இதில் சாதி கிடையாது எனப் பேசுகிறார்கள். ஆனால், இவர்கள் வாயில் இருந்து சமத்துவம் என்ற வார்த்தையை வரவழைக்க முடியாது.

படைப்பிலேயே மனிதர்களிடம் ஏற்றத்தாழ்வு உண்டு; மனிதர்கள் சமமானவர்கள் அல்ல என்பதுதான் இந்து மதத்தின் அடிப்படைக் கொள்கை.

நவீன தாராளமயமும் மனிதர்களிடம் ஏற்றத்தாழ்வு உண்டு எனக் கூறுகிறது. இதனை சித்தாந்த ரீதியாகவும் ஏற்றுக் கொள்கிறது. இந்த இடத்தில்தான் இந்து மதமும், தாராளமயமும் இயற்கையாக ஒன்றுபடுகின்றன.

அம்பேத்கர் ஒருபொழுதும் கம்யூனிஸ்டுகளுக்கு எதிராக நடந்து கொண்டதில்லை. ஆனால், தற்போதைய தலித் இயக்கத் தலைவர்கள் தங்களின் சுயநலனுக்காக அம்பேத்கரை கம்யூனிஸ்டுகளுக்கு எதிரானவராகக் காட்டுகிறார்கள். இதற்காக அவர்களால் விசித்திரமான தர்க்கங்கள் முன் வைக்கப்படுகின்றன.

அம்பேத்கர், மார்க்சிஸ்டுகளின் பார்ப்பனியச் சிந்தனைக்கு எதிராகத்தான் போராடினார் என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

இந்தியாவின் ஆசிய சொத்துடைமை வடிவம் ஐரோப்பாவில் இருந்து வேறுபட்டது என்பதை மார்க்ஸ் ஒப்புக் கொண்டுள்ளார். வர்க்கத்தை, பொருளாதாரத்தில்தான் வரையறுக்க வேண்டும் என மார்க்ஸ் சொல்லவில்லை. இந்தியாவில் சாதி, வர்க்கத்தினுள் பதிந்து கிடக்கிறது. எனவே, சாதிக்கு எதிரான போராட்டம், வர்க்கப் போராட்டத்தின் ஒரு பகுதியாகும். சாதி, உழைக்கும் வர்க்கத்தைப் பிளவுபடுத்துகிறது. அம்பேத்கர் இதனைப் புரிந்து கொள்வதில் தவறிழைத்தார்.

தலித் இயக்கங்கள் இதைக் கற்றுக் கொள்ள வேண்டும். இடதுசாரி இயக்கங்கள் படிப்பினை பெற வேண்டும். தலித்துகள் பங்கேற்காமல் விடுதலை இயக்கங்கள் இல்லை. தலித் விடுதலை, மக்களின் பங்கேற்பு இல்லாமல் சாத்தியம் இல்லை.

தலித் மீதான அடக்குமுறை நிலவுவதால், தலித் இயக்கம் அவசியம். தலித்துகளைச் சிறுநீர் குடிக்க வைப்பது, தலித் பெண்களை நிர்வாணப்படுத்தி ஊர்வலம் விடுவது போன்ற அடக்குமுறைகளைச் செய்பவர்களை இரண்டு துண்டாக வெட்டி போடலாம். எனவே, தலித் இயக்கங்கள் போர்க் குணமிக்கதாக இருப்பதோடு, தலித் என்ற அடையாளம் பற்றிய கோட்பாடு பிரச்சினையில் தெளிவு பெற வேண்டும். இந்த இயக்கம் வெறும் சாதி சான்றிதழ் பெற்ற இயக்கமாக இருக்கக் கூடாது.

இடதுசாரி இயக்கங்கள், தலித் இயக்கத்தை வர்க்கப் போராட்டத்தின் ஒரு பகுதி எனப் புரிந்து கொள்ள வேண்டும்; வர்க்கப் போராட்டம், ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டத்தின் ஒரு பகுதியும் ஆகும்.''

- ஆனந்த் தெல்தும்ப்டே தனது உரையை முடித்தபின், கருத்தரங்கின் நிறைவாக, பார்வையாளர்கள் இந்த உரை தொடர்பாகவும், இப்பொருள் தொடர்பாகவும் எழுப்பிய கேள்விகளுக்கும் பதில் அளித்தார். இக்கருத்தரங்கம், தலித் விடுதலை குறித்த ஒருங்கிணைந்த கண்ணோட்டத்தை அளித்து, புதிய நம்பிக்கையைப் பார்வையாளர்களிடம் விதைத்துள்ளது.

Owned and Published by R. SHANMUGA RAJ, from Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai - 600 024 and Printed by him at EZHIL PRINTS, Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai - 600 024. Editor: R. SHANMUGA RAJ.

PUTHIYA JANANAYAGAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWS PAPERS FOR INDIA UNDER NO.42548/85 Regn.No.TN/PMG(CCR)/621/03-05

www.padippakam.com

# இதுதான் இன்றைய இந்தியா



இந்தப் படத்தில் உள்ள பாக். இராணுவ அதிகாரி, இந்திய கிரிக்கெட் சங்கத்தைச் சேர்ந்த அதிகாரிகளிடம், பாகிஸ்தானுக்கு வரவுள்ள இந்திய கிரிக்கெட் வீரர்களுக்குப் பாதுகாப்பு கொடுக்க என்னென்ன ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்பதை விளக்குகிறார். முசுலீம் தீவிரவாத அமைப்புகள் பகிரங்கமாகச் செயல்பட்டு வரும் பாகிஸ்தானுக்கு இந்திய அணி செல்லலாமா, கூடாதா என்ற வாத பிரதிவாதங்கள் கிரிக்கெட் போட்டியைக் காட்டிலும் விறுவிறுப்பாக தற்பொழுது இந்தியாவில் நடந்து வருகின்றன.

இந்திய அணி பாகிஸ்தானுக்குப் போகக் கூடாது என வாதிடுபவர்கள், பாக். அதிபர் முஷாரஃப் மீதே முசுலீம் தீவிரவாதிகள் தாக்குதல் நடத்திய சம்பவத்தை எடுத்துப் போட்டுப் பீதியூட்டுகிறார்கள். இந்திய அணி பாக்.கிற்குப் போகலாம் எனக் கூறுபவர்கள், இந்தியப் பிரதமர் வாஜ்பாயி சமீபத்தில் தெற்காசிய நாடுகளின் (சார்க்) உச்சி மாநாட்டிற்காக பாக். சென்று பத்திரமாகத் திரும்பியதை எடுத்துக் காட்டி, எதிரிகளின் மூக்கை உடைக்கிறார்கள். ''விளையாட்டில் அரசியலைக் கலக்கக் கூடாது'' எனச் சில தூய கிரிக்கெட் ரசிகர்கள் இவர்களுக்குப் போதனை செய்கிறார்கள்.

''இந்தியா - பாக். இடையே நடைபெறும் கிரிக்கெட் போட்டிகளில் அரசியல் கலந்து விட்டதாக அங்கலாய்த்துக் கொள்ளும் இவர்களுக்கு, உள்ளூரில் நடைபெறும் கிரிக்கெட் போட்டிகளில் மேல்சாதி ஆதிக்க வெறி தலைவிரித்தாடும் உண்மை தெரியுமா?



இதோ இந்தப் படத்தில் சில தாழ்த்தப்பட்ட பெண்கள் மறைக்க முடியாத துக்கத்தோடு ஒரு கிரிக்கெட் அணியின் படத்தைக் கையில் எடுத்து வைத்திருக்கிறார்களே, அந்த கிரிக்கெட் அணியில் விளையாடி வந்த முனிஷ், விகாஸ் என்ற இரு திறமையான இளம் கிரிக்கெட் வீரர்கள் இன்று உயிருடன் இல்லை.

உ.பி. மாநிலத்தில் சந்தாகர் என்ற கிராமத்தில் இருந்த கிரிக்கெட் அணி, தாழ்த்தப்பட்ட இளைஞர்களை வீரர்களாகக் கொண்ட அணி. இந்த ''தாழ்த்தப்பட்ட கிரிக்கெட் அணி'' பக்கத்து கிராமமான ஹசன்புரைச் சேர்ந்த மேல்சாதி வீரர்களைக் கொண்ட கிரிக்கெட் அணியை, தொடர்ந்து மூன்று ஆட்டங்களில் தோற்கடித்து, ஒவ்வொரு முறையும் பரிசுப் பணமான ரூ. 300-ஐக் கைப்பற்றிக் கொண்டது.

இந்தத் தோல்வியை, தங்களின் சாதி ஆதிக்கத்திற்குக் கிடைத்த தோல்வியாகக் கருதிக் கொண்ட ஹசன்புரைச் சேர்ந்த ராஜபுதன சாதி வெறியர்கள், சந்தாகரின் கிரிக்கெட் அணியில் மிகத் திறமையாக விளையாடி வந்த முனிஷ், விகாஸ் என்ற இரு இளைஞர்களின் குரல்வளையை உடைத்து, மிகக் கொடூரமான முறையில் கொன்று விட்டனர். இந்த மேல்சாதி பயங்கரவாதத்தின் காரணமாக இன்று சந்தாகரின் கிரிக்கெட் அணியும் கலைக்கப்பட்டு விட்டது.

இந்திய அணியின் பாதுகாப்பு குறித்து நடைபெறும் வாதப் பிரதிவாதங்கள்; கருத்துக் கணிப்புகள் எனப் பத்திரிகைகளில் பக்கம் பக்கமாகப் பொங்கி வழியும் அக்கறை ஒருபுறம்; கிரிக்கெட் போட்டியில் அடைந்த வெற்றிக்காக, மேல்சாதி வெறியர்களால் கொல்லப்பட்ட இரண்டு தாழ்த்தப்பட்ட வீரர்களின் பரிதாபக் கதையை விரிவாக வெளியிடாமல் மூடி மறைக்கும் இருட்டடிப்பு மறுபுறம். முசுலீம் தீவிரவாதிகளிடமிருந்து இந்திய கிரிக்கெட் அணியைப் பாதுகாப்பது அரசின் கடமையென்றால், மேல்சாதி வெறியர்களிடமிருந்து சந்தாகர் கிரிக்கெட் அணியைப் பாதுகாப்பது யாருடைய கடமை?

●